பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 03, ஞாயிற்றுக்கிழமை 16.04.2017 | கதிர் 161

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

★ காணாமாற்போனோர் விவகாரம் ★ அரசியல் கைதிகள் விடுதலை ★ வடக்கு காணிகள் விடுவிப்பு

# பாதுகாப்பு உயர்பீடத்துடன் நாளை கூட்டமைப்பு நேருக்கு நேர் பேச்சு!





## அதற்கு முன்னாயத்தமாக ஜனாதிபதியுடன் சம்பந்தன் - சுமந்திரன் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஏப். 16

தமிழ் மக்களின் தகிக்கும் பிரச்சினைகளாகவிருக்கும் காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, வடக்கில் காணிகள் விடுவிப்பு ஆகியவை குறித்து முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டம் - ஒழுங்கு அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டம் - ஒழுங்கு அமைச்சர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் உள்ளிட்ட பாதுகாப்பு உயர் பீடத்துடன் தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நாளை திங்கட்கிழமை நேருக்கு நேர் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

அதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் குறித்துக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், சுமந்திரன் எம்.பி. ஆகியோர் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதியின் கொழும்பு இல்லத்தில் சுமார் முப்பது நிமிட நேரம் நீடித்தது.

பக்கம் 22 »

## படையினரின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை!

கொழும்பு, ஏப்.16

அங்கவீனமுற்றஇராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு அரச பாடசாலைகளில் முன்னுரிமை வழங்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சுற்று நிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பாடசாலைகளில் தரம் 01 இற்குப் பிள்ளைகளைச் சேர்க்கும்போதுமேற்படிமுன்னுரிமை

பக்கம் 22 »

அளப்ப அருணாசலம்




# ஒற்றையாட்சிக்குள் தீர்வு கிடையாது!



## சுமந்திரன் மீண்டும் திட்டவட்டம் சமஷ்டியை விடோம் என்கிறார்




கொழும்பு, ஏப். 16

"ஒற்றையாட்சி முறைமையின் கீழ் எந்தத் தீர்வுக்கும் இணங்க மாட்டோம். நாம் இணங்கக்கூடிய தீர்வில் 'சமஷ்டி' என்ற திட்டவட்டமான சொற்பதம் இல்லாமல் இருக்கலாம். ஆனால்,

பக்கம் 22 »

# குப்பைமேடு சரிந்த அனர்த்தத்தில் 20 பேர் உயிரிழப்பு; வீடுகள் சேதம்

## கொலன்னாவ மீதொட்டமுல்லவில் துயரம்



கொழும்பு, ஏப்.16

கொழும்பின் புறப்பகுதியான கொலன்னாவ மீதொட்டமுல்லவில் புத்தாண்டு தினமானநேற்றுமுன்தினம்குப்பைமேடு சரிந்த அனர்த்தத்தில் 20 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 40 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள்கொட்டப்படும்மீதொட்டமுல்லவில் உள்ள சுமார் 300 அடி உயரமான குப்பை மேட்டின் உச்சியில் நேற்று முன்தினம் பிற்பகல்வேளையில்தீவிபத்து ஏற்பட்டது.

தமிழ் - சிங்களபுத்தாண்டை

பக்கம் 22 »

## போராடும் வேலையற்ற பட்டதாரிகளுடன் இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் சந்திப்பு



யாழ்.மாவட்டத்திற்கு நேற்று வருகைதந்த இலங்கைச் சுதந்திரப் பட்டதாரிகள்சங்கத்தின் செயலாளர் மனோல பெரேராயாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்

பக்கம் 22 »

# தமிழ் மக்களுக்காக பதவி விலகத் தயார்!

## தேவை ஏற்படின் அதைச் செய்வோம் என்கிறார் மாவை சேனாதிராசா



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுமாயின் அதைச்

பக்கம் 22 »

# இலங்கை - ஜப்பானிய இராணுவத்தினர் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்குத் திட்டம்



கொழும்பு, ஏப்.16

இந்தியப் பெருங்கடலில் அமைதியைப் பாதுகாப்பது என்ற பொதுவான தளத்தின் கீழ், இலங்கை ஆயுதப் படைகளுக்கும், ஜப்பானிய தற்பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த புதன்கிழமை ரோக்கியோவில் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ரொமோமி இனாடாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே, இந்தியப் பெருங்கடலில் அமைதியைப் பாதுகாக்கும் நோக்கில் இரண்டு நாடுகளின் படைகளும் இணைந்து செயற்படுவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானுக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் போது, இந்த விவகாரம் தொடர்பாக, மேலதிக பேச்சு நடத்த வேண்டும் என்று ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சரிடம் இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

புராதன காலத்தில் இலங்கையின் பொருளாதார செழிப்பு, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டில் தான் தங்கியிருந்தது.

இந்தியப் பெருங்கடலில் அமைதியை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு இரண்டு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பண்டிகைக்கால விபத்தில் வீழ்ச்சி!

பண்டிகைக் காலத்தில் விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு தேசிய வைத்தியசாலை இது பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் கொழும்பு விபத்து சிகிச்சைப் பிரிவில் 185 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இந்த ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இளைஞர்களுக்கு 50 வீத வாய்ப்பு தேர்தல்களில் வழங்கப்பட வேண்டும்

### சு.க. இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.16

எதிர்வரும் தேர்தல்களின் போது இளைஞர்களுக்கு 50 வீத வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்:-

கடந்த 1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கிராம சபைகள் சட்டத்தின் போது தேர்தல்களில் இளைஞர்களுக்கு 40 வீத வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதன் காரணமாக ஏராளமான புதியவர்கள் அரசியலுக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

எனினும், தற்போது பெண்களுக்கு 25 வீத வாய்ப்பு ஒதுக்குவதற்கான சட்ட மூலத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு குறித்து யாரும்



அக்கறைப்படுவதாக இல்லை.

எனவே, எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் இளைஞர்களுக்கு 50 வீத வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி சார்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவித்தார். (ஐ)

## யாழ். போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு

### பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ். போதனா வைத்தியசாலையில் அனைத்துக் குருதி வகைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புதுவருட காலம் என்பதால் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இதனால் நாட்டில் உள்ள எல்லாக் குருதி வங்கிகளிலும் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

புதுவருடப் பிறப்பு காலத்தில் விபத்துக்கள் அதிகம் நடைபெறும் என்பதாலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை ஆகியவற்றில் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்குக் குருதி தேவை என்பதாலும், குருதியைச் சேமித்துக் களஞ்சியப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனைத்துக் குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குருதிக் கொடையாளர்கள் குருதிக் கொடை வழங்க வேண்டும். நடமாடும் குருதிக் கொடை முகாம்களை ஏற்படுத்த அருகில் உள்ள குருதி வங்கியுடன் தொடர்பு கொள்ள முடியும்.-என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடாளுமன்றில் பெண் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்த நாடு இலங்கையே!

### நாடாளுமன்ற ஒன்றியம் வெளியிட்டுள்ள தரவுகளில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.16

தெற்காசிய நாடாளுமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக இருப்பது இலங்கை நாடாளுமன்றத்திலேயே என்று நாடாளுமன்ற ஒன்றியம் வெளியிட்டுள்ள தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தெற்காசியாவில், நாடாளுமன்றத்தில் அதிகளவு பெண்கள் இடம்பெற்றுள்ள நாடு நேபாளம் ஆகும்.

அதையடுத்து, ஆப்கானிஸ்தான் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும், பங்களாதேஷ் நான்காவது இடத்திலும், இந்தியா ஐந்தாமிடத்திலும், பூட்டான் ஆறாமிடத்திலும், மாலைதீவு ஏழாமிடத்திலும், இலங்கை எட்டாமிடத்திலும் உள்ளன.

அனைத்துலக அளவில், மொத்தம் 190 நாடுகளில் நேபாளம் 48, ஆப்கானிஸ்தான் 54, பாகிஸ்தான் 70, பங்களாதேஷ் 91, இந்தியா 148, பூட்டான் 170, மாலைதீவு 173, சிறிலங்கா 180 ஆவது இடங்களில் உள்ளன என்று நாடாளுமன்ற ஒன்றியம் வெளியிட்டுள்ள அரசியலில் பெண்கள் - 2017 வரைபடம் என்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இலங்கையின் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் பால்நிலை சமத்துவக் கொள்கையை வெளிப்படுத்தியிருந்தாலும், 2015 நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் நிறுத்திய 6 ஆயிரத்து 151 வேட்பாளர்களில், 556 பேர் மாத்திரமே பெண்கள் என்று கூறப்பட்டுள்ளது. இது மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 9 வீதம் மட்டுமேயாகும்.

தற்போது 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் 13 பெண் பிரதிநிதிகள் மாத்திரம் இடம்பெற்றுள்ளனர். இலங்கையில் மாகாண சபைகளில், 4.1 வீதம் மாத்திரமே பெண் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை, பங்களாதேஷில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோர் பெண்களாகவே உள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க நாடான ருவாண்டா, உயர் பதவிகளைப் பெண்கள் வகிக்கும் முன்மாதிரி நாடாக மாறியுள்ளது. ருவாண்டா நாடாளுமன்றத்தில் பெண்களே 60 வீதமாக உள்ளனர். அங்கு நடந்த உள்நாட்டுப் போரில் ஆண்கள் கொல்லப்பட்ட பின்னர், பெண்கள் அரசியலில் ஈடுபடுவது அதிகரித்தது.- என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## சீனாவுக்கு மாதுரு ஓயாவில் 54 ஆயிரத்து 250 ஏக்கர் நிலம்

கொழும்பு, ஏப்.16

மாதுருஓயா பிரதேசத்தில் சீனாவுக்கு 54 ஆயிரத்து 250 ஏக்கர் நிலம் வழங்கப்பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கில் இந்தக் காணிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நேரடித்திட்டங்களாக 43 ஆயிரத்து 250 ஏக்கரில் கரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மாடு வளர்ப்பும் இந்த திட்டத்தின் இலக்கு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நேரடித் தலையீட்டின்கீழ் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பிரதேச மக்கள் இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் 172 விடயங்கள் பற்றி தகவலை கோரியிருந்தனர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 15 பதில்களை மட்டுமே வழங்கியுள்ளது.

அமைச்சு வழங்கிய பதில்களில் அபிவிருத்தித் திட்டம் பற்றிக் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது என்று பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

இதற்கு எதிராக பிரதேச மக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சம்பந்தன் நடவடிக்கை எடுக்கவில்லை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி குற்றச்சாட்டு

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எங்கள் தலைவராக இருக்கின்ற இரா சம்பந்தன் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வவுனியா - ஓமந்தை, வேப்பங் குளத்தில் நேற்று இடம் பெற்ற பெரியம்மா முன்பள்ளித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு முன்பள்ளியைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுகூறினார். அவர்தனது உரையில் மேலும் தெரிவிக்கையில் -


வடக்கிலும், கிழக்கிலும் எங்கள் தாய்மார் தங்கள் பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி 50 நாள்களைக் கடந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல் தங்களது சொந்தக் கிராமத்தில் குடியேற முடியாமல் கேப்பாபிலவு, முள்ளிக்குளம். கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் முடிந்து 8 வருடங்கள் கடந்த நிலையிலும் அவர்கள் பல துன்பங்களை இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் 15, 20 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்களது குடும்பங்களுடன் இணைந்து வாழ முடியாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இது தவிர வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் தாம் பல்கலைக் கழகத்தில் படித்தும் தமக்கு வேலைகிடைக்கவில்லை எனக் கோரி 50 நாள்களைக் கடந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராடுபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது.

இந்த நிலைமைக்கு இன்றைக்கு ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் மட்டுமல்ல அந்த அரசாங்கத்தை கொண்டு வர முக்கிய பங்காளிகளாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிலும் பிரதான பாத்திரத்தை வகிக்கின்ற எதிர்கட்சித் தலைவர், மற்றும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் என எல்லோருக்கும் பெரிய பொறுப்பு இருக்கிறது. - என்றார். (ம-100)

# 'வீரகேசரி'யின் முன்னாள் பிரதம ஆசிரியர் சிவப்பிரகாசம் காலமானார்



'வீரகேசரி' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கந்தசாமி சிவப்பிரகாசம் தனது 82 ஆவது வயதில் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அமெரிக்காவின் வெர்ஜீனியா நகரில் இயற்கை எய்தினார்.

'வீரகேசரி' பத்திரிகையில், கடந்த 1966 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை பிரதம ஆசிரியராக கந்தசாமி சிவப்பிரகாசம் பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகக் கொண்ட சிவப்பிரகாசம், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பட்டதாரி ஆனார். அக்காலகட்டத்தில் பிரதான தமிழ் பத்திரிகைகளாக கொழும்பிலிருந்து வீரகேசரியும், தினகரனும் வெளிவந்துகொண்டிருந்தன. இவர் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவராகவும் செயற்பட்டார்.

சிவப்பிரகாசம் அவர்கள் முதலில் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து பணியாற்றி வந்தார். பின்னர் எஸ்மண்ட் விக்கிரமசிங்க, 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதை அடுத்து 'வீரகேசரி' பத்திரிகையின் உதவிப் பிரதம ஆசிரியராக சிவப்பிரகாசத்தை நியமித்தார்.

அக்காலத்தில் கே.வி.வாஸ் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். சில காலத்தின் பின்னர் வாஸ் ஆசிரியப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும், சிவப்பிரகாசம் பிரதம ஆசிரியர் பதவியைப் பொறுப்பேற்று திறம்பட நடத்தி வந்தார்.

இலங்கையில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளில் முதலாவது பத்திரிகை என்ற சிறப்பையும், புகழையும் பெற்றது. அந்தப் புகழ் இன்று வரை நிலைத்து நிற்கின்றது. (இ)

# குப்பைமேடு சரிந்ததால் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்துக்களை திருட முயற்சி

## 23 பேர் பொலிஸாரால் கைது

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்து அகதிகளாக்கப்பட்டுள்ளவர்களின் சொத்துக்களைத் திருடுவதற்கு முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அந்தப் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளமையால் அவர்களைக் கட்டுப்படுத்தி மக்கள் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு இரவு நேரத்தில் விசேட பொலிஸ் குழுவான்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தமிழ் - சிங்கள புதுவருட தினமான நேற்று முன்தினம் மீதொட்டமுல்லவில் குப்பை மேடு சரிந்து குடியிருப்புக்களுக்கு மேல் வீழ்ந்ததால் 40 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்து குப்பைகளால் மூடப்பட்டதும் 20 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பேராதெனியா பல்கலைக்கழக கல்விச் செயற்பாடு ஆரம்பம்

பேராதெனியா பல்கலைக் கழகத்தில் திடீரெனப் பரவிய வைரஸ் காய்ச்சல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன எனப் பல்கலைக்கழக முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

விடுதிகளில் தங்கிக்கல்விகற்கும் மாணவர்கள் இன்று மாலைக்குள் தங்களது விடுதிகளுக்கு வருகை தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# ஜனாதிபதியின் செயலாளர் வரவில்லை நாங்கள் பெரும் ஏமாற்றமடைந்தோம்

## யாழ். வேலையற்ற பட்டதாரிகள் கவலை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.16

"ஜனாதிபதியின் செயலாளர் வந்து எங்களைச் சந்தித்து உறுதிமொழி தருவார் என எங்களுக்குக் கூறப்பட்ட நிலையில், இலங்கைச் சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளரே எங்களைச் சந்தித்திருக்கின்றார். இதனால் நாம் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றோம்."

- இவ்வாறு, யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நேற்று 48 ஆவது நாளாகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

எங்கள் அனைவருக்கும் அரசு நியமனம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் நாம் சளைக்காமல் 48 நாள்களாகப் போராடி வருகின்றோம். இந்நிலையில், நேற்று இலங்கைச் சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் வந்து எங்களைச் சந்தித்திருக்கின்றார்.

இலங்கை சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்திற்கும், வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். - என்றனர்.

48 நாள்கள் நாம் போராட்டம் நடத்தி வரும் நிலையில், இன்று, எமது அறிக்கையைப் பெற்று அதை ஜனாதிபதிக்கு கையளிப்பதற்காகவே நீங்கள் வந்திருக்கிறீர்கள் எனக் கூறுகின்றீர்கள். இது எமக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்துகின்றது என, சுந்திரப் பட்டதாரிகளைப் பார்த்து வடக்குப் பட்டதாரிகள் கூறினர். (ம)

## ஏப்.26 தந்தை செல்வா நினைவு நாள்:

# அரசமைப்புக் குழுத் தலைவர் ஜயம்பதி நினைவுரை ஆற்றுவார்

(எஸ்.நிதர்ஷன்)

அரசமைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றைமேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொள்ளும் ஜயம்பதி விக்கிரமரட்ண 'எஸ்.ஜே.ஜி. செல்வநாயகமும் அதிகாரப் பகிர்வு முயற்சிகளும்' எனும் தொனிப்பொருளில் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், பொது நூலகத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள மேற்படி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மேலும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயங்கரவாதிகளாக்கப்படும் தமிழ் ஊடகவியலாளர்கள்

நல்லிணக்க விவகாரத்தில் மிக முக்கியமானவை ஊடகங்கள். ஆனால், ஊடக விடயத்திலேயே நல்லாட்சி அரசின் நல்லிணக்க நடவடிக்கைகள் நேர்மையானவையாக இல்லை என்பதை இப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியாகிவிட்டது.

வடக்கு, கிழக்குத் தமிழ் ஊடகவியலாளர்கள் விடயங்களில் ஒரு மாதிரியும், தென்னிலங்கைச் சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் தொடர்பில் வேறு மாதிரியுமே செயற்படுவோம் என்பதை இந்த நல்லாட்சி அரசும் அதன் தலைவர்களும் வெளிப் படையாகவே வெளிக்காட்டி வரும் நிலைமை தொடர்ந்து நீடிக் கின்றது.

'ஒரு கண்ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணாம்பு' - என்ற இந்தப் போக்கை தென்னிலங்கையில் 'நல்லிணக்கம்' குறித்து அதிகம் பேசும் ஆங்கில, சிங்கள ஊடகங்களோ, ஊடகவிய லாளர்களோ கூட சாடாமல் இருக்கின்றமை - அல்லது அது பற்றி மௌனம் சாதிக்கின்றமை வியப்புக்குரியதே. அத்தகைய அலட்டிக் கொள்ளா பண்பியல்புக்குப் பிரதான காரணம் இன வாதம்தான்; வேறில்லை.

இருண்ட யுத்தகாலம் முடிந்து விட்டது என்கிறோம். அந்தக் கொடூர காலத்து அநீதிகளுக்கு நீதி தேட வேண்டும் எனப் பாதிக்கப் பட்ட - பெரிதும் பாதிக்கப்பட்ட - தமிழர் தரப்பு வற்புறுத்துகின்றது. சர்வ தேசமும் கூட அதனையே வலியுறுத்தி நிற்கின்றது.

ஆனால், நீதி செய்யமாட்டோம் என்று நிற்கின்றது தென்னிலங் கைப் பேரினவாத அரசு. நீதி செய்யாவிட்டாலும் சரி, அதைவிட மிக மோசமான ஒரு பாதையைத் தெற்கு ஆட்சிப்பீடம் வரித்துள்ளமை தான் மிக மோசமான போக்காகும்.

சிங்களவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, தான் கண்டு கொண்டு விசாரித்து நீதி செய்வோம். தமிழர்களுக்கு இழைக்கப் பட்டவற்றுக்கு அல்ல என்ற திமிர்த்தனத்துடன் 'நல்லாட்சி' அரசு நடைபோடுகின்றமை மிக மிக ஆபத்தான விடயமாகும்.

இப்படி நாம் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டுவதற்கு ஆதாரங் கள், காரண, காரியங்கள் உள்ளன.

யுத்த காலத்தில் ஊடகப் பரப்பில் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழர் தரப்புத்தான். கொல்லப்பட்ட - தாக்கப்பட்ட - கடத்தப்பட்ட - காணாமற் போகச் செய்யப்பட்ட - ஊடகவியலாளர்கள் பெரும்பா லும் தமிழர்கள்தாம். அழிக்கப்பட்ட - நாசமாக்கப்பட்ட - சேதமாக்கப் பட்ட ஊடக நிறுவனங்கள் தமிழ் ஊடக நிறுவனங்கள்தாம்.

ஆனால், அவை குறித்து எந்த விசாரணை முன்னேற்ற நட வடிக்கைகளுமில்லை. யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. எவரும் கைது செய்யப்படவேயில்லை. குறைந்த பட்சம் புதிய நல்லாட்சி அரசு வந்த பின்னர் அந்தச் சம்பவங்கள் பற்றிய விசாரணைக் கோப்புகள் தூசு தட்டி எடுக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட் டன என்றதாகக் கூட இல்லை.

அதேவேளை, தெற்கில் ஊடகவியலாளர்கள் லஸந்த விக்கிரம துங்க படுகொலை, கீத் நொயர், உபாலி தென்னக்கோன், நாமல் பெரேரா போன்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை பற்றிய விசாரணைகள் எல்லாம் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின் றன; படைகளில் இருக்கும் சந்தேக நபர்கள் - சிங்கள அதிகாரிகள் - கைது செய்யப் படுகின்றார்கள்; பிணையில் அவர்கள் விடுவிக் கப்பட்டால் கூட அத்தகைய பிணை அனுமதிக்கு எதிராக மேனிலை நீதிமன்றங்களுக்குச் சட்டமா அதிபரே விண்ணப்பித்துப் பிணை உத்தரவுகளுக்கு எதிராகத் தடை உத்தரவு வாங்குகின்றார். அத் தகைய சந்தேகநபர்களுக்கு எதிராகத் தீவிரமான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், இருண்ட காலத்தில் சிங்கள ஊடகவியலாளர்களை விடப் பல மடங்கு பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத் தில் எதுவுமே நடக்கவில்லை. எந்த நகர்வுமில்லை. அரசின் இந்தப் போக்குக்கான காரணத்தை நாட்டின் - அரசின் - தலைவர் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துத்தான் இருக்கின்றார். அதிலும் இந்தப் 'பேரினவாதம்' இழையோடியிருப்பதைச் சுட்டிக் காட்டித்தானாக வேண்டியிருக்கின்றது.

"பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த படையினரை எந்த விலை கொடுத்தாவது காப்பாற்றுவேன். ஆனால், அந்தப் பெயரால் ஊடகவியலாளரையும் விளையாட்டு வீரர்களையும் கொலை செய்தோரை, அவர்களுக்குத் தீங்கிழைத்தோரை என் னால் காப்பாற்ற முடியாது." - என அண்மையில் பகிரங்கமாக அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரி.

அவர் விளையாட்டு வீரர் எனக் குறிப்பிட்டது றகர் வீரர் தாஜுதீன் கொலை விடயம். ஊடகவியலாளர்கள் என்ற வரிசையில், லஸந்த விக்கிரமதுங்க கொலை, உபாலி தென்னக்கோன், கீத் நொயர், நாமல் பெரேரா தாக்குதல்கள் போன்றவை குறித்தும் விசாரணை கள் நடக்கின்றன. ஆனால், இருண்ட காலத்தில் பெரிதும் பாதிப்புற்ற தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கையும் இல்லவே இல்லை.

அப்படியானால், அந்த வேளையில் தமிழ் ஊடகங்கள், ஊடகவி யலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் அனைத்தும் 'பயங் கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள்' என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு. விசாரிக்கப்படாத - விசாரிக்கப்பட முடியாத - விடயங்களாக நாட்டின் தலைவராலேயே ஒதுக்கப்பட்டு விட்டனவா? இது அப்பட்டமான பேரினவாத மேலாதிக்கப் போக்கு இல்லையா?

பாதிப்புற்ற தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் நீதி கிட்டவே கிட்டாதா?

# மொழி ரீதியான நெருக்கடிகளில் அ'புர தமிழ் அரசியல் கைதிகள்!

## நேரில் சந்தித்த சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மொழி ரீதியாகப் பல்வேறு நெருங்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, நீண்டகாலம் அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். இதனையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அனுராதபுர நீதிமன்றத்தில் 18 தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரானவழக்குகள் நடைபெற்று வருகின்றன.

சட்டமுறைமைகளின் ஊடாகவே அரசியல் கைதிகளின் விடுதலை கையாளப்படும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்த கருத்து, அரசியல் கைதிகளுக்கு மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கும் ஒருவடுவாக அமைந்துள்ளது என்று சாள்ஸ் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# தனியார் சுகாதார சேவைக்கு ஒழுங்குமுறை சபை ஸ்தாபிப்பு

## சட்டமூலத்தில் திருத்தம் செய்வதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.16

தனியார் சுகாதார சேவைக்கான ஒழுங்குமுறை சபை ஒன்றைஸ்தாபிப்பது தொடர்பான சட்டமூலத்தில் திருத்தம் செய்வதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

இதற்காகச் சுகாதாரப் பணிப்பாளரின் தலைமையில் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக தனியார் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஒருவர் மற்றும் சுகாதார அமைச்சின் சட்டப் பணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒரு மாத காலத்துக்குள் தயார் செய்யப்பட்டு சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட உள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

பிரித்தானியாவின் தனியார் சுகாதார சேவைக்கான ஒழுங்குமுறை சபை அறிக்கையைக் கருத்திற்கொண்டு இந்த சட்டமூலத்தைச் சீரமைக்குமாறு சுகாதார அமைச்சர் அந்தக் குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் இம்முறை அக்கரைப்பற்றில்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள் இம்முறை அக்கரைப்பற்றில் நடைபெறவிருக்கின்றது. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினினர் ஏற்பாட்டில் மிகச் சிறப்புற இந்த மே தின நிகழ்வுகளை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மதுரடிப் பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகும் கூட்டமைப்பின் மேதின ஊர்வலம் அக்கரைப்பற்று சுற்றுவட்டச் சந்தி வழியாக, மேதினக் கூட்டம் நடைபெறவிருக்கும் ஆலையடி வேம்பு கலாசார மண்டபம் வரை சென்றடையும்.

தொடர்ந்து கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும்.

இந்த மேதின நிகழ்வுகளில் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட கூட்டமைப்பில், அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த மேதின நிகழ்வுகளுக்கென நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனைத் தலைவராகவும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசனை செயலாளராகவும், மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரனைப் பொருளாளராகவும் கொண்ட ஏற்பாட்டுக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-150)

# புத்தாண்டுக்கு ஊர் சென்றோர் திரும்புவதற்கு இன்று முதல் விசேட பஸ், ரயில் சேவை

கொழும்பு, ஏப். 16

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமது ஊர்களுக்குச் சென்ற மக்கள் திரும்புவதற்காக இன்று முதல் மேலதிக பஸ் மற்றும் ரயில்கள் சேவைகள் இடம்பெற உள்ளன என்று போக்குவரத்துதுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களுக்கும் மாத்தறை, காலி, யாழ்ப்பாணம், பண்டாரவளை ஆகிய இடங்களுக்கிடையில் இந்த சேவைகள் இடம்பெற வுள்ளன.

கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் இருந்து மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடும் என்று ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.பீ. ஆரியரட்ண தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஆயிரத்து 700 பஸ்களை மேலதிகமாகச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

பிற மாகாணங்களில் இருந்து கொழும்பு நோக்கி இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் போக்குவரத்து நடவடிக்கைக்குப் பொறுப்பான பிரதி பொதுமுகாமையாளர் ரூபா குணதிலக்க தெரிவித்துள்ளார். (ஐ)





வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

வீதியில் நீங்கள் மட்டும் பிரயாணம் செய்யவில்லை. அடுத்தவரின் அன்புக்குரியவர்களும் பயணிக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்வோம்.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை / மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## நாளை

17.04.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : மூலம் பி.ப. 5.27 வரை
திதி : ஷஷ்டி மு.ப. 10.20 வரை

சுபநேரம் : 12.04 - 1.34 வரை
இராகுகாலம் : 7.34 - 9.04 வரை

# வடமராட்சி கிழக்கு மீனவர்களின் கேள்விக்குறியான வாழ்வாதாரம்!

## தென்னிலங்கை தொழிலாளரின் வருகையால் தொழில் முற்றாகப் பாதிப்பு

மருதங்கேணி, ஏப்.16

வடமராட்சி கிழக்கு மீனவர்களின் கடல் தொழில் முயற்சியும் வாழ்வாதாரமும் இந்த வருடமும் கேள்விக்குறியாகி வருகின்றன என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தென்னிலங்கை கடலட்டை கடல் சங்கு தொழிலாளர்களின் வருகை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது ஒவ்வொரு நாளும் 200 வரையான படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களால் பயன்படுத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள் 40 எச்.பி. கொண்டனவாகக் காணப்படுகின்றன.இதனை விட பெருந்தொகையான காஸ்சிலிண்டர்கள், வெளிச்சம் பாய்ச்சிகள்என்பனதொழில்நிமித்தம் அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் காரணமாக நாள் முழுவதும் இயந்திரத்தின் இரைச்சல் கடலில் காணப்படுகின்றது.சிலிண்டர் வெளிச்சம் பாய்ச்சுவதால் ஆழ்கடலில் இருந்து கரையை நோக்கி வரும் மீன்களின் வருகையும் கூட்டங்களாக கரையை நோக்கி வரும் மீனினங்களின் வருகையும் வெகுவாகக் குறைவடைந்து வருகிறது.

இவற்றைவிடவும் அட்டை, சங்கு தொழிலாளர்களின் இயந்திரங்களால் இந்தப் பிரதேச மீனவர்களின் முரல் வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி வலைகள் உபகரணங் கள் என்பன பெரியளவில் அறுக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் வருகின்றன.

இங்குள்ள மீனவர்கள் கரையோர மீன்பிடியை மட்டும் நம்பி வாழும் மீனவர்களாவர். இந்தப் பிரதேச மீனவர்கள் நைலோன் நூலாலான வலைகளையே நம்பி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே, இப்பிரதேசத்துக்கு ஒவ்வாத தொழில் நடவடிக்கையை தென்னிலங்கை கடலட்டை, கடல் சங்கு தொழிலாளர் மேற்கொள்வதால் இங்குள்ள மீனவர்களின் தொழில் நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்படுகிறது.

எனவே, தென்னிலங்கை தொழிலாளர்களின் வருகை முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் இருந்து யாழ். மாவட்டத்தின் காங்கேசன்துறை வரைக்கும் நீண்டு செல்கின்றது.

எனவே, இவர்களின் வருகையையும் தொழில் நடவடிக்கையையும் முற்றாகக் கட்டுப்படுத்த உரியதரப்பு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வடமராட்சி கிழக்கு மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஐ-35)

---

## புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது

### பொதுக் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் தெரிவிப்பு



கொழும்பு, எப்.16

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பொது மக்களுக்கு உரிய முறையில் அறியப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசமைப்புக்கான பொதுக் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் புதிய அரசமைப்பு ஒன்றின் உருவாக்கம் தொடர்பில் 55 சதவீதமான மக்கள் அறிந்திருக்கவில்லை என்று மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் கருத்துக்குப் பதிலளிக்கும்போதே பொதுக் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உரிய தெளிவுபடுத்தல்கள் காரணமாகவே தமது குழுவுக்கு எழுத்து மூலம் மூவாயிரம் யோசனைகளும், வாய் மூலம் இரண்டாயிரத்து 216 யோசனைகளும் கிடைக்கப் பெற்றன என்று அரசமைப்புக்கான பொதுக் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

---



## ஓட்டோ சில்லு உடைந்து விபத்து!

வவுனியா நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்றின் முன் சில்லு உடைந்ததில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்துச் சம்பவம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சேதமடைந்த ஓட்டோ எதிரில் வந்த உழவு இயந்திரத்துடன் மோதியது. சாரதி சிறு காயங்களுக்கு ஆளானார். (ஐ)

---

## சுற்றுலா பயணிகளின் படகுகளில் தீ!

வெலிகம - மிரிஸ்ஸ மீனவத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு சுற்றுலா பயணிகளின் படகுகளில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் உயிர்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், திடீர் தீப்பரவலுக்கான காரணங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், மாத்தறை மாநகர சபை தீயணைப்பு பிரிவினரின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)

---

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஏப்.16

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளைக் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஐ-21)

---

## மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.16

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை கொடிகாமம் கச்சாய் வீதிப் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

---

## சங்கிலியை அபகரிக்க கொல்லப்பட்ட பெண்!

### சந்தேக நபர் கைது

கொழும்பு,ஏப்.16

கொட்டதெனியாவ பிரதேசத்தில் பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவரைக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சந்தேகநபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.இந்தப் படுகொலைச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இந்த பகொலைச் சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த 35 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரிப்பதற்கு முயற்சி செய்த போதே இந்த பெண் உயிரிழந்துள்ளார் என்று கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

---



## அநாதரவான நிலையில் மீட்கப்பட்ட மோ.சைக்கிள்!

### வவுனியா பொலிஸார் விசாரணை

வவுனியா, ஏப்.16

வவுனியா - யாழ். பிரதான வீதியில் வீதியோரத்தில் அநாதரவான நிலையில் கிடந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா - யாழ். பிரதான வீதியோரத்தில் நிலத்தில் சரிந்து விழுந்த நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஹெல்மட், ஒரு சோடி செருப்பு என்பனவும் காணப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்குத் தொலைபேசி மூலம் மக்கள் தகவல் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விபத்து ஏதாவது நடந்திருக்கலாம் என்ற அடிப்படையில் வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

எனினும், அப்பகுதியில் இருந்து விபத்துக்குள்ளாகி எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அந்த மோட்டார் சைக்கிள், ஹெல்மெட் என்பன வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# பட்டதாரிகளை உள்வாங்கும் நடவடிக்கையை கிழக்கு மாகாணத்தில் துரிதப்படுத்த வேண்டும்!

## அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறார் கிழக்கு முதலமைச்சர்



மட்டக்களப்பு,ஏப்.16

கிழக்கு மாகாணத்தில் வேலையற்றபட்டதாரிகளை வெற்றிடங்களுக்குஉள்வாங்கும் நடவடிக்கையை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வியை முன்னெடுத்து, வீதியில் இறங்கி தொழில் வாய்ப்புக்களுக்காகப் போராடி வரும் பட்டதாரிகள் தொடர்பில், இந்த நல்லாட்சி அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும்.


கிழக்கில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான சகல ஆவணங்களும் அரசுக்குக் கையளிக்கப்பட்டு விட்டன.


இந்நிலையில், பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

மலர்ந்துள்ள இந்தத் தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டில் நாட்டில் வாழும் சகல இன மக்களும், பகைமைகளை மறந்து தமது தாய் நாட்டுக்காக ஒன்றிணைய வேண்டும். சிறுபான்மை மக்களுக்கு நிரந்தரமான தீர்வொன்று இந்த நாட்டில் மலர வேண்டுமானால் அதற்கு அனைத்து தரப்பினரதும், திறந்த மனதுடான வெளிப்படையான கலந்துரையாடல்கள் அவசியம்.

-என்றார். (ச)

## நடுத்தெருவில் மருத்துநீர் வைத்து எதிர்ப்பை வெளிப்படுத்திய மட்டு-மாவட்ட பட்டதாரிகள்!





மட்டக்களப்பு,ஏப்.16

மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் புதுவருட தினத்தில் வீதியில் நின்று மருத்துநீர் வைத்து தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதன் போது பட்டதாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்:-

சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கிப் பல நாள்கள் கடந்து விட்டன. ஆனால், இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் வீடுகளில் புதுவருடம் கொண்டாடும் அதேசமயம் பட்டதாரிகளான நாங்கள் நடுத் தெருவில் நிற்கின்றோம்.-என்றனர். (ச)

## மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலய பங்குனி உத்தர தீ மிதிப்பு உற்சவம்

மட்டக்களப்பு,ஏப்.16

கிழக்கிலங்கையின் வரலாற்றுச்சிறப்புமிக்க மட்டக்களப்பு மட்டிக்கழி அருள்மிகு ஸ்ரீ திரௌபதா தேவி ஆலயத்தின் பங்குனி உத்தர தீ மிதிப்பு உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பங்குனி உத்தர உற்சவம் கடந்த ஏழாம் திகதி ஆரம்பமானது. இந்த நிலையில், தமிழர்களின் பாரம்பரிய பண்பாடுகளை எடுத்துக் காட்டும் விதத்தில் இந்த தீ மிதிப்பு உற்சவம் அமைந்திருந்தது.

மட்டக்களப்பு வாவியில் மஞ்சள் குளிக்கும் நிகழ்வு நடைபெற்றதைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் தீ மிதிப்பு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த உற்சவத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான பக்த அடியார்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)







## இறக்காமம் உணவு ஒவ்வாமை: காரணம் வெளியானது!

அம்பாறை - இறக்காமம் பகுதியில் வழங்கப்பட்ட உணவு விஷமடைந்தமைக்கு ஒரு வகை பக்டீரியாவே காரணம் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மருத்துவ ஆய்வு நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை இந்த விடயத்தை உறுதிப்படுத்துகிறது எனக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்வைத்தியர் அழகையா லதாகரன் குறிப்பிட்டுள்ளார்.

இறக்காமம் - வாங்காமம் பகுதியில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட கந்தூரி நிகழ்வில் உணவு உட்கொண்ட நால்வர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நிறைகுறைந்த பாண் விற்பனை: கல்முனையில் மக்கள் விசனம்!

### பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சிரமம்

கல்முனை,ஏப்.16

கல்முனைப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் நிறை குறைந்த பாண் விற்பனை செய்யப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் சட்டதிட்டத்துக்கு ஏற்ப விலை நிர்ணய திணைக்களமும், அளத்தல் அளவீட்டுத் திணைக்களமும் இணைந்து பாணின் நிறை மற்றும் விலை என்பனவற்றை நிர்ணயித்துள்ளன.

இவற்றுக்கு முரணான வகையிலும் நிறை குறைந்த பாணைத் தயாரித்து பண்டிகைக் காலத்தில் கல்முனையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஒரு சாதாரண பாணின் நிறை 450 கிராம் ஆகும். ஆனால் 330 கிராம் நிறையுடைய பாண் தயாரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலம் என்பதால் கல்முனைப் பகுதியில் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டுள்ளன. இதனால் பண்டிகைக் காலத்தில் இயங்கிய பிரஸ்தாப பேக்கரியில் மட்டும் பாண்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டன.

இதனால் கல்முனையில் பாணுக்குத் தட்டுப்பாடு நிலவியுள்ளது. அதனைச் சாதகமாக்கிக் கொண்டு நிறை குறைந்த சுமார் 5 ஆயிரம் பாண்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு பாணில் 110 கிராமை மீதப்படுத்தி பாண் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் நேர்மையாகவும் தரமாகவும் தயாரிக்கும் பேக்கரி உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், பொதுமக்கள்பலரும்ஏமாற்றமடைந்துள்ளனர். (ச)

## வவுணதீவு விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்!

வவுணதீவு,ஏப்.16

வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா பிரதான வீதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

5பிள்ளைகளின்தந்தையானவைரமுத்து யோகலிங்கம் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை வவுணதீவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# சீனாவை எதிர்கொள்வதற்கு இலங்கையைப் பலப்படுத்துகிறது ஜப்பான்!

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் முன்னகர்வுகளுக்கு எதிர் நடவடிக்கையாக, இலங்கை கடலோரக் காவல் படையின் திறனை வலுப்படுத்துவதற்கு ஜப்பான் உதவ முன் வந்துள்ளது என்று ஜப்பானிய ஊடகமான The Asahi Shi mbun செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த ஜப்பான் ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேக்கும் இடையில் ரோக்கியோவில் இடம்பெற்ற சந்திப்புக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், கடல்சார் துறையில் மேலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒத்துழைப்பின் ஒரு கட்டமாக, இரண்டு அதிவேக கடலோரக் காவல் படைப் படகுகளை இலங்கைக்கு ஜப்பான் வழங்கவுள்ளது. அத்துடன், இலங்கைக் கடலோரக் காவல்படையின் ஆற்றலை அதிகரிக்கும் பயிற்சிகளையும் ஜப்பான் வழங்க முன்வந்துள்ளது.

மேலும், இரண்டு நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகளின் பரிமாற்றங்களை வலுப்படுத்தவும் இந்தக் கூட்டறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, திருகோணமலைத் துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளுக்காக 90 லட்சம் டொலரையும் ஜப்பான் கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

மத்திய கிழக்கின் எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் ஜப்பானை இணைக்கும் கடல்



ஜப்பானிய ஊடகம் தகவல்

வழிப்பாதையின் நடுவே-கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கைத் தீவு அமைந்துள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் கடலோரக் காவல் படைகளுக்கு இடையில் நடத்தப்படவுள்ள கூட்டுப் பயிற்சியில் சிறிலங்காவும் பங்கேற்க வேண்டும் என்று ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே அழைப்பு விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் குவடார் துறைமுகம் போல, இலங்கையின் துறைமுகங்கள் மாறி விடக் கூடாது என்று, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஒரு திறந்த சுதந்திரமான இந்தோ- பசுபிக் கடல் மூலோபாய கொள்கையை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், இந்தியப் பெருங்கடலில் வளர்ந்து வரும் சீனாவின் தலையீட்டைத் தடுக்க முடியும் என்று ஜப்பானிய பிரதமர் அபே நம்பிக்கை கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று வியட்நாம் செல்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க!

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று அங்கிருந்து வியட்நாமுக்கு அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

வியட்நாம் பிரதமர் நுயென் சுவான் புக்கின் அழைப்பின் பேரில், இன்று வியட்நாம் செல்லும் இலங்கைப் பிரதமர் எதிர்வரும் 19ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார்.

இந்தப் பயணத்தின் போது, சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக, அந்நாட்டு பிரதமருடன், இலங்கைப் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, தொலைத்தொடர்பு, மீன்பிடி, விவசாயம், இயந்திர உற்பத்தி, கட்டடப் பொருள்கள் உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்து பேச்சுகளில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

## ஆதிவாசி மக்களுக்கு குடிதண்ணீர் இயற்கைக் கழிவறை வசதிகள்

### வழங்க அரசு விசேட வேலைத் திட்டம்

ஆதிவாசி மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் மற்றும் இயற்கைக் கழிவறை வசதிகளை வழங்க அரசாங்கம் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. இந்த வேலைத்திட்டம் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலா அத்தோவுடனான சந்திப்பில் இது பற்றி ஆராயப்பட்டது என்று நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சந்திரவிதான தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆதிவாசிகளின் தலைவர் தமது சமூகம் பற்றிய புள்ளி விவரங்களை முன்வைத்தார். 6 மாவட்டங்களைச் சேர்ந்த 57 கிராமங்களில் ஆதிவாசி மற்றும் கலப்புக் குடும்பங்களைச் சேர்ந்த 5 லட்சம் பேர் வரை வசிக்கிறார்கள் என அவர் கூறினார்.


சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆதிவாசிகள் சமூகத்திற்கு குடிதண்ணீர் மற்றும் கழிவறை வசதிகள் வழங்கப்படும். என்றும் தெரிவித்துள்ளார்.- என்றார்.

பாலியல் துஷ்பிரயோகத்தில் தொடர்பு உண்டா?

## ஐ.நாவுக்கு வரும்முன் படையினரை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்!

கொழும்பு, ஏப். 16

ஐ.நா. அமைதிப்படைக்கு தமது படையினரை அனுப்பும் உறுப்பு நாடுகள், ஐ.நா. அமைதிப்படைக்கு தமது வீரர்களை அனுப்பும் போது, அவர்கள் எந்தப் பாலியல் துஷ் பிரயோகத்திலும் தொடர்புபடவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.



ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் தெரிவிப்பு

கடந்த காலங்களில் பாலியல் துஷ்பிரயோகங்களில் தொடர்புபடவில்லை என்பதை ஒவ்வொருவரையும் ஆய்வு செய்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையிடமும் இதனையே ஐ.நா எதிர்பார்க்கிறது என்றும் அவர் கூறினார்.

ஹெய்டியில் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டு இலங்கைப் படையினர் மீது சுமத்தப்பட்டுள்ளது. அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், ஐ.நா. அமைதிகாப்புப் பணியில் இலங்கைப் படையினரை தொடர்ந்து ஈடுபடுத்துவது ஏன் என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர், அங்கு இலங்கைப் படையினர் நீண்டகாலத்துக்கு நிறுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குரெரெஸ் பரந்துபட்ட பொறுப்புக்கூறலை உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்திய போதிலும், ஒரு போதும் உறுப்பு நாடுகள் அது பற்றிய தகவல்களை ஐ.நாவுக்கு வழங்கியதில்லை என்றும் ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் இருந்து 'பாதுகாக்கப்பட்ட' இலங்கைப் படையினர்!

'அசோசியேட்டட் பிரஸ்' ஆய்வில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 16

ஹெய்டியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றிய போது, சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த இலங்கைப் படையினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் பாதுகாப்பாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று 'அசோசியேட்டட் பிரஸ்' (ஏ.பி.) மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டில் இருந்து கடந்த 12 ஆண்டுகளில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றிய இலங்கைப் படையினர், மீது சுமார் 2 ஆயிரம் பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்டியில் மாத்திரம், இலங்கை உள்ளிட்ட 23 நாடுகளைச் சேர்ந்த படையினர், 300இற்கும் அதிகமான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதில், 2004ஆம் ஆண்டுக்கும், 2007ஆம் ஆண்டுக்கும் இடையில், 134 இலங்கைப் படையினர் ஒன்பது சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய சம்பவங்களும் அடங்கும்.

ஹெய்டியில் ஐ.நாவினால் அமைதிகாப்புப் பணிக்காக அமர்த்தப்பட்ட 900 பேர் கொண்ட இலங்கைப் இராணுவ பற்றாலியனைச் சேர்ந்தவர்களில் 134 பேர் மீதே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் படையினருக்கும் ஹெய்டி சிறுவர்களுக்கும் இடையில் சந்தேகத்துக்குரிய தொடர்புகள் இருப்பதாக, 2007ஆம் ஆண்டு ஐ.நாவுக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, பாதிக்கப்பட்ட ஒன்பது சிறுவர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டது.

இதன்போது 16 வயதுச் சிறுமி ஒருவர் தாம், இலங்கை இராணுவ அதிகாரி ஒருவருடன், பாலியல் உறவு வைத்திருந்ததாகக் கூறினார். 14 வயதான இன்னொரு சிறுமி, பணம் அல்லது உணவுக்காக தாம் ஒவ்வொரு நாளும் இலங்கை இராணுவத்தினருடன் உறவு கொண்டேன் என்றும் தெரிவித்தார்.

இன்னொரு சிறுவன், இருபதுக்கும் அதிகமான இலங்கைப் படையினருடன் பாலியல் உறவை வைத்திருந்ததாகக் கூறியுள்ளார்.

இத்தகைய குற்றச்சாட்டு




களில் தொடர்புடைய 114 இலங்கைப் படையினர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எனினும் அவர்கள் தண்டிக்கப்படவில்லை.

அதேவேளை, இலங்கை தொடர்ந்தும் ஹெய்டிக்கு தமது படையினரை அனுப்பிக் கொண்டிருக்கிறது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்



வழிமூலம் - Ground views
மொழியாக்கம் - நித்தியபாரதி



# முள்ளிக்குளத்திலும் திடமனத்துடன் போராட்டம்

"எனது அப்பா, எனது அப்பாவின் அப்பா, அவரின் அப்பா என எமது தலைமுறையினர் முள்ளிக்குளம் கிராமத்திலேயே வாழ்ந்துள்ளனர்." எனது பாட்டனாரின் காலத்திலேயே எமது குடும்பத்தினர் வணங்கும் தேவாலயம் அமைக்கப்பட்டது. எமது கிராமத்தின் ஊடாக நான்கு ஆறுகள் ஓடுகின்றன. இவற்றில் ஒரு ஆற்றை நாங்கள் குளிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தினோம்.

கடலில் மீன்பிடிக்க முடியாத காலத்தில், இந்த ஆறுகளிலேயே நாங்கள் மீன்பிடித்தோம். எமது கிராமத்தில் வயல், பசுக்கள், கோழிகள், எருதுகள் என்று எல்லா வளங்களும் நிறைந்து காணப்பட்டன. இதனால் எமக்குக் குடிப்பதற்கோ அல்லது சாப்பிடுவதற்கோ பஞ்சமே இல்லை.

நாங்கள் பின்னேரங்களில் ஒன்றுகூடி நாடகம் மற்றும் நடன நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவோம். எமது கிராமத்தில் வாழ்ந்த அனைவரும் மிகவும் மகிழ்வுடனேயே வாழ்ந்தோம். எமக்கு அருகில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுடன் இணைந்து நாங்கள் மிகவும் அமைதியான வாழ்வை வாழ்ந்தோம்.

யுத்த காலத்தில் பிரச்சினைகள் ஏற்பட்ட போது, நிலைமை சீராகும் வரை நாங்கள் எமக்கருகில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் வீடுகளில் அடைக்கலம் புகுவோம். நிலைமை சீராகிய பின்னர் மீண்டும் நாங்கள் எமது கிராமத்திற்குத் திரும்புவோம். மீண்டும் நாங்கள் அனைவரும் அமைதியாக வாழவேண்டும் என இறைவனை ஒவ்வொரு நாளும் பிரார்த்திப்பேன். நான் இந்தப் பூமியை விட்டுப் போகும் போதாவது நாங்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும் என முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 88 வயதான எம்.பிரான்சிஸ் வாஸ் தெரிவித்தார். இவர் 2007 தொடக்கம் இன்னமும் தனது சொந்த ஊருக்குச் செல்லவில்லை.

மீண்டும் மூன்று நாள்களில் கிராமத்துக்குத் திரும்பலாம் என்று செப்ரெம்பர் 08, 2007 அன்று இலங்கை இராணுவத்தினரால் வாக்குறுதி வழங்கப்பட்ட நிலையில் முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆனால் பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட, இந்தக் கிராமத்து மக்கள் தமது சொந்தக் கிராமத்துக்குத் திரும்பிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்வதற்குக் கூடத் தமது சொந்தக் கிராமத்துக்குச் செல்ல முடியவில்லை. 2007 இல் இந்த மக்கள் தமது சொந்தக் கிராமமான முள்ளிக்குளத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், இங்கு வட- மேற்கு மாகாணங்களுக்கான கடற்படைக் கட்டளைத் தலைமையகம் அமைக்கப்பட்டது. இந்த மக்கள் கடந்த பத்தாண்டாக தமது சொந்தக் கிராமத்துக்கு விடுமாறு கோரி பல்வேறு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். மகஜர்களைக் கையளித்தனர். பல்வேறு கலந்துரையாடல்களையும் மேற்கொண்டனர். இவர்களின் இந்த முயற்சிகள் பொய்யான வாக்குறுதிகளால் இடைநிறுத்தப்பட்டன.

மறிச்சுக்கட்டி என்னும் கிராமத்துடன் இணைந்த முள்ளிக்குளம் கிராமமானது முஸ்லிம் மக்களுடன் அமைதியாக வாழ்ந்த வாழ்வை முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த முதியவரான பிரான்சிஸ் வாஸ் நினைவு படுத்தினார். பல்வேறு கடினமான தருணங்களில் முஸ்லிம், தமிழர் என எவ்வித பாகுபாடுமின்றி இவ்விரு இனத்தவர்களும் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்தனர் என்பது இங்கு நினைவு கூரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது வீடுகளுக்குத் தாம் திரும்பிச் செல்ல வேண்டும் எனக் கோரி அண்மையில் முள்ளிக்குளம் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் மன்னார் -புத்தளம் வீதியில் அமைந்துள்ள முள்ளிக்குளம் கிராமத்திற்கு அருகிலுள்ள முஸ்லிம் ஒருவரின் வீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டது.

நிலங்களை மீள ஒப்படைக்குமாறு கோரியும் காணாமற் போனவர்கள் தொடர்பில் உண்மை மற்றும் நீதி எட்டப்பட வேண்டும் எனக் கோரியும் வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான போராட்டங்கள் மூலம் முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது சொந்த ஊருக்குச் செல்ல முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கேப்பாபிலவு போன்ற இடங்களிலுள்ள நிலங்களைத் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கோரி பொதுமக்கள் தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதன் பயனாக அவர்களது சொந்தக் கிராமம் கடந்த மாதம் அவர்களிடம் மீளவும் ஒப்படைக்கப்பட்டதானது முள்ளிக்குளம் கிராம மக்களுக்கும் நம்பிக்கையை அளித்துள்ளது.

மலன்காடு என்னும் இடத்தில் முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்பங்கள் தற்காலிகமாக வாழ்வதுடன், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 150 குடும்பங்கள் காயக்குளியிலும் வாழ்வதுடன் கிட்டத்தட்ட 100 குடும்பங்கள் யுத்தத்தின் போது இந்தியாவிற்கும் தப்பிச் சென்றுள்ளனர். ஆனால் தமது சொந்தக் கிராமத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற ஆவலுடன் இந்த மக்கள் காத்திருக்கின்றனர்.

'மலன்காடு மற்றும் காயக்குளியைச் சேர்ந்த எமது கிராமத்தைச் சேர்ந்த 50 வரையான கிராமத்தவர்கள் ஒன்று சேர்ந்து மார்ச் 25 காலை எட்டுமணி தொடக்கம் எமது போராட்டத்தை ஆரம்பித்தோம். எமது நிலங்களை எம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். ஏன் இங்கு போராட்டம் செய்கிறீர்கள்? எனவும் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யாமைக்கான காரணம் என்ன? நீங்கள் அங்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான பேருந்து வசதியை நாங்கள் ஒழுங்குபடுத்தித் தருகிறோம். நாங்கள் உங்களுக்கு பல உதவிகளைச் செய்த போதிலும் நீங்கள் எம்மை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள் எனவும் கடற்படையினர் எம்மிடம் தெரிவித்தனர் என முள்ளிக்குளம் கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினர் எமக்கு எவ்வித உதவியையும் செய்யத் தேவையில்லை, பதிலாக அவர்கள் எம்மிடம் எமது நிலங்களைத் திருப்பித் தந்தால் அதுவே போதும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

நாங்கள் 2007 இல் எமது சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறிய போது, 100 வரையான வீடுகள் நல்ல நிலையிலும் 50 வரையான வீடுகள் கூரை வீடுகளாகவும் காணப்பட்டன. அத்துடன் தேவாலயம், கூட்டுறவுச் சங்கம், மூன்று பாடசாலைக் கட்டடங்கள், முன்பள்ளி, இரண்டு வைத்திய சாலைக் கட்டடங்கள், நூலகம், அஞ்சலகம், மீனவர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், ஆசிரியர் விடுதி, கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், ஆறு பொது மற்றும் நான்கு தனியார் கிணறுகள் மற்றும் ஒன்பது குளங்கள் என்று பல்வேறு வசதிகளுடன் எமது கிராமம் காணப்பட்டது என்று கிராமத்தவர்கள் நினைவுபடுத்தினர்.

தற்போது இந்தக் கிராமத்தில் 27 வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஏனையவை கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன என்று கடற்படையினர் கூறுகின்றனர். தற்போது இங்கு விவசாயம் செய்வதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி வழியாக தேவாலயத்தைச் சென்றடைவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நீர்தாங்கி அணைக்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தாம் விரும்பும் போதெல்லாம் தேவாலயத்துக்குச் சென்று வணங்க முடியாத நிலையில் முதியோர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஞாயிறு பிரார்த்தனைக்குச் செல்வதற்கு கடற்படையினர் பேருந்து ஒழுங்கு படுத்தியுள்ளனர். இதில் மட்டுமே அங்கு செல்ல முடியும். வழமையாக மலன்காடு மற்றும் காயக்குளியிலிருந்து முள்ளிக்குளத்துக்குக் குறுகிய வழியாக நடந்து செல்வதற்கு 50-100 மீற்றர் மட்டுமே எடுக்கும். ஆனால் தற்போது முள்ளிக்குளம் தேவாலயத்துக்குச் செல்வதற்கு 3 - 10 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதேபோன்று முள்ளிக்குளத்திலுள்ள பாடசாலைக்கு கல்வி கற்கச் செல்லும் மாணவர்களைக் கடற்படையினர் தமது பேருந்தில் ஏற்றிச் செல்கின்றனர். இங்கு தரம் ஒன்பது மட்டுமே கல்வி கற்க முடியும் என்பதால் இதன் பின்னர் தொலைவிலுள்ள பாடசாலைக்கு மாணவர்கள் கற்கச் செல்வதுடன் விடுதிகளில் தங்கி கல்வி கற்கின்றனர்.

முள்ளிக்குளம் கிராமத்து மக்கள் அடிப்படையில் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். ஆகவே இவர்கள் கடலுக்குச் செல்வதற்கான தூரமும் குறைவாகவே இருக்க வேண்டும். மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதிலும் பல தடைகள் காணப்படுகின்றன. 2007 இல் முள்ளிக்குளத்தை விட்டு வெளியேறும் போது இந்த மக்கள் தம்மிடம் வைத்திருந்த 64 வரையான படகுகள், 90 தெப்பங்கள் மற்றும் மீன் வலைகள் போன்றவற்றை அங்கேயே விட்டுச் சென்றனர்.

நீங்கள் போராட்டத்தை நிறுத்தாவிட்டால், கடலில் நாங்கள் எமது பலம் என்ன என்பதை உங்களுக்குக் காண்பிப்போம் என கடற்படையினர் ஆர்ப்பாட்டத்தின் முதல் நாளன்று கிராம மக்களை அச்சுறுத்தினர். ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் சில நாள்களாக கடற்படையினர் மற்றும் சிலாவத்துறையைச் சேர்ந்த காவல்துறையினர் எனப் பலரும் இந்த மக்களின் போராட்டத்தில் தலையீடு செய்தனர். போராட்டம் இரண்டாம் வாரத்தை எட்டிய போது, கடற்படையைச் சேர்ந்த பிராந்தியக் கட்டளைத் தளபதி மற்றும் முக்கிய அதிகாரிகள் இந்த மக்களிடம் பேச்சுகளை நடத்தியதுடன் தமது தலைமைப் பீடத்துக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் இது தொடர்பில் கொழும்பு அமைதி காத்தது. தேவாலயத் தலைவர்கள் இது தொடர்பில் கொழும்புடன் தொடர்பு கொண்ட போதிலும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இலங்கைக் கடற்படையினர் மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ளனர் என்றும் இந்த நிலங்களுக்குப் பதிலாக வேறு நிலங்கள் வழங்குவதாக உத்தேசித்தால் இது தொடர்பில் மக்களின் விருப்பங்கள் என்ன என்பது கண்டறியப்பட வேண்டும் எனவும், மக்கள் பலவந்தமாகக் குடியேற்றப்படக் கூடாது எனவும் மனித உரிமை ஆணைக்கு தனது அறிக்கையில் தெரிவித்தது.

மார்ச் 23 அன்று மாவட்டச் செயலரும் அவருடைய பிரதிநிதிகளும் முள்ளிக்குளம் வாழ் மக்களைச் சந்திப்பதற்காகச் சென்றனர். ஆர்ப்பாட்டத்தின் மூலம் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது எனவும், மக்களின் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றைத் தம்மிடம் தருமாறும் அதனை தமது மேலதிகாரிகளிடம் ஒப்படைத்து நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் மக்களைக் கேட்டுக் கொண்டனர். முள்ளிக்குளம் கிராமத்தின் பெரும்பாலான நிலங்கள் மக்களுக்கும் மன்னார் கத்தோலிக்க திருச்சபைக்கும் சொந்தமானதாகும். எஞ்சிய நிலங்கள் அரச காணிகளாகவும் உள்ளன.

இந்த மக்களுக்கு வேறு வீடுகள் வழங்கப்பட்ட போதிலும் இந்த மக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான காரணம் என்ன என்று மாவட்டச் செயலர் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டவர்களிடம் வினவினார். தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே போராடுவதாகவும் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள வீடுகளை ஏற்றுக் கொள்வதிலும் இந்த மக்கள் தயக்கம் காண்பித்தனர். நாங்கள் எமது சொந்த வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்பதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

எம்மிடம் அனைத்து வளங்களும் இருந்தன. தற்போது நாங்கள் காடுகளில் வாழ்கிறோம். இங்கு நாங்கள் எவ்வாறு வாழமுடியும்? அனைத்தையும் திரும்பப் பெறுவோம் என்று நான் நம்புகிறேன். எமது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளாவது சொந்தக் கிராமத்தில் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதே எனது ஒரேயொரு ஆசை என முதியவரான பிரான்சிஸ் வாஸ் தெரிவித்தார்.

காலைக்கதிர்



# உயிரையே தியாகம் செய்த இயேசு பிரான் மனித குலத்திற்கே உதாரண புருஷர்

## உயிர்ப்பு விழாச் செய்தியில் ஜனாதிபதி



துக்கத்தில் பிறந்து, துக்கத்தையே அனுபவிக்கும் மானுடனை, பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக இயேசு பிரான் செய்த ஒப்பற்ற உயிர்த் தியாகத்தின் மகிமையே உயிர்ப்புப் பெருவிழாவில் என்றென்றும் நிலைத்து நிற்கின்றது. மிகுந்த பக்தியுடன் உயிர்ப்புப் பெருவிழாவை நினைவுகூரும் கிறிஸ்தவப் பெருமக்களிடமிருந்து, மனிதத்துவத்தைக் கடந்து தெய்வீக நிலையை எட்டும் அந்த அதி உன்னத அர்ப்பணிப்பே வெளிப்படுகின்றது.

மனிதர்களின் மனதை பாவத்திலிருந்து விடுவித்ததன் மூலம் மனித குலத்தின் இருப்பை நிலைப்படுத்திய இயேசுபிரான், ஒருவரை அழிக்க முடிந்தாலும் கூட, தோல்வி அடையச்செய்ய முடியாதென்பதையும், தெய்வீக அன்பே நிலையான அன்பாகும் என்பதையுமே தனது சகோதர மக்களுக்காக தமது உயிரையே தியாகம் செய்யுமளவிற்கு தியாகத்தன்மையை கொண்டிருந்ததன் மூலமாக ஒட்டுமொத்த மனித குலத்துக்கு எடுத்துரைத்தார்.

உலக வாழ் கிறிஸ்தவ மக்கள் அன்றுதொட்டு இன்றுவரை உயிர்ப்புப் பெருவிழாவுடன் நினைவுகூரும் அந்த அன்பின் உன்னதத்தை அனைத்து உள்ளங்களும் உணரச்செய்தல், இன்றைய உலகின் இருப்புக்கான முதன்மைத் தேவையாகும்.

மனித மனங்களை கருணையினால் உருக வைக்கும் இறைவனின் கொடையான அன்பானது உயிர்ப்புப் பெருவிழாவின் ஊடாகவே மனித உருவில் மனிதனை நோக்கி வந்துள்ளது. அந்த உயிர்ப்புப் பெருவிழாவான இன்று அனைத்து கிறிஸ்தவர்களுக்கும்; இறை ஆசீர்வாதம் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்ப்பு விழா செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# நல்லிணக்கம் ஏற்பட அனைவரும் கைகோத்து செயற்படுவோம் வாரீர்

## உயிர்ப்பு விழாச் செய்தியில் சம்பந்தன் அழைப்பு



உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகின்ற இலங்கையர் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின் றேன்.

உயிர்த்த ஞாயிறு தினமானது கிறிஸ்தவ மக்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் பெருநாளாகும். இந்நாளானது கடந்தவற்றைத் திரும்பிப் பார்த்து, நிகழ்காலத்தில் உள்ளவற்றை மதிப்பீடு செய்து, எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கும் ஒரு தினமாகும்.


மக்களிடையே கட்டியெழுப்ப வேண்டிய அன்பு, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றிற்கு இயேசுநாதர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இயேசுநாதரின் வாழ்க்கை நியாயத்திற்காகவும், சமூகத்திலிருந்து ஒதுக்கி தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இயேசுநாதர் அவர்களின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, பல்வேறு இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை மேலோங்கச் செய்வதற்கும், நமக்கிடையே நிலவுகின்ற நம்பிக்கையின்மையை அகற்றுவதற்கும் இப்புனித உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஒரே நாட்டு மக்களாக நாம் அனைவரும் முயற்சித்தல் வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

எமது நாட்டின் வரலாற்றிலே முக்கியமானதொரு காலகட்டத்தை நாம் தற்போது அடைந்துள்ளோம். எனவே உயிர்த்த ஞாயிறு தினத்தின் உண்மையான தாற்பரியங்களை அடைந்து, அனைத்தின மக்களும் சமத்துவமாகவும், சமாதானமாகவும், நம்பிக்கையுடனும் வாழ்வதற்கான நல்லிணக்கம் ஏற்படக் கூடிய எதிர்காலத்தை அடைந்துகொள்வதற்காக அனைத்து சவால்களுக்கும் முகம்கொடுத்து ஒன்றிணைந்து பணியாற்றுவதற்காக அனைவரும் கைகோத்து செயற்படுவதற்கு முன்வருமாறு இலங்கை மக்கள் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.

**இரா. சம்பந்தன்**
(எதிர்க்கட்சித் தலைவரும்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்.

# கல்லறை திறந்தது காரிருள் மறைந்தது கிறிஸ்து உயிர்த்தார் அல்லேலூயா!



*''இதோ உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்''*
(மத்தேயு 28:20)

தியாகத்தின் திரு உருவம் கிறிஸ்து கல்வாரியில் தன் னையே தியாகப் பலியாக்கிய அன்பின் வடிவம் ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்'' என்ற வள்ளுவர் கூற்றிற்கிணங்க கல்லறையைக் காலியாக்கியது அன்பு. வழங்கத் தெரிந்தவர்கள் தான் வாழத் தெரிந்தவர்கள். உயிர்த் தியாகம் செய்வது என்பது ''தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எதுவும் இல்லை'' என்று போதித்த வார்த்தையை வாழ்வாக்கி உயிர்த் தெழுதலால் மனுக்குலத்துக்கு ஒரு விடிவைப் பெற்றுக் கொடுத்து ''காரிருள் சூழ்ந்து மரண் நிலையில் இருந்து வந்த மக்களின் வாழ்வுக்குப் பேரொளியாக உயிர்த்தெழுந்தார் பரமன் கிறிஸ்து.

இன்றைய எமது சமுதாயத்தில் ஆணவத்தை அன்பால் வெல்லவும் பகிர்தலை எம் இதயவரிகளாக்கவும் அன்புப் பசியில் இருப்போருக்கு அன்பைப் பகிரவும் ஆன்ம பசியில் இருப்போருக்கு ஆறுதலையும் கொடுக்கவும் மன்னிப்பிளந்த மனநிலையில் வாழ்வில் விசுவாச வாழ்வின் விளிம்பில் தவிப்போருக்கு மன்னிப்புப் பெற்றிடவும் வழி சமைத்துக் கொடுத்தலே கிறிஸ்துவின் உயிர்ப்பு அர்த்தம் பெற்றிட முடியும்.

இயேசு கிறிஸ்துவின் உத்தானம் இறைமனித உறவை மீண்டும் இணைத்தது, இருள்தோற்றாலும் மரணம் மரணித்தாலும், ஆதியிலே எமது ஆதிப் பெற்றோரின் பாவம் அதனால் மூடப்பட்ட விண்ணக வாயில் மனுக்குலத்துக்குத் திறக்கப்பட்டது.

மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக் கொள்ளாத வரை ஒளி சுடர்விட முடியாது... எனவே அது தன்னை அழித்துக் கொள்ளத் தயாராகிறது. இருளை அழிக்கத் தன்னை அழிக்கிறது. ஒளி கொடுக்கிறது. அதேபோல தன்னை அர்ப்பணிக்க முற்ப டாத எவரும் பிறருக்கு வழியாக, ஒளியாக வாழ்வாக இருக்க முடியாது என்ற சிந்தனையை இயேசுவின் வெற்றுக் கல்லறை நம்முடைய உயிர்ப்பு வாழ்வின் மணிமகுடம். நம் உடல், உயிர், ஆன்மா இயேசுவின் உயிர்ப்பை அனுபவமாக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருமுழுக்கு மூலம் கிறிஸ்துவோடு வாழ்ந்து அவரோடு மரித்து அவரது உயிர்ப்பில் பங்கு கொள்ள புதுப்பிறப்பு அடைகின் றோம். புதிய வாழ்வு பெறும் மக்களாகி றோம்.

இன்று நாம் காணும் பரிதாப நிலை பல புதிய வழிமுறைகள் மூலம் தவக் கால ஆயத்தம் செய்தோம். பல புதியவர்கள் திடீர் என்று அழைக்கப்படுவதும் தியானம், பாங்கு காட்டுதல் ஆற்றுப்படுத்துதல் யாத்திரை கள், புதிய திருத்தல சிலுவைப் பாதை செய்வதற்காக அழைத் துச் செல்லல் குழுக்கள் மூலம், குடும்பங்கள் தரிசிப்பு சிறு குழுக்கள் சிலுவைப் பாதைகள் இசைக் கருவிகள் முழக்கம் இட்டும் கவரப்படும் பிரசுரங்கள் மூலம் வழிநடத்துவார்கள் சிறப்பிடம் கொண்டு பாடுகளின் பாதையில் இயேசுவின் திருவுருவம் மறைக்கப்பட்டும் புதிய கல்வாரிப் பயணம் இப்படியான ஆயத்தங்கள் செய்து இறுதியில் புனித வாரத்துக்குள் வந்து விடுகிறோம்.

ஆனால், எல்லோரும் ஒரு கிறிஸ்து இயேசுவின் மறையுடலின் உறுப்புக்கள் என்றநிலைக்கு வருவதற்கு எத்தனையோ தடைகள் தடுப்பு முகாம்கள், பாதுகாப்பு வேலிகள், அடையாள அணிவகுப்புகள், வேறுபாடுகள், ''உயிரற்ற விசுவாசம் செயலற்றதே.''

உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன். கல்லறையோ, சாவோ, இயேசு வைக் கட்டிப்போடவில்லை. ஏனெனில், அவர் வாழ்வின் கடவுள் வாழும் கடவுள் உயிர்த்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் அவருடைய நற்செய்தியை வாழ்வாக்குவோம். ''தாகமாயிருக்கிறேன்'' (யோவான் 19:28) என்று கூறிய இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கும் மனுக்குலத்தின் மேல் கொண்ட தாகம்.

இதனை எமது திருத் தந்தை பிரான்சிஸ் மனிதர்க்கிடையே, பசியை விட தாகம் ஒரு பெரும் தேவையாக உள்ளது என்பதை உணர வேண்டும் என்கிறார். உலக அமைதிக்காக இத்தாலியில் அசீலி நகரில் புனித பிரான்ஸிஸ் அசீலியாரின் பசிலிக்காவில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாட்டில் வழங்கிய தியானத்தில் இவ்வாறு தெரி வித்தார். இயேசு கொண்ட தாகம்... அன்பு என்ற வற்றாத ஊற்றை வழங்குவதற்காக அவர் அதிகதாகம் கொண்டிருந்தார்.

இன்று போரின் விளைவுகளால் துன்புறும் இடம் பெயர்ந்தோர், உறவுகளைத் தொலைத்தோர், அரசியல் கைதிகள் மற்றும் வறுமை, அடிமைநிலை போன்றவற்றால் சிறைப்பிடிக்கப்பட்டோர் எழுப் பும் அழுகுரல் கேட்டாலும் கேட்க முடியாமல் தடைப்பட்டிருக்கும் சுவர்களைத் தகர்த்து ''உண்மை'' வெளிப்பட உயிர்த்தெழ மனித சமூகம் இயேசு கிறிஸ்து உயிர்த்து எமக்குத் தந்த மகிழ்ச்சியின் நற்செய்தியை கேட்க வேண்டும். ''உங்களுக்குச் சமாதானம்!'' இதன்மூலம் பெறும் நாம் பெறும் அழைப்பு என்ன? நாம் அவரின் உயிர்ப் பின் சாட்சிகளாக, சமாதானத்தின் கருவிகளாக சான்று பகிர வேண்டும். ஆகவே, தீயவனின் ஆதிக்கத்துக்கும் அதிகார வர்க் கத்துக்கும் ஆணவத்துக்கும் அடக்குமுறைக்கும் அடிமைப் பட்டுப் போகாமல் உத்தானத்து இயேசு கிறிஸ்து உலகம் தர முடியாத சமாதானத்தை தந்துள் ளார். அதற்குச் சாட்சிகளாக வாழ்வோம். மேலுலகைச் சார்ந்தவற்றையே நாடி புதிதாய் வாழ்வோம். புதுயுகம் படைத் திடுவோம். அல்லேலூயா! அல்லேலூயா!

**அருட்சகோ. செ. தொபியாஸ் CMSF**

pagebordersdesigns.com

# உயிர்ப்பு விழா வாழ்த்து



பாவத்தில் கிடந்து அவதியுற்ற இந்த உலகத்தை, உலகத்தின் சகலரையும் மீட்டு விடுதலை கொடுக்க தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பி அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் நம்மனைவருக்கும் பாவத்தில் நின்று முழு விடுதலை தந்தார்... அவ்வாறான இந்த உயிர்தெழுதலின் நாளில் எல்லா மனிதருக்கும் விடுதலையும் சந்தோஷமும் நிறைவாக கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதோடு- நாட்டிலே அன்பும் சமாதானமும் நிலை பெறவும் உயிர்த்த யேசுவின் ஆசிகள் கிடைக்கவும், உலகமெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடி மகிழும் இவ்வேளையில் அனைவர் மனங்களிலும் அன்பும் சமாதானமும் நிறைந்து மகிழ்ச்சியாக இவ் விழாவைக் கொண்டாட அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் எனது உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பா. டெனீஸ்வரன்**
மீன்பிடி, போக்குவரத்து,
கிராம அபிவிருத்தி, அமைச்சர், வடக்கு மாகாணம்.




பொன்.வேணு கிருஷ்ணா

**போர்டோரிகோ தேசியக் கட்சியின் உதயம்:**

1929 இல் அமெரிக்காவில் ஏற்பட்ட பெரும் பஞ்சம் போர்டோரிகோவை வெகுவாகப் பாதித்தது. அதன் விளைவாக, போர்டோரிகோவில் எதிர்ப்பியகங்களும் உருவாகின. பெட்ரோ அல்பிசு கேம்பஸ் தலைமையிலான போர்டோரிகோ தேசியக்கட்சியின் சார்பாக, புதிய விடுதலை இயக்கம் துவங்கப்பட்டது.

**"போர்டோரிகோவில் அமெரிக்கா செலுத்தி வரும் ஆதிக்கம், சமூக விரோதமானது"**

என்று வெளிப்படையாக விமர்சித்தது தேசியக்கட்சி. அமெரிக்கா நியமித்த அதிகாரிகளையும், நீதிமன்றங்களையும்நிராகரித்துபோர்டோரிகோவின் விடுதலைக்குச் சர்வதேச ஆதரவையும், தலையீட்டையும் கோரியது. தங்களது நாட்டினை ஆக்கிரமித்திருக்கின்ற அமெரிக்காவை எதிர்த்து ஆயுதம் ஏந்தவும் போர்டோரிகோ மக்களுக்கு உரிமை இருக்கிறது என்று முழங்கியது தேசியக்கட்சி.

1934 இல் ஆயிரக்கணக்கான நிலமற்ற விவசாயிகள் தாங்கள் அடிமைக் கூலிகளாக வேலை பார்த்து வந்த கரும்பு விளைநிலங்களில் இருந்து வெளியேறி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளின் போராட்டம் வெகுவேகமாகப் பரவியது.

தேசியக்கட்சியின் தலைவரான பெட்ரோ அல்பிசு கேம்பஸை இப்போராட்டத்திற்குத் தலைமை ஏற்குமாறு



அழைப்புவிடுத்தனர். தேசியக்கட்சியினர் இணைந்ததும், போராட்டம் பெரிய அளவில் வெடித்தது. போர்டோரிகோ காவல்துறையினரால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனது. அமெரிக்கப்பெருநிறுவனங்கள் முற்றிலும் இயங்கமுடியாமல் தவித்தன. அமெரிக்க எப்.பி.ஐ இன் குழுக்கள் மறைமுகமாக ஊடுருவி, விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயற்சி செய்தன. காவல்துறையினர் இராணுவமயமாக்கப்பட்டனர். எண்ணற்ற கொலைகள் செய்யப்பட்டன. பெட்ரோ அல்பிசு கேம்பஸை கொலை செய்யப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**"விடுதலைப் போராட்ட தேசியக் கட்சியினரைக் கொன்றால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளைக் கொல்ல வேண்டிவரும்"**

என்று பெட்ரோ அல்பிசு கேம்பஸ் எச்சரிக்கை விடுத்தார். 1935 ஒக்ரோபரில், மூன்று முக்கிய விடுதலைப் போராட்ட இயக்கத்தினர், காவல்துறையால் கொல்லப்பட்டனர். பதிலுக்கு அமெரிக்கக் கேணல் பிரான்செஸ்ஸை கொன்றனர் விடுதலைப் போராட்டத்தினர். இக்கொலையைச் செய்த இரு இளைஞர்களைக் கைது செய்து காவல் துறை தலைமையகத்தில் வைத்து விசாரணையின்றிக் கொன்றது அமெரிக்க ஆதரவு காவல்துறை.

1936 ஜூலையில் பெட்ரோ அல்பிசு கேம்பஸ் கைது செய்து 10 ஆண்டுகள் தண்டனை விதித்து அமெரிக்கப் பெடரல் சிறைக்கு அனுப்பியது அமெரிக்க அரசு.

**பொன்ஸ் படுகொலை:**

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 ஆம் தேதி அடிமை ஒழிப்பு நாளாகக் கொண்டாடி வருகின்றனர் போர்டோரிகோ மக்கள். அதன்படி 1937 மார்ச் 21 இல், பொன்ஸ் நகரில் அமைதி ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். முறையாகக் காவல்துறையினரிடம் அனுமதி பெற்றே அதனை நடத்தினர். ஊர்வலம் துவங்குவதற்கு முன்னர், அனுமதி மறுக்கப்பட்டதாக அறிவித்தது காவல்துறை. இருப்பினும் இளைஞர்களும், பெண்களும் வெள்ளை உடையில் பயமரியாதவர்களாக அமைதியான முறையில் ஊர்வலத்தைத் துவங்கினர். அவர்களுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான காவல் துறையினர், ஆயுதமின்றி நிற்கும் அப்பாவி மக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அம்மக்கள் சரணடைந்தும் அவர்களைச் சரமாரியாகச் சுட்டுக் கொன்றனர். 22 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். 100 பேர் இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர்.

**"வெள்ளை உடையில் சென்றஎன் அம்மா, சிவப்பு உடையில்தான் திரும்பி வந்தார்"**

என்று சிறுவனாக இருந்த மிராண்டா தனது டைரிக்குறிப்பில் பின்னாளில் இச்சம்பவம் குறித்து எழுதினர். (மிராண்டா பின்னாளில் முக்கியத் தலைவராகி, போர்டோரிகோவின் சுதந்திரத்திற்காகப் போராடி, 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்கச் சிறையில் இருந்தவர்)

கடுமையான காயங்களோடு உயிரிழக்கும் தருவாயில் தன்னுடைய உடலிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த இரத்தத்தால்,

**"குடியரசு வெல்லட்டும். கொலைகாரர்கள் வீழட்டும்" என்று எழுதி முடித்ததும் உயிரிழந்தான்.**

இறந்தவர்களின் இறுதிச்சடங்கு நிகழ்விற்கு, பொன்ஸ் நகரில் மட்டும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இந்தத்துப்பாக்கிச் சூட்டினை ஆணையிட்டு நடத்திய அமெரிக்காநியமித்த போர்டோரிகோவின் கவர்னர் வின்ஷிப்பைத் திரும்பப்பெற மறுத்துவிட்டார் அப்போதைய அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட். 1938 இல், தன்னுடைய இராணுவ பலத்தைக் காட்டி மக்களைப் பயமுறுத்த, மிகப் பெரிய இராணுவ அணிவகுப்பை நடத்தினான் அதே கவர்னர் வின்ஷிப்.


இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில், போர்டோரிகோவின் கிழக்குப்பகுதியில் உலகிலேயே மிகப்பெரிய கடற்படைத்தளம் அமைக்க முடிவெடுத்தார் அமெரிக்க அதிபர் ரூசுவெல்ட். இதனை போர்டோரிகோ தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். எதிர்த்தவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர்; கடும்தண்டனைக்குள்ளாகினர்; ஆனாலும் ஆட்சியாளர்கள் போடுகிற எல்லாச் சட்டங்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்கிற எதிர்ப்புணர்வுப் பாடத்தினைப் பிற்கால சந்ததியினருக்குக் கற்றுக் கொடுத்தது இந்நிகழ்வு.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னால் அமெரிக்கா ஒரு மிகப்பெரிய வல்லரசாக உருவாகத் துவங்கியது. இனி வரும் நூற்றாண்டு அமெரிக்கர்களின் நூற்றாண்டு என்று அமெரிக்க ஆட்சியாளர்கள் திமிரோடு முழங்கினர். போர்டோரிகோவின் விவசாயிகள் அமெரிக்கப் பெருமுதலாளிகளோடு போட்டி போட முடியாமல் தங்களது நிலங்களிலிருந்து வெளியேறத் துவங்கினர். நிலங்களை இழந்தனர். அவர்களின் துயர் ஒருபுறம் இருக்க உலகின் மற்றனைத்து நாடுகளிலும் காலனியாதிக்கத்தை எதிர்த்து அப்பகுதி மக்களெல்லாம் போராடிக் கொண்டிருந்த காலகட்டமது. 1949 இல் மாவோ இன் தலைமையில் மிகப்பெரிய வெற்றியினை ஈட்டியிருந்தது சீனப் புரட்சிகர அமைப்பு. அப்போது தான் இரண்டாம் உலகப்போருக்கு அமெரிக்காவுக்கு உதவிய போர்டோரிகோவின் இராணுவ வீரர்கள் அனைவரும் போர் முடிந்து தங்களது நாடு திரும்பினர்.



அவர்கள் திரும்பி வந்து பார்க்கையில் அவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் எதுவும் அங்கு உருவாக்கப்பட்டு இருக்கவில்லை. அமெரிக்காவின் பிடி மேலும் மேலும் போர்டோரிகோவை ஆக்கிரமித்து வைத்திருந்ததைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

1947 இல் அல்பிசு கேம்பஸ் அமெரிக்கச் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு போர்டோரிகோவிற்கு திரும்பினார். அவர் திரும்பிய பின்னர்




Ten thousand miles from tip to tip.—Philadelphia Press.

விடுதலைப் போராட்ட இயக்கங்களை ஒருங்கிணைக்கும் பணியில் இறங்கினார். ஆனால் அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அமெரிக்காவை எதிர்த்து விடுதலை கேட்பதே சட்டவிரோதமானது என்கிற சட்டத்தினை அமெரிக்க அரசு நிறைவேற்றியது. அந்தச் சட்டத்திற்குப் பெயர் little smith act. அச்சட்டத்தைப் பயன்படுத்தி போர்டோரிகோ தேசிய கட்சியினரை கடுமையாகத் துன்புறுத்தியது அமெரிக்கஅரசு. அல்பிசு கேம்பஸ் ஐ எப்போதும் பொலிஸ் கண்காணிப்பில் வைத்திருந்தது. அவர் எங்குச் சென்றாலும் காவல்துறையினர் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர் மளிகைக் கடைக்குச் சென்றால் கூட காவல்துறையினர் அங்கும் சென்று கடை விற்பனையாளர்களிடம் விசாரணை நடத்தினர். 1948 ஆம் ஆண்டுத் தேசியக் கட்சியினர், அமெரிக்கா நடத்தும் கண்துடைப்புத் தேர்தல்களைப் புறக்கணிக்க வேண்டி மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தேர்தலை புறக்கணித்தனர்.


**அமெரிக்க காலனியின் 100 ஆண்டு அமெரிக்க அதிபர் ட்ருமனின் தந்திரம்:**

பனிப்போருக்கு வித்திட்டு உலகையே இரண்டாகப் பிரித்து, இன்று வரை உலக நாடுகளை ஆக்கிரமிக்கும் அமெரிக்காவின் பணியைத் துவக்கி வைத்த அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ருமன், போர்டோரிகோவிற்கும் ஒரு வழியினைக் கண்டறிந்தார். போர்டோரிகோவில் துவங்கி இருந்த விடுதலைப் போராட்ட இயக்கங்களை மிகக்கடுமையாக நசுக்கினார். அதே வழிமுறைதான் பின்னாளில் கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய அமெரிக்காவின் Black Panther கட்சியின் மீதும் பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்காவின் போர் செயலாளர் லூயி ஜான்சன் போர்டோரிகோவிற்குச் சென்று அங்கிருக்கும் அமெரிக்க இராணுவத் தலைவர்களைச் சந்தித்தார். போர்டோரிகோவின் தேசியக்கட்சியினை உடைக்க வேண்டும் அல்லது அதன் தலைவர் அல்பிசு கேம்பஸை கொல்ல வேண்டும் என்று உத்தரவு போட்டார். இச்செய்தி தேசியக் கட்சியினரைச் சென்றடைந்ததும், அவர்கள் மக்களைத் தயார்ப்படுத்தினர். மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், இச் செய்தியினை ஊடகங்கள் மறைத்தன. எந்த ஊடகமும் தேசியக் கட்சியினரின் செய்திகளை விளம்பர மாகக்கூட வெளியிட முன் வரவில்லை. அதனால் போர்டோரிகோ தேசியக் கட்சியினர், ஆங்காங்கே பொதுக் கூட்டங்களும், தெருமுனைக் கூட்டங்களும் நடத்தி மக்களுக்கு செய்தி சொல்லினர்.


(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




117

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### சந்திரிகாவின் வாக்குறுதிகள்

நல்லெண்ணத் தொனியில், நம்பிக்கையூட்டும் வகையில், சந்திரிகா அம்மையார் உறுதிமொழிகளைத் தந்த போதும், எடுத்த முடிவுகளையும் கொடுத்த உறுதிகளையும் நிறைவு செய்வதில், வழமை போலச் சிங்கள அரசு இழுத்தடிப்புத் தந்திரத்தையே கையாண்டது. எரிபொருள்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன என சந்திரிகாவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட போதும், டீசல், பெற்றோல் போன்றவற்றை வடக்குக்கு வர விடாது இராணுவம் தடைகளை இறுக்கியது. அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடைகள் தொடர்ந்தும் செயல்முறையில் இருந்து வந்தன. தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பொருள்கள் எதுவுமே வவுனியா எல்லையிலுள்ள இராணுவ இரும்புச் சுவர்களைத் தாண்டிவர முடியவில்லை. சந்திரிகா அம்மையார் உறுதி வழங்கி, பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதிய போதும் நடைமுறை யதார்த்தம் வேறாகவே இருந்தது. எதிரிகள் குடிகொண்டுள்ள யுத்த பூமியாகவே தமிழர் தாயகத்தைப் பாதுகாப்பு அமைச்சு நிர்வாகிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும் கருதினர். இவர்களது கூட்டுச் சதியால் பொருளாதார முற்றுகை மேலும் மேலும் இறுகியதே தவிர, தளர்த்தப்படவில்லை. இதனால், வர்த்தமானி அறிவிப்புகள் வவுனியா எல்லையைத் தாண்டிவர முடியவில்லை.

மீன்பிடித் தடைகளும் வழமை போலவே தொடர்ந்து அமுலில் இருந்தன. வடக்குக் கிழக்குக் கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படையினர் தன்னிச்சையாக ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தினர். பகை நிறுத்த உடன்பாட்டு விதிகளையோ, அன்றி மீன்பிடிக் கட்டுப்பாட்டுத்தளர்வுகளையோ கடைப்பிடிக்காது, மீனவர் மீதும் கடற்புலிகள் மீதும் கடற் படையினர் தாக்குதல்களை நடத்தினர். கடற்படையின் தொடர்ச்சியான வெறியாட்டத்தில் அரசின் உறுதிமொழிகள் அர்த்தமிழந்து போயின.

கிழக்கு மாகாணத்தில் நெருக்கடி நிலை தொடர்ந்தது. விடுதலைப் புலிப் போராளிகளின் நடமாட்டத்தை அனுமதிக்க இராணுவம் மறுத்தது. வீதிச் சோதனைச் சாவடிகளில் எமது போராளிகள் தடுத்து நிறுத்தப்பட்டு இம்சைக்கு ஆளாகினர். மட்டக்களப்பு, மண்டூர் பகுதியில், எமது மூத்த போராளி ஒருவர் இராணுவத்தினரால் வீதியில் மறித்து, கடுமையாகத் தாக்கப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் அவமானத்துக்கு ஆளாகியமையால் 'சைனைட்' குப்பியை விழுங்கித்தற்கொலை செய்து கொண்டார். சில சந்தர்ப்பங்களில் எமது போராளிகள் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர். அவர்களது ஆயுதங்களும் பறிக்கப்பட்டன. கிழக்கின் சில பகுதிகளில் அங்குமிங்குமாக – துப்பாக்கிச் சண்டைகளும் வெடித்தன. பகை நிறுத்த உடன்பாடு சம்பந்தமாக, கிழக்கில், எமது போராளிகள் மத்தியில் குழப்ப நிலை நிலவியது. தெளிவாக வரையறுக்கப்படாத பகை நிறுத்த உடன்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இராணுவம், எமது போராளிகளின் நடமாட்டத்தையும், நட வடிக்கைகளையும் கட்டுப்படுத்த முனைந்ததால் நிலைமை படுமோசமாகியது.

சிங்கள ஆயுதப் படைகள் வலுமிக்க சக்தியாகத் துரிதகதியில் கட்டி எழுப்பப்பட்டமை விடுதலைப் புலிகளின் தலைமைக்குச் சந்தேகத்தையும் அங்கலாய்ப்பையும் கொடுத்தது. நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்து, தரைப் படைக்கான ஆட்சேர்ப்பையும் பயிற்சித் திட்டங்களையும் செயற்படுத்தி, வான் படைக்கும் கடற் படைக்குமாகக் குண்டு வீச்சு விமானங்களையும் போர்க் கப்பல்களையும் வாங்கியமையிலிருந்து ஓர் உண்மை எமக்குப் புலனாகியது. அதாவது, சிறிலங்காவின் முப்படைகளையும் பெரிய அளவில் விரிவாக்கம் செய்து, நவீனமயப்படுத்துவதில் சந்திரிகாவின் அரசு தீவிரமாகச் செயற்பட்டு வுருகிறது என்பது எமக்குத் தெளிவாகியது. சமாதானமும் இன ஒற்றுமையுமே தனது இலட்சியம் எனப் பறைசாற்றி, ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நாடகத்தை அரங்கேற்றியவாறு, மறுபுறத்தில், ஒரு பிரமாண்டமான போர் இயந்திரத்தைக் கட்டியெழுப்பும் சந்திரிகா அரசின் தந்திரோபாயத்தில் எமக்கு ஆழமான சந்தேகம் எழுந்தது. படைச் சமவலு பேணப்பட வேண்டும் என்ற போர் நிறுத்த உடன்பாட்டின் நியமத்துக்கு முரணாக அரசு செயற்பட்டதும் எமக்கு சந்திரிகா மீதான நம்பிக்கையைத் தளர்த்தியது.

மேற்கூறிய மெய் நிலைமைகளைப் பரிசீலனை செய்த பொழுது, சந்திரிகா அரசுடன் பேச்சுகளைத் தொடர்வதா அல்லது பேச்சுகளிலிருந்து விலகிக் கொள்வதா என்ற ஒரு கடினமான முடிவு எடுக்க வேண்டிய சங்கடமான நிலைக்குள் நாம் தள்ளப்பட்டோம். பேச்சுகளிலிருந்து விலகும் எதிர்மறையான முடிவை நாம் எடுப்போமானால், சர்வதேச ரீதியில் எமது விடுதலை இயக்கத்தின் நம்பகத்தன்மையை அது பெருமளவில் பாதிக்கும் என்பது எமக்கு நன்கு தெரியும். ஆனால் அதே சமயம், அர்த்தமற்றதான பயன்தராத, மக்களின் நலன் பேணாத பேச்சுகளில் காலத்தை வீணாக்குவோமானால், இராணுவ ரீதியாகப் பாதூரமான பின்னடைவுகளை நாம் எதிர்கொள்ள நேரும். சமாதான முயற்சியில் சந்திரிகா அரசு இதய சுத்தியுடன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை எனப் பிரபாகரன் உறுதியாக நம்பினார். ஓர் அந்தரங்க இராணுவத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குக் கால அவகாசம் தேவைப்பட்டதால், பேச்சு என்ற நாடகத்தை மேடையேற்றி விடுதலைப் புலிகளின் கவனத்தைத் திசை திருப்ப முனைகிறது சந்திரிகா அரசு எனப் பிரபாகரன் என்னிடம் கூறினார். எந்தவிதப் பயனுமின்றி அர்த்தமற்றதாகத் தொடர்ந்து இழுபடும் பேச்சுகளில் தளபதிகளும் போராளிகளும் நம்பிக்கை இழந்தனர். இலக்கின்றிப் பேச்சுகள் இழுபடுகின்றமையால் போராளிகளின் மனவுறுதி தளர்ந்து வருவதாகக் களத் தளபதிகள் பிரபாகரனிடம் முறையிட்டனர். பகை நிறுத்த உடன்பாட்டுவிதிகளும் கடப்பாடுகளும் அரச ஆயுதப் படைகளுக்கே சாதகமாக அமைந்திருக்கின்றன என எமது போராளிகள் மத்தியில் பரவலாக ஒரு கருத்து நிலவியது. இந்த உடன்பாடு அமைதியையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்கத் தவறியதுடன், எமது போராளிகளின் செயற்பாடுகளையும் வெகுவாகக் கட்டுப்படுத்தியது. அத்துடன், அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் மத்தியில் பகையுணர்வும் முறுகல் நிலையும் வளர்ந்து வந்தன. போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் சமாதானக் குழுக்கள் செயற்படாதமையால் முரண்பாடுகள் முற்றி, மோதல் வெடிக்கும் கொந்தளிப்பான நிலை உருவாகியது.

கிழக்கில் எமது கெரில்லா அணிகளின் நடமாட்டம் தடுத்து நிறுத்தப்பட்டதால், அவர்களது இருப்புக்கே பேராபத்து எழுந்தது. போராளிகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு, போராட்ட இலட்சியத்தில் அவர்களுடைய உறுதிப்பாடு ஆகிய பண்புகளில் அதிசிரத்தை காட்டும் பிரபாகரனுக்கு புலி வீரர்கள் விரக்தியடைந்து மனவுறுதி தளர்வதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கிழக்கு மாகாணத்தில், சிங்கள இராணுவத்தின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து எமது போராளிகள் அனுபவித்து வந்த அவமானமும் அவல நிலையும் பிரபாகரனுக்குச் சினத்தை மூட்டியது. அடுத்ததாக, சமாதானப் பேச்சுகள் குறித்துத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஆழமான ஏமாற்றத்தையும் நம்பிக்கையீனத்தையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டியிருந்தது. பேச்சுகள் தொடங்கிய ஆரம்ப காலத்தில் எமது மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, நம்பிக்கை, எதிர்பார்ப்பு எல்லாமே காலப் போக்கில் படிப்படியாக மறைந்து இப்பொழுது விரக்தியாக, வெறுப்பாக, நம்பிக்கையீனமாக உருவெடுத்திருந்தன. தமது நாளாந்த சீவியத்துக்கு அடிப்படையான ஜீவாதாரத் தேவைகளைக் கூட இந்தப் பேச்சுகள் நிறைவு செய்யவில்லை என மக்கள் ஏமாற்றமடைந்தனர். சந்திரிகா அரசு ஏமாற்று வித்தை காட்டி, நயவஞ்சகமாக நடந்து கொள்கிறது என்பதை எமது மக்கள் நன்கு உணர்ந்தனர். இதனால், பயனற்ற இந்தப் பேச்சுகளைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

நாம் விதித்த காலக்கெடு நெருங்கியது. ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய கட்டம் வந்தது. காலக்கெடுவின் கடைசி நாளில் கூட சந்திரிகாவின் 'ஆக்கபூர்வமான முடிவுகள்' எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை. பேச்சுகளைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்பது தெளிவாகியது. பேச்சில் இருந்தும் பகை நிறுத்த உடன்பாட்டில் இருந்தும் விலகிக் கொள்வதென விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உறுதியான முடிவை எடுத்தது. இந்த முடிவை அறிவித்து, 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் கீழ்க்கண்ட கடிதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*
*18 ஏப்ரல் 1995*

*கனம். சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*
*சிறிலங்காவின் ஜனாதிபதி*
*ஜனாதிபதியின் தலைமைச் செயலகம்*
*கொழும்பு*

*அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,*

*உங்களது 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் திகதியிடப்பட்ட கடிதத்துக்கு மிகவும் நன்றி.*

*உங்களது கடிதத்தின் உள்ளடக்கத்தை மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்தோம். நாம் எழுப்பிய முக்கியமான பிரச்சினைகளுக்கு நீங்கள் அளித்த பதில்கள், எமது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யத் தவறியமையால், எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*கடந்த ஆறு மாதங்களாகத் தொடர்ந்த பேச்சுகளில் எத்தனையோ தடவைகள் உங்களுடன் வாதாடி, உங்களை இணங்க வைக்க நாம் எடுத்த பகீரத முயற்சியின் பயனாக, ஏற்றில் எரிபொருள்களுக்கும் வேறு சில பொருள்களுக்கும் தடைகளைத் தளர்த்தி ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்தீர்கள். இந்த முடிவுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு, 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாளைய உங்களது கடிதத்தில் எமக்கு அறிவிக்கப்பட்ட போதும், எமது காலக்கெடுவை முறியடிக்கும் நோக்கத்துடன் முடிவுகளை நடை முறைப்படுத்துவதில் வேண்டுமென்றே தாமதங்கள் உண்டு பண்ணப்பட்டன என்பதை நாம் ஏமாற்றத்துடன் தெரிந்து கொண்டோம்.*

*மற்றைய பிரச்சினைகளைப் பொறுத்தவரை உங்களது பதில்கள் அரைகுறையாகவும், மழுப்பலாகவும், பிடிமாணம் அற்றனவாகவும், எதிர்காலப் பேச்சுகளில் தீர்மானிக்க வேண்டியனவாகவும் அமைந்திருந்தன. மார்ச் மாதம் 14 ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதத்தில் மீன்பிடியில் விதிக்கப்பட்ட சகல தடைகளும் நீக்கப்படுமென உறுதிமொழி தரப்பட்ட போதும் பெரும் அளவிலான மீன்பிடி வலயங்களில் மீன்பிடிக்குத் தடை இருந்து வருகிறது.*

*பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்குப் பாதை திறப்பது, கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகளின் நடமாட்டச் சுதந்திரம் போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு நீங்கள் எடுத்துள்ள முடிவுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. ஏனென்றால், எதிர்காலப் பேச்சுகளில் அவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.*

*முக்கியமான பிரச்சினைகளை நீங்கள் தட்டிக் கழிக்கும் போக்கைப் பார்க்குமிடத்து, அமைதியையும் இயல்புநிலையையும் தோற்றுவிக்க உங்களது அரசு நேர்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்பதும் இராணுவ நலனைப் பேணுவதிலேயே அக்கறை காட்டுகிறது என்பதும் தெளிவாகிறது. அத்துடன், போர் நிறுத்தத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஆயுதப் படைகளின் போர் வலுவைக் கட்டி வளர்ப்பதில் உங்களது அரசு சகல முயற்சிகளையும் செய்து வருகிறது என்பதை நாம் நன்கறிவோம். இராணுவச் சமவலு பேணப்பட வேண்டும் என்ற அமைதி உடன்பாட்டுக் கடப்பாடுகளை மீறுவதாகவே உங்களது செயற்பாடுகள் அமைகின்றன.*

*எமது காலக்கெடு முடிவடையும் திகதியாகிய 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாளுக்கு முன்னராக, எமக்குத் திருப்தி அளிக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாததால் பேச்சுகளிலிருந்தும் பகை நிறுத்த உடன்பாட்டிலிருந்தும் விலகிக் கொள்வதென்ற வேதனைக்குரிய முடிவை எடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழி இருக்கவில்லை.*

*இப்படியான துரதிஷ்ட நிலை எழுந்தமைக்கு வருந்துகிறோம்.*

*உங்கள் நேர்மையுள்ள*
*வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

(தொடரும்...)

# 14 ஆயிரம் வருட பழமையான கிராமம் கனடாவில்!



கனடாவின் அருகில் 14 ஆயிரம் ஆண்டு களுக்கு முன் இருந்த கிராமத்தை ஆராய்ச் சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கனடாவின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பலவருடங்களாக பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவருகிறார்கள்.

அதில் தற்போது கனடாவின் விக்டோரியா மாகாணத்திலிருந்து 500 கிலோ மீற்றர் அருகில் உள்ள Triquet தீவில் ஒரு கிராமத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கிராமம் 14 ஆயிரம் வருடங்கள் பழமையானது என்று அவர்கள் கூறியுள்ளனர். இது எகிப்து பிரமிட்கள் தோன்றியதற்கு முன்னர் தோன்றிய கிராமம் என்று தெரியவந்துள்ளது.-

இதுதொடர்பில் ஆராய்ச்சியாளர் Alisha Gauvreau கூறுகையில், தற்போது இந்தக் கிராமத்தில் சில தொல்பொருள்களை கண்டு பிடித்துள்ளோம்.

விரைவில் நெருப்பு மூட்டப் பயன்படும் சிக்கி முக்கி கற்கள், மீன் கொக்கிகள் போன்றவை கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

இங்கிருந்து அந்த காலத்திலேயே மக்கள் வேறு இடத்துக்கு குடி பெயர்ந்துள்ளனர் என கருதுகிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

# உலகின் முன்மாதிரியான பொழுதுபோக்கு நகரம் சவூதியில்!


உலகின் முன் மாதிரியான பொழுதுபோக்கு நகரம் சவூதி அரேபியாவின் தலை நகரான ரியாத்தின் எல்லையில் அமைக்கப்பட உள்ளதாக அந்தநாட்டு அரசு தகவல் வெளியிட்டுள்ளது.


334 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட அந்த பொழுது போக்கு நகரம், கலாசாரம், விளையாட்டு மற்றும் மகிழ்ச்சியாக பொழுதுபோக்கும் செயற்பாடுகளுக்கான இடமாக அமையும். சிக்ஸ் ப்ளாக் பூங்கா மற்றும் சபாரி பூங்காவும் அமைய உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் முதல்முறையாக இவ்வாறான நகரம் அமையவுள்ளதாக அந்த திட்டத்துக்கான அறிவிப்பில் பெருமையுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொழுதுபோக்கு நகரத்திற்கான கட்டுமானப் பணி 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கின. 2022 ஆம் ஆண்டில் அவை நிறைவடையும் என்று துணை இளவரசர், முகமது பின் சல்மானால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரசு, பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துவது மற்றும் பல்வேறு திட்டங்களால் எண்ணெய் வருமானத்தை மட்டும் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும், பல வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்ட விஷன் 2030, என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நகரம் அமைய இருக்கிறது.





# ஓய்வுபெற்ற அஞ்சலருக்கு 1,300 குழந்தைகள்!

அமெரிக்காவில் ஓய்வுபெற்ற அஞ்சலருக்கு முறைகேடாக ஆயிரத்து 300 குழந்தைகள் பிறந்துள்ள சம்பவம் டி.என்.ஏ . சோதனையில் நிரூபணமாகியுள்ளது.

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத் தில் உள்ள நாஷ்வில் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தனியார் விசாரணை அதிகாரி ஒருவர் அங்குள்ள 87 வயதான ஓய்வு பெற்ற அஞ்சலர் தான் காரணம் என்று பல்வேறு ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு அந்த தனியார் விசாரணை அதிகாரியைத் தொடர்பு கொண்ட இரு இளைஞர்கள், தங்களது உண்மையான தந்தையைக் கண்டுபிடித்துத் தர தனித்தனியாக முறையிட்டுள்ளனர்.

அதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் பல வெளியாகின. விசாரணையில் அந்த இரு இளைஞர்களின் உண்மையான தந்தை ஒரே நபர் என்பது தெரிய வந்தது.

அதனையடுத்து 15 ஆண்டுகளாக மேற்கொண்ட விசாரணையின் முடிவில் நாஷ்வில் பகுதியில் குடியிருக்கும் ஓய்வு பெற்ற அஞ்சலர் தான் இந்த ஆயிரத்து 300 குழந்தைகளுக்கும் உண்மையான தந்தை என்பதை டி.என்.ஏ. சோதனை மூலம் அவர் தெரிந்து கொண்டார்.

ஆனால் இந்த விவகாரம் தொடர்பாக பேசிய பலரும் தங்களுக்கு உண்மை தெரியும் என்றும், வெளியே சொல்லிக் கொள்ள அஞ்சுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஆயிரத்து 300 குழந்தைகளுக்குத் தந்தையானது தொடர்பில் விளக்கமளித்த அந்த அஞ்சலர்-

‘அந்தக் காலத்தில் கருத்தடை பிரபலமாகவில்லை. தற்போது இந்த விவகாரத்தில் தாம் வெட்கப்படவில்லை.

1960களில் நான் பிரபல நடிகர் போன்று இருந்துள்ளேன், பெண்களைக் கவரும் வசீகரம் எனக்கு இருந்தது.- என்றார்.

இருப்பினும் ஆயிரத்து 300 குழந் தைகளில் எவரும் அந்த முதியவா மீது வழக்குத் தொடுக்கவோ அவரை களங்கப்படுத்தவோ முன் வரவில்லை என்று அந்தத் தனியார் விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

# போதைக்கு அடிமையான பாம்பு சிகிச்சையின் பின் இயல்பு நிலைக்கு

ஆஸ்திரேலிய ஆய்வகம் ஒன்றில் கடந்த வருடம் நடத்தப்பட்ட அதிரடிச் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட, போதைக்கு அடிமையான மலைப்பாம்பு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களை தமது பாதுகாப்புக்காக வைத்திருப்பது வழக்கமாகிவிட்டது. அதன்படி, ஆறடி நீளமுள்ள இந்த மலைப்பாம்பை, கடந்த வருடம் ஆய்வகம் ஒன்றில் அதிகாரிகள் கைப்பற்றினர்.


பாதுகாப்புக்காக வளர்க்கப்பட்டுவந்த அந்தப் பாம்பிடம் போதைக்கு அடிமையானதன் அறிகுறிகள் தென்பட்டதைக் கண்டு அதிர்ச்சியுற்ற அதிகாரிகள், அந்தப் பாம்புக்கு மறுவாழ்வளிக்கத் திட்டமிட்டனர்.

இதற்காக, 14 சிறைக் கைதிகளைத் தெரிவுசெய்து அவர்கள் மூலம் இந்தப் பாம்பு பராமரிப்புக்கு உட்படுத்தப்பட்டது. கடந்த 7 மாதங்களாக ‘மறுவாழ்வு’ பெற்று வந்த மலைப்பாம்பு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்று மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி அறிந்த ஒருவர், அந்த பாம்பை செல்லப்பிராணியாக வளர்க்க விரும்பினார். இதையடுத்து, அதற்கான நீதி மன்ற அனுமதிக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கை நீதிமன்றால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின், பாம்பு விடுதலை செய்யப்படவுள்ளது.

ஆஸ்திரேலியாவில், விலங்குகளுக்கு மறுவாழ்வளிப்பதற்காக கைதிகளைப் பயன்படுத்தும திட்டம் கடந்த 20 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது.

விலங்குகளுடன் பொறுமையாகவும், சகிப்புத் தன்மையுடனும் நடந்துகொள்வது கைதிகள் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும், இதன்மூலம் கைதிகள் திருந்தி பொதுவாழ்வில் இலகுவாகக் கலந்துகொள்ள முடிகிறது என்றும் நம்பப்படுகிறது.





# உள்ளங்கை நிறத்தை வைத்தே உங்கள் குணாதிசயங்களை சொல்லலாம்



பெண்களின் உள்ளங்கையின் நிறத்தை வைத்து அவர்களின் குணாதிசயங்களைக் கூறமுடியும். ஒருவர் கறுப்பாகவோ, சிவப்பாகவோ இருக்கலாம். ஆனால் அவர்களின் உள்ளங்கைகளைப் பொறுத்தவரை, நிற அமைப்பில் சிவப்பு, கடும் சிவப்பு, இளஞ்சிவப்பு, மஞ்சள் ஆகிய நான்கு பிரிவுகளாக ரேகை சாஸ்திரம் பிரிக்கிறது.

### ஆழ்ந்த சிவப்பு நிற உள்ளங்கை

இந்த நிறம் கொண்டவர்கள், சுயநலவாதிகள். பணத்திலும், பதவியிலும் ஈடுபாடு உடையவர்கள். கடுமையான சுபாவம் உடையவர்கள். மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். சுய நலத்துக்காக எதையும் செய்வார்கள்.

### சிவப்பு நிற உள்ளங்கை

குங்குமம் போன்ற சாதாரண சிவப்பு நிறமுடைய உள்ளங்கை உடையவர்கள், கோபம் கொண்டவராக இருப்பர். ஆனால், பற்றும் பாசமும் உடையவர்கள். நினைத்ததை முடிக்கும் திறன் கொண்டவர்கள். ஆனால், அவசர காரர்கள். சற்று குறுகிய மனப்பான்மை உடையவர்கள். நல்லவர்களுக்கு நல்லவர்கள். கெட்டவர்களுக்குக் கெட்டவர்கள்.


### இளஞ்சிவப்பு நிற உள்ளங்கை

ரோஜா இதழைப் போல இளஞ்சிவப்பு நிற உள்ளங்கை உடையவர்கள், ஆரோக்கியமான தேகமும், மனமும் உடையவர்கள். நிதானமும் கட்டுப்பாடும் உள்ளவர்கள்.


அறிவாளிகள், திறமைசாலிகள். பிறருக்காகவும் வாழக் கூடியவர்கள். நேர்மை, நாணயம், ஒழுக்கம் உள்ளவர்கள். எல்லோராலும் விரும்பப் படுவார்கள். நம்பத்தகுந்தவர்கள்.

### மஞ்சள் நிற உள்ளங்கை:

இவர்கள் ஆரோக்கியக் குறைவானவர்கள். பயம், பீதி உள்ளவர்கள். மனோபலம் இல்லாதவர்கள். பலவீனமானவர்கள். அறிவாற்றல் குறைந்தவர்கள். கோம்பேறிகள், தன்னம்பிக்கை இல்லாதவர்கள். எவரையும் நம்பாதவர்கள், தோல்வியும் துயரமும் வாழ்க்கையில் கொண்டவர்கள்.



# பெண்கள் சிவலிங்கத்தை வழிபடலாமா?



சிவலிங்கத்தை ஆண்கள் மட்டுமே வழிபட வேண்டும் என்றும் பெண்கள் வழிபடக்கூடாது என்றும் இந்துக்களிடையே ஒரு நம்பிக்கை காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

பெண்கள் அதிலும் குறிப்பாக திருமணம் ஆகாத பெண்கள் சிவலிங்கத்தின் அருகே செல்லவே கூடாது என்றும், அதனை வணங்கக் கூடாது எனவும் கூறப்படுகிறது.

சிவலிங்கம் என்பது சிவன் தியானம் செய்யும் நிலை என்று கருதப்படுகிறது, சிவன் தூய்மையான நிலையில் தியானத்தில் இருப்பதால் சிவலிங்கத்தை பெண்கள் அருகே சென்றோ அல்லது கைகளால் தொட்டோ வணங்கக் கூடாது என்கின்றனர்.

சிவன் தியானத்தில் இருக்கும் போது மற்ற ஆண், பெண் கடவுள்கள் கூட அவரை தொந்தரவு செய்யத் தயங்குவார்கள் என்பது ஐதீகம்.


கடவுள்களே தியான நிலையில் உள்ள சிவலிங்கத்தை நெருங்கி வணங்க அஞ்சுவதால் தான் பெண்கள் சிவ லிங்கத்தை வணங்குவதை அனுமதிப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

திங்கட்கிழமை தான் சிவனின் தினமாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் திருமணமாகாத பெண்கள், விரதம் இருந்து சிவனைப் போல நல்ல கணவனைப் பெற வேண்டும் என வணங்க வேண்டும்.

வீட்டிலேயே சிவலிங்கத்தை வழிபட்டாலும், ஆண்கள் தான் அபிஷேக ஆராதனைகளை செய்ய வேண்டும் என்றும், பெண்கள் ஆண்களுக்கு உதவியாக இருந்து தேவையானவற்றைச் செய்து தரவேண்டும் என்பது பல காலமாக உள்ள நம்பிக்கை.

இராமேஸ்வரத்தில் சீதை தனது கையால் செய்த சிவன் சிலையை ராமன் வழிபட்டார் என ஒரு கதை உள்ளது. இவ்வாறு புராண காலத்தில் இருந்து சிவலிங்கத்தை பெண்கள் வழிபடக்கூடாது என்றும், ஆண்கள் மட்டுமே வழிபட வேண்டும் என்ற நம்பிக்கை இந்துக்களிடம் பரவியுள்ளது.

# குதிக்கால் செருப்பு (ஹை ஹீல்ஸ்) அணிபவரா நீங்கள்?



அழகாக இருக்கிறது என்று நினைத்து 'ஹை ஹீல்ஸ்' எனப்படும் குதிக்கால் உயரம் அதிகம் கொண்ட செருப்புகளை அணிந்துவிட்டு, அதனால் அவதிப்படும் பெண்களின் எண்ணிக்கை தற் போது அதிகரித்துள்ளது. குதிக்கால் செருப்பணியும் 60 சதவீத பெண்கள் கால் வலியுடன் அவதிப்படுகிறார்கள். குதிக்கால் செருப்பு அணிபவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை.

★நீங்கள் அணியும் செருப்பு அதிக உயரம் கொண்டதாக இருக்கவேண்டும் என்று நினைக்காமல், ஆரோக்கியம் தருவதாக இருக்கவேண்டும் என்று கருதுங்கள். அதனால் உங்கள் கால் அளவை சரியாகத் தெரிந்துகொண்டு அதற்குப் பொருத்தமான அதிக உயரமில்லாத குதிக்கால் செருப்புகளைத் தேர்ந்தெடுங்கள்.

★பிரபலமான கம்பனி பெயர் மற்றும் செருப்பின் புற அழகில் மயங்கி உங்கள் கால் அளவுக்குப் பொருத்தமற்ற குதிக்கால் செருப்புகளை வாங்க வேண்டாம்.

★செருப்புக்களைத் தேர்ந்தெடுக்க காலை நேரத்தைவிட, இரவு நேரமே சிறந்தது. ஏனெனில் இரவு நேரத்தில் கால் சற்று வீக்கமாகக் காணப்படும். அப்போது நீங்கள் அணிந்து தேர்ந்தெடுக்கும் செருப்புகளே உங்கள் ஆரோக்கியத்துக்கு ஏற்றதாக இருக்கும்.

★நீங்கள் சற்று குள்ளமாக இருப்பதை ஒரு குறையாக நினைக்காதீர்கள். பொருத்தமான, சௌகரியமான செருப்புகளை அணிந்தால் அதுவே அழகுதான்.

★2 அங்குல உயரம் கொண்ட குட்டையான குதிக்கால் செருப்புகள் ஆபத்தில்லாதவை, பாதுகாப்பானவை.

★தோல் செருப்புகள் ஈரத்தை உறிஞ்சும் தன்மைகொண்டவை. அவைகளை அணிந்தால்தான் கால்களுக்கு காற்றோட்டம் கிடைக்கும்.

★அதிகநேரம் குதிக்கால் செருப்பணியாமல் குறைந்த நேரம் மட்டுமே உபயோகப்படுத்துங்கள்.

★நீங்கள் தேர்ந்தெடுக்கும் குதிக்கால் செருப்பு காலில் நன்றாகப் பொருந்துமாறு வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

# பொன்மொழிகள்

★காற்றை விடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம். - ஷேக்ஸ்பியர்.

★பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும்புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள். -வேட்லி.

★பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது. - நேரு.

**இயேசு மேற்கொண்ட தியாகத்தின் மறையுண்மையை புரிந்துகொள்ளும் அருளை வேண்டுவோம்**

'இயேசுவை நோக்கி நம் பார்வையைத் திருப்பி நமக்காக இயேசு மேற்கொண்ட தியாகத்தின் மறையுண்மையை மேலும் சிறப்பாக புரிந்துகொள்வதற்குத் தேவையான அருளை வேண்டுவோம்' - என டுவிட்டர் பக்கத்தில் எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான் 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

**இயேசுவின் முகத்தை ஏழைகளில் கண்டு தியானித்தல்**

புகைப்படங்களிலும், ஒலி, ஒளிக் காட்சிகளிலும் இணையத்தளத்திலும் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தை நோக்கி மட்டும் தியானிக்க நாம் அழைக்கப்படவில்லை. மாறாக நம் அயலாரின் துன்பங்களில் இயேசுவின் துன்பத்தையும் உற்று நோக்கி தியானிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்கிறார் திருத்தந்தை.

# இருப்பவர்களை உடன் விடுவியுங்கள்; இல்லாதவர்களுக்காக சமயக் கடமைகளைச் செய்வதற்கு வழி செய்யுங்கள்!

## அரசுக்கு யாழ். ஆயர் வெளிப்படையாக ஆலோசனை

''இருப்பவர்களை உடன் விடுவியுங்கள்; இல்லாதவர்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றவும், இறப்பு சான்றிதழ் மற்றும் இழப்பீடு வழங்கவும் வழி செய்யுங்கள்'' - யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை இவ்வாறு கோரியுள்ளார். யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை தமது தமிழ் புத்தாண்டு - ஈஸ்ரர் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கும் போது - இவ்வாறு கோரியுள்ளார். அச் செய்தியில்

அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்கு தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் அதேவேளை உண்மையை மூடி மறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் லாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாகச் செயற்படுங்கள் என வேண்டுகிறோம். காணாமற்போனோர் என்ற விடயத்திற்கு முழுமையான முடிவு காணுங்கள். உண்மையை வெளிக்கொணர்ந்து மக்கள் ஏற்கும் விதமாக அறியப்படுத்துங்கள். தமிழ் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் யாரோ ஒருவர் இறந்தே உள்ளார். அவர்கள் எந்த முடிவையும் தற்போது ஏற்கும் மனநிலையிலேயே உள்ளனர். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது அதேவேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. இருப்பவர்களை உடன் விடுவியுங்கள். இல்லாதவர்கள் பற்றிய பிரச்சினையை தெளிவுபடுத்தி சமயக் கடமைகளை நிறைவேற்றி, இறந்தவர்கள் இளைப்பாறவும் உறவுகள் தம் மனசுகளை ஆறுதற்படுத்தவும் வழிசெய்யுங்கள். இறந்தவர்களுக்கான இறப்புச்



சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யுங்கள் என்று தெரிவித்தார்.

## ஓய்வுநிலை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற்றின் 90 ஆவது பிறந்த தினம் இன்றாகும்



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி பிறந்தார். பிறந்த நாளன்றே திருமுழுக்கும் பெற்றார். அந்த நாள் அவ்வாண்டில் புனித சனிக்கிழமையாக இருந்தது. ''திரு அவையின் மிக முக்கிய திருவழிபாட்டுக் காலத்தில் நான் பிறந்தமைக்கு நன்றியோடு இருக்கிறேன். எனது வாழ்வு பாஸ்கா பேருண்மையில் மூழ்கியுள்ளது. இதைவிடப் பெரிய ஆசீர்வாதம் வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது.'' - என திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவர்கள் 'மைல் ஸ்ரோண்' என்ற தனது நூலில் எழுதியுள்ளார். இவ்வாண்டு இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு ஞாயிறன்று ஏப்பிரல் 16ஆம் நாள் இத்திருத்தந்தையின் 90 ஆவது பிறந்த நாள் ஆகும். இப்பிறந்த நாளும் மிக எளிமையாகச் சிறப்பிக்கப்படும். 'ராட்சிங்கர் விருது' பெற்ற 13 இறையியலாளர்களால் எழுதப்பட்ட திருத்தந்தையின் விருதுவாக்கான 'உண்மையின் இணைப் பணியாளர்கள்' என்ற பெயரிலான நூல் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவர்களின் 90 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வெளியிடப்படும்.

## உண்மையின் எண்ணங்கள்

**'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களே உங்கள் அனைவர்க்கும் உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்**




ஒரு புன்னகை - மன உறுதி தரும் ஒரு வார்த்தை - துன்பத்தில் அருகில் இருக்கும் ஒரு நிலை - தேவையில் ஒரு சிறிய உதவி - பிரச்சினையில் ஒருசிறிய ஆலோசனை - இப்படி ஆயிரம் ஆயிரம் வழிகள் உள்ளன. இவற்றில் ஒன்றை செய்து அவர்களும் உயிர்க்க உதவுவோம்.

உலக மனிதர் அனைவர் மேலும் இயேசு தாம் கொண்ட தம் அன்பை தம் உயிரைத் தியாகம் செய்து வெளிக்காட்டினார். நாம் நமது அன்பை உயிர்த்த இயேசுவின் சாட்சியாக பலருக்கு இலகுவான பல வழிகளில் வெளிப்படுத்தலாம். முகம் மலர்ந்த


*- அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, ஊடக வருகை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம் - 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர்.*

## முதிர்ந்த வயதினரைப் பராமரித்தல் நம் முன்னுள்ள முக்கிய சவால்

உலக மக்கள் தொகையின் சராசரி வயது கூடிவரும் இன்றையச் சூழல் நமக்கு புதிய சவால்களையும் வாய்ப்புக்களையும் வழங்குகிறது என 'மாறிவரும் மக்கள் சமுதாயத்தின் வயது கட்டமைப்பும், நீடித்திருக்கக்கூடிய முன்னேற்றமும்' என்ற தலைப்பில் ஐ.நா. பொது அவையில் வத்திக்கான் உயர் அதிகாரி தெரிவித்தார்.

வெடித்தெழும் மக்கள் தொகை என்ற அச்சம் உருவாக்கப்பட்டதன் காரணமாகவும் மருத்துவ உலகின் உதவியால் மக்களின் வாழும் காலம் வளர்ந்திருப்பதாலும் சமுதாயத்தின் சராசரி வயது கூடியுள்ளது. இத்தகையச் சூழலில் முதிர்ந்த வயதினரைப் பராமரித்தல்' வளர்ந்து வரும் இளைய சமுதாயத்திற்குத் தேவையான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவை நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள முக்கியமான சவால்களாகும். நீடித்திருக்கக் கூடிய முன்னேற்றம் என்ற கோணத்தில் சிந்திக்கும்போது இயற்கை வளங்களை தேவைக்கும் அதிகமாக வீணாக்கும் போக்குகளை கட்டுப்படுத்துவதும் மனித சமுதாயத்திற்கு விடுக்கப்பட்டுள்ள சவால் என்று பேராயர் மேலும் தன் உரையில் வலியுறுத்தினார்.

### பல காலம் பத்திரமாக வைக்க வேண்டிய படம்



அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற விநோத உடைப் போட்டியில் துறவு ஆடை பூண்ட சிறுவன் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சீஸ் அடிகளாருடன் நின்று படம் எடுத்துக் கொண்ட கணப்பொழுதில்.

## உலக கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரிப்பு

2017 ஆம் ஆண்டின் வத்திக்கானின் புள்ளிவிவர ஆண்டு குறிப்பேட்டை வெளியிட்டுள்ள திருப்பீடம் ஆபிரிக்காவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் பிரேஸில், மெக்சிகோ பிலிப்பைன்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு இத்தாலி பிரான்ஸ் கொலம்பியா, ஸ்பெயின், காங்கோ, ஆர்ஜென்டீனா ஆகிய பத்து நாடுகளில் பாதிக்கும் மேற்பட்டு கத்தோலிக்கர் உள்ளனர் என்றும் கூறியுள்ளது. 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி நிலைவரப்படி உலகளவில் திருமுழுக்குப் பெற்றுள்ள கத்தோலிக்கரின் எண்ணிக்கை ஒரு விழுக்காடு அதிகரித்துள்ளது. இது 128 கோடியே ஐம்பது லட்சமாக உயர்ந்துள்ளது என்றும் உலக மக்கள் தொகையில் கத்தோலிக்கர் 17.7 விழுக்காடு என்றும் திருப்பீடம் கூறியுள்ளது.

## எகிப்தில் தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்குக் கண்டனம்

### கவலையும் வெளியிட்டார் திருத்தந்தை

எகிப்து ரான்ரா நகர் காப்டிக் கிறிஸ்தவ தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தன் ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். குருத்தோலை ஞாயிறன்று குண்டு ஒன்று வெடித்து 27 பேரின் உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எகிப்தின் தலைநகர் கெய்ரோவிற்கு மேற்கொள்ளும் திருப்பயணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை திருப்பீடம் உறுதி செய்துள்ளது. இதற்கிடையே எகிப்து கிறிஸ்தவக் கோவில்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதல்கள் குறித்து தமது கண்டனங்களை இந்திய தலத்திருஅவை - அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர் பேரவை - இங்கிலாந்து கத்தோலிக்க தலைவர்கள் - ஜேர்மன் ஆயர் பேரவை எனப் பல்வேறு தலத்திரு அவைகளும் வெளியிட்டுள்ளன.

## ஆன்மீகமும் சுற்றுச்சூழலும் இணைந்த சிலுவைப்பாதை

கொழும்பு நுகேகொட புனித யோசேப்பு பெண்கள் பள்ளியின் மாணவியர் பெற்றோர் மற்றும் அருள் சகோதரிகள் இணைந்து இலங்கையில் பழம்பெரும் சிலுவைப் பாதைகளில் ஒன்றான கினிதும கல்வாரி என்றழைக்கப்படும் மலைப் பகுதியில் சிலுவைப் பாதை பக்தி முயற்சியை மேற்கொண்டனர். திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த அருள் சகோதரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சிலுவைப் பாதை முயற்சியின் இறுதியில் மலைப் பாதையிலிருந்து இறங்கி வரும் வேளையில் இவர்கள் அம்மலைப்பாதையில் இருந்த குப்பைகளைச் சேகரித்து அப்பகுதியைத் தூய்மைப்படுத்தினர். இந்த சிலுவைப் பாதை பக்தி முயற்சி ஆன்மீகம் மற்றும் சுற்றுச்சூழல் என்ற இரு கண்ணோட்டங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

● முருகபூபதி - அவுஸ்திரேலியா

# இலங்கையில் பாரதி



22

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதி நூற்றாண்டை முன்னிட்டு அமைத்த குழுவினர் தொடர்ச்சியாக கொழும்பிலும் இலங்கையின் இதர பிரதேசங்களிலும் பாரதி விழாக்களையும் நூல் கண்காட்சிகளையும் ஈழத்து தமிழ் - முஸ்லிம் எழுத்தாளர்களின் ஒளிப்படக் காட்சிகளையும் நடத்தினர்.

நூற்றாண்டு விழாக்களுக்காக தமிழகத்திலிருந்து பாரதி இயல் ஆய்வாளர்கள் தொ.மு.சி. ரகுநாதன், பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன், எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோரையும் அழைத்திருந்த சங்கம், கொழும்பிலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, அட்டாளைச்சேனை, நீர்கொழும்பு, கண்டி உட்பட பல பிரதேசங்களிலும் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்திருந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

இலங்கையில் இவ்வாறு பாரதியின் கருத்தியல்கள் குறித்த விழாக்களுக்கும் ஆய்வரங்குகளுக்கும் அதன்மூலம் புதிய தேடல்களுக்கும் வழிவகுத்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலங்கையின் அனைத்துப்பிரதேசங்களிலும் வாழ்ந்த தமிழ் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஊடகவியலாளர்களையும் கல்வித்துறை சார்ந்தவர்களையும் ஒன்றுகூடச்செய்து கருத்துப்பரிமாறல்களுக்கும் ஏற்பாடு செய்திருந்தது. அத்துடன் அகில இலங்கை ரீதியில் கவிதை, சிறுகதைப் போட்டிகளையும் நடத்தியது.

**தொ.மு. சி ரகுநாதன்**
**(1923 - 2001)**

சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், நாடகம், இதழியல், வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு முதலான துறைகளில் பல நூல்களை எழுதியிருக்கும் ரகுநாதன் சாந்தி என்ற இலக்கிய இதழும் நடத்தியிருப்பவர்.



தோ.மு.சி.ரகுநாதன்

கங்கையும் காவிரியும், பாரதியும் ஷெல்லியும், பாஞ்சாலி சபதம் உறைபொருளும் மறைபொருளும், பாரதி: காலமும் கருத்தும், பாரதியும் புரட்சி இயக்கமும் முதலான பாரதி இயல் ஆய்வு நூல்களையும் எழுதியிருப்பவர். பாரதி நூற்றாண்டு காலத்தில் இவர் எழுதிய பாரதி: காலமும் கருத்தும் நூலுக்கு இந்திய சாகித்திய அக்கடமி விருதும் கிடைத்துள்ளது. சோவியத் இலக்கிய மேதை மாக்சிம்கோர்க்கியின் தாய் நாவலை தமிழுக்கு மொழி பெயர்த்தவர்.

இலக்கிய, அரசியல், பொது வெளியில் சமரசங்களுக்குட்படாத பேராளுமையான ரகுநாதன் பற்றி தமிழ்நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் பொன்னீலன் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

*''ரஷ்ய வகை மார்க்சியத்தைத் தொடக்கத்தில் ஏற்றுக்கொண்டிருந்த அவர், பிற்காலத்தில் கிராம்ஷியின் மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டமை மட்டுமல்ல, இந்தியாவின் சாதி ஆய்வுக்கும் அதை விரிவுபடுத்திப் பார்த்தார். என்ன தெரிகிறது..? அவருடைய இடைவிடாத தேடல் தெரிகிறது. ஆம், தேடல் நிறைந்தவர் அவர். உண்மையைத் தேடுவதில் இடைவிடாத நாட்டம் கொண்டிருந்தவர் அவர். புதுக்கவிதையினுள் அவர் தொடர்ந்து தேடியிருந்தால், அது பற்றிய தன் பார்வையைக் கூட அவர் மாற்றிக் கொண்டிருப்பார் எனத் தோன்றுகிறது. எங்கும் எதிலும் தேங்கிப் போகாத அருவி உள்ளம் அவர் உள்ளம். தீவிர புத்தகப் பிரியர் ரகுநாதன். தன் தந்தையாரின் நூலகத்தைத் திருட்டுச் சாவி போட்டுத் திறந்து, உள்ளே இருந்த அரிய நூல்களையெல்லாம் விரும்பிச் சுவைத்தார். பழந்தமிழ் இலக்கியங்கள், நவீனத் தமிழ் இலக்கியங்கள், மலையாளம், கன்னடம், வங்கம், இந்தி என இந்திய மொழிகளில் வந்த சிறந்தனவற்றைப் படித்தார்.*

*ஐரோப்பிய, ருஷ்ய இலக்கியங்களின் உச்சங்களில் திளைத்து மகிழ்ந்தார். வாசித்தவர் மட்டுமல்ல புத்தகங்களை நேசித்தவர் அவர். தந்தையாரின் நூலகத்தைப் போல் தனக்கும் ஒரு நூலகத்தை உருவாக்கிக் கொண்டார். அந்த நூல்களிடையே காலம் முழுவதும் வாழ்ந்தார், உழைத்தார். சொந்த வீடற்ற அவர், வாழ வீடு தேடிய போதெல்லாம், தன் நூல்கள் வாழ இடமிருக்கிறதா என்பதை முதலில் தேடினார். இரவலுக்கோ, இலவசத்துக்கோ, எவருக்கும் அவர் புத்தகம் கொடுத்ததில்லை. தன் இறுதிக் காலத்தில், இந்த நூல்களுக்குப் பல லட்சம் ரூபா தருவதாகப் பலர் கெஞ்சியும் மசியாமல், பாரதி மீதுள்ள பற்றால், எட்டையபுரம் பாரதி நூலகத்துக்கு அத்தனை நூல்களையும் ஆசையோடு வழங்கினார்.*

*முதுமையைப் பொருட்படுத்தாமல் எட்டையபுரம் போய் பலநாள் தங்கி, நூல்கள் அனைத்தையும் அடுக்கி ஒழுங்குபடுத்தினார். தன் எண்ணங்களாகத் தன் படைப்புகளுக்கு அடுத்தபடி, இந்த நூலகத்தைத் தன் நினைவிடமாக உருவாக்கிக் கொண்டார் ரகுநாதன். அவரது உரையாடல்கள் சங்க இலக்கியங்களிலிருந்து புதுமைப்பித்தன் இலக்கியம் வரை, ஆங்கில இலக்கியத்திலிருந்து லத்தீன் அமெரிக்க இலக்கியம் வரை பருந்து போல அலையும்.*

*ஷேக்ஸ்பியர் பற்றி அவர் பேசத்துவங்கினால், அவரைப் பற்றி நேற்றுவரை வந்த விமர்சனங்கள் இவர் பேச்சில் மின்னும். ரகுநாதனின் உரையாடல்கள் ஒவ்வொன்றுமே இலக்கியத்தை மறுவாசிப்புச் செய்யும் போக்கில் அமைந்திருக்கும். அவருடைய உரையாடல்களுக்குள்ளே நுழைந்து பார்க்கும் போதுதான், பொய்யாமைச் சமூகத்தை அவர் வெறுப்பதற்கும், ஒதுக்குவதற்குமான காரணங்களைக் கண்டுபிடிக்க முடியும். அளவுக்கதிகமான நேர்மை, கறாரத் தன்மை, மதிப்பிடும் தன்மை இவைகளே அவரைத் தனி மனிதராக்கின.''*

**பேராசிரியர்**
**எஸ். இராமகிருஷ்ணன்**

பாரதநாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தனது இளம் வயதிலேயே ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்திருக்கும் இராமகிருஷ்ணன், பாரதி இயல் ஆய்வாளராக இலக்கிய விமர்சகராக நன்கு அறியப்பட்டவர். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் மாணவர் இயக்கத்தின் முன்னணி உறுப்பினராக இருந்தவர்.

இந்தியப் பண்பாடும் தமிழரும், திருக்குறள் ஒரு சமுதாயப்பார்வை, இளங்கோவின் பாத்திரப்படைப்பு, கம்பனும் மில்டனும் ஒரு புதிய பார்வை, சமயவாழ்வில் வடக்கும் தெற்கும் ஆகிய நூல்களை வரவாக்கியிருக்கும் இவர், கம்பரின் பாத்திரப்படைப்புகளை ஆய்வுக்குட்படுத்தி, சிறியன சிந்தியாதன, கற்பின் கனலி முதலான நூல்களையும் எழுதியிருப்பவர்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஹிட்லரின் ஜேர்மன் நாஜிப்படைகள் சோவியத்தின் தலைநகரம் மாஸ்கோவை அண்மித்த சமயம், சாதுரியமாக அதனை முறியடிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கியவரும், சோவியத்தின் அதிபருமான ஜோசப் ஸ்டாலினின் வாழ்க்கை வரலாற்றையும் தமிழில் எழுதியிருக்கும் ராமகிருஷ்ணன், இலக்கியத்திறனாய்வுடன் தமது ஆய்வுகளை நிறுத்திக் கொள்ளாமல், மார்க்சீய தத்துவம், பொருளாதாரம் முதலான துறைகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டவர். **மார்க்சீய பொருளாதாரப்பார்வை** அவற்றில் குறிப்பிடத்தகுந்தது. உலக சமாதானக் கவுன்சில், இந்திய - சோவியத் நட்புறவுக்கழகம் முதலானவற்றில் அங்கம் வகித்தவர். பாரதியைப்பற்றியும் இவர் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் நூலில் பாரதியின் பல கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் காணலாம். சோவியத் ரஷ்யா, பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளிலும் பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சிகள் நடந்தசமயம் அங்கு சென்று உரையாற்றியவர்.

1983 இல் இலங்கையில் இனக்கலவரம் வந்து, தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்குச் சென்றவேளையில் அங்கிருக்கும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்களை ஒன்றிணைத்து இயக்கம் அமைத்து ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பதற்கு முன்வந்தார். எனினும் அங்கிருந்த அரசியல் தலைவர்கள் ஈழப்பிரச்சினையை கையில் எடுத்தமையால் அந்த இயக்கம் வலுவிழந்துபோனது.

பேராசிரியர் எஸ்.ராமகிருஷ்ணனின் ஆங்கில உரைகளைக் கேட்ட பல சிங்கள எழுத்தாளர்களும் அலவி மௌலானா போன்ற முஸ்லிம் தலைவர்களும் அவரைப் பெரிதும் மதித்தனர். பாரதியின் சில கவிதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கும் ரத்ன நாணயக்கார, தமக்கு பாரதியை அறிமுகப்படுத்தியதே பேராசிரியர் ராமகிருஷ்ணன்தான் என்று சொல்லியிருக்கிறார்.

**ராஜம் கிருஷ்ணன்**
**(1925 - 2014)**

1952 ஆம் ஆண்டு அனைத்துலக ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் **ஊசியும் உணர்வும்** என்ற சிறுகதையை எழுதி பரிசுபெற்றிருக்கும் **ராஜம் கிருஷ்ணன்**, கதைகளும், நாவல்களும் ஏராளமான கட்டுரைகளும் வாழ்க்கைச்சரிதை நூல்களும் எழுதியிருப்பவர். அவரது பரிசுபெற்ற அச்சிறுகதை இந்துஸ்தான் டைம்ஸ் வெளியீடாக வந்துள்ள உலகச் சிறுகதைத்தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது.



ராஜம் கிருஷ்ணன்

**வேருக்கு நீர்** என்ற இவர் எழுதிய நாவலுக்கு இந்திய சாகித்திய அக்கடமி விருது கிடைத்துள்ளது. கோவா விடுதலைப்போராட்டத்தை சித்திரிக்கும் வளைக்கரம் என்ற நாவலையும், முள்ளும் மலர்ந்தது, அலைவாய்க்கரையில், கரிப்பு மணிகள், அன்னையர் பூமி, மாணிக்க கங்கை உட்பட குறிப்பிடத்தகுந்த நாவல்களையும் எழுதியிருக்கிறார்.

**மாணிக்க கங்கை** இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற அகதிகளின் மண்டபம் முகாம் வாழ்க்கையை சித்திரிக்கிறது. ஒவ்வொரு நாவலும் எழுதுவதற்கு முன்னர், அதன் பின்புலம் பற்றிய நுட்பமான அறிவைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்திருக்கும் கள ஆய்வாளருமாவார்.

உப்பளத்தொழிலாளர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் வாழ்வை மட்டுமன்றி சம்பல் பள்ளத்தாக்கில் கொலைகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டிருந்த சமூக விரோதிகளையும் கடும்பிரயத்தனத்தில் சந்தித்து உரையாடி **முள்ளும் மலர்ந்தது** என்ற நாவல் எழுதியவர். சர்வோதய இயக்க முன்னோடி ஜெயப்பிரகாஷ் நாராயணனை சந்தித்து அதற்கு முன்னுரை பெற்றுக்கொள்ள முயன்றார். ஆனால், அவரைச் சுற்றியிருந்தவர்கள் ராஜம் கிருஷ்ணனை நெருங்கவிடவில்லை.

இவ்வாறு அடிநிலையிலிருந்த மக்களையெல்லாம் சந்தித்து இலக்கியப்படைப்புகள் எழுதிய ராஜம் கிருஷ்ணன், பாரதியின் சிந்தனைகளின் தாக்கத்தினால், காலம் தோறும் பெண், காலம்தோறும் பெண்மை, யாதுமாகி நின்றாய், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை முதலான நூல்களையும் வரவாக்கியவர். பாரதியின் வாழ்க்கையில் இடம்பெற்ற பல முக்கியமான சம்பவங்களின் அடிப்படையிலும் ஒரு நூலை எழுதியிருப்பவர். அதன் பெயர் **பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி.**

பாரதியின் மறைவையடுத்து, பாரதியின் உறவினர்கள் மனைவி செல்லம்மாவுக்கு மொட்டை அடித்த தகவலை வெளிப்படுத்தியவரும் இவரே. பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக பாரதியின் சிந்தனையை அடியொற்றி கருத்துப்போராட்டம் நடத்தியிருக்கும் ராஜம் கிருஷ்ணன் அந்திம காலத்தில் பல சிரமங்களை தனிப்பட்ட வாழ்வில் எதிர்நோக்கியவர்.

இவருடைய கதைகள் தொலைக்காட்சி நாடகங்களாகவும் ஒளிபரப்பாகியிருக்கின்றன. இவருடைய துயர் மிகுந்த அந்திம காலத்தில் தமிழக அரசும் உதவியிருக்கிறது.



இ.முருகையன்

அவர் சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் பல மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். அவரது விருப்பத்தின் பிரகாரம் அவர் மறைவையடுத்து - அவரது உடல் மருத்துவக்கல்லூரிக்கே ஒப்படைக்கப்பட்டது.

அவரும் பாரதியைப்போன்று பிராமண சமூகத்தில் பிறந்தவர். சமயம் சார்ந்த இறுதிச் சடங்குகள் எதுவும் இன்றி, மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினர் ( மருத்துவர்கள் - தாதிகள்) இவருடைய பூத உடலை மருத்துவக்கல்லூரியில் ஒப்படைத்தனர்.

பாரதியின் அந்திமகாலத்துடன் ராஜம் கிருஷ்ணனின் இறுதிக்காலத்தை ஒப்பிடலாம். இறுதியில் பாரதியை சுற்றி விரல் விட்டு எண்ணத்தக்கவர்கள் இருந்தமைபோன்று ராஜம் கிருஷ்ணனின் இறுதிவேளையிலும் சிலரே நின்றனர்.

*(18 ஆம் பக்கம் பார்க்க)*

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 3 ஆம் நாள் பஞ்சமித்திதி. இரவு 10.16 வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: கேட்டை மாலை 4.38 வரை. பின்னர் மூலம். மரணயோகம் மாலை 4.38 வரை. ராகுகாலம்: மாலை 4.46 முதல் 6.19 வரை. சுபநேரம்: பகல் 9.00 முதல் 10.30 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கேட்டை.

சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுபகருமங்கள் தவிர்க்கப் படல் வேண்டும்.

## 16.04.2017 இல் இருந்து 22.04.2017 வரை



**மேஷம்:** அலைச்சல் மிகுந்த வாரம் பணப் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். உத்தியோக ரீதியான அலைச்சல்கள் உண்டாகும். சிலர் கொடுத்த பணத்தை வசூல் பண்ண அலைந்து திரிவார்கள். சிலர் அரச வேலை தேடி அலைவார்கள். வெளிநாடு செல்ல எண்ணிய சிலர் முகவர்களின் உதவியை நாடுவார்கள். விவசாயிகள் செய்கையை விரிவுபடுத்த வங்கிகளின் உதவியை வேண்டுவார்கள். சொத்து வாங்க எண்ணியவர்கள் தகுந்த இடம் தேடி அலைவார்கள்.



**ரிஷபம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் தேவைய்பற்ற ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது நன்று. எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். உடன்பிறப்புகளின் உதவிகள் குறையும். பணியிடத்தில் அவசியமற்ற உரையாடல்களைத் தவிர்க்கவும். சக ஊழியர்களின் போக்கில் மாறுதலும், பேச்சில் கடுமையும் கூட வாய்ப்புள்ளது. தொழிலில் அதிக கவனம் தேவை. வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலாளர்களுக்குப் போட்டிகள் அதிகரிப்பதால் தொழில் வாய்ப்புகள் குறையும்.



**மிதுனம்:** யோகமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். நினைத்தவை நிறைவேறும். வியாபாரத்தொழில் ஏற்றமடையும். பூர்வீக சொத்தில் இருந்த வில்லங்கம் நீங்கி, கைக்கு வந்து சேரும். வாகனயோகம் உண்டாகும். விலகிச் சென்ற நட்பு மீண்டும் தளிர்க்கும். பணியில் திறமை, தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவற்றைப் பரிமளிக்கச் செய்வதால், பொறுப்புகளைத் திறம்படச் செய்து முடிப்பார்கள். அலுவலகத்தில் இவர்களின் மதிப்பு, செல்வாக்கு உயரும். திறமைக்கேற்ற பதவி உயர்வு கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.



**கடகம்:** சுபீட்சமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். எட்டியிருந்த உறவுகள் மீண்டும் இவர்களை நாடி வரும் வாய்ப்புள்ளது. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகள் விரைந்து முடியும். விரும்பிய கௌரவப் பதவி, சம்பள உயர்வு என்பன கிடைக்கும். இவர்கள் பேச்சில் கம்பீரமும், கௌரவமும் கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ஆதரவும், வருமானமும் பெருகும்.



**சிம்மம்:** அலைச்சல் மிகுந்த வாரம். தொழில் ரீதியாக நிறைய அலைய வேண்டி வரும். வரவேண்டிய பணத்தை வசூல் பண்ணுவதற்கு அலைந்து திரிவார்கள். படித்தவர்கள் சிலர் திறமைக்கேற்ற வேலை தேடித் திரிவார்கள். மாணவர்கள் தம் பகுதிநேர வகுப்புக்களுக்காகத் தகுந்த ஆசிரியரைத் தேடுவார்கள். பெண்கள் சுயதொழில் செய்ய விரும்பி வங்கிகளின் உதவியை நாடுவார்கள். சிலரின் பயணங்களில் உடைமைப் பொருள்கள் காணாமற் போகலாம்.



**கன்னி:** சமபலன்கள்உள்ளவாரம். பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் உதவிகள் குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நன்று. சகோதர உறவு வலுவானதாக இருக்கும். வீடு கட்டும் பணிகள் பணம் பற்றாக்குறையால் பாதியில் நின்றுவிடும். திருமண காரியம் தடைப்பட்டுப் போகும். திட்டமிட்ட பயணங்கள் தாமதமாகும். வழக்குகள் இழுபறிநிலையில் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானமாக இருக்க வேண்டும். பயணங்களைத் தவிர்க்கவும்.



**துலாம்:** இன்பமான வாரம். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பம் குதூகலமாய் இருக்கும். தொழிலில் உபரியான லாபத்தை அசையாச் சொத்தாய் மாற்றும் முயற்சியில் வெற்றி காண்பார்கள். சகோதர உறவு பலப்படும். பிரிந்திருந்தவர்கள் பெரியோர் முயற்சியால் ஒன்று சேர்வார்கள். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். சிலருக்குத் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்ல வேண்டிவரும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறுவார்கள்.



**விருச்சிகம்:** இணக்கமான வாரம். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். நண்பர்களுக்குள் பழைய பிணக்குகள் தீர்ந்து இணக்கமான சூழல் மலரும். நீண்டகாலமாக நிலுவையில் இருந்த பணம் வசூலாகும். வியாபாரஸ்தலத்தை விரிவாக்கம் செய்து, புதிய கிளைகளைத் தொடங்கவும் திட்டமிடுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு, மேலிடத்துக்கு இவர்கள் திறமை மகிழ்வளிக்கும். அலுவலகம் மூலம் எதிர்பார்த்துக் கேட்டிருந்த தொகை வந்துசேரும். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் காணப்படும்.



**தனுசு:** தீமையான வாரம். வருமானம் குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். தொழிலில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும். வியாபாரத்தில் போட்டிகளும், விலையேற்றமும் தொல்லைகளை அளிக்கும். நிலுவையில் உள்ள பணத்தை வசூலிப்பதில் சிரமங்கள் ஏற்படும். செய்யும் செயல்களில் தடை, தாமதங்களும் உண்டாகும். கலைஞர்களுக்கு எதிர்பார்க்கும் வருமானம் கிடைப்பதில் பிரச்சினை ஏற்படலாம். கடினமான பணிகளில் செயற்பட்டு விபத்துக்களைச் சந்திக்க நேரும். மங்கல நிகழ்ச்சிகளை சிறப்பாகச் செய்ய முடியாமல் சிரமங்கள் உண்டாகும்.



**மகரம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். கடன்கள் அடைபடும். குடும்பத்தலைவருக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை ஏற்படும். வரவேண்டிய பணவரவுகள் வந்துசேரும். பிரிந்திருந்த சகோதரர் மீண்டும் வலிய வருவார். தாய்வழிச் சொத்துக்கள் வந்து சேரும். பெண்களுக்கு மங்கலப் பொருள்களும், புதிய ஆடைகளும் கிடைக்கும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கி ஆரோக்கியம் அடைவார்கள். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும்.



**கும்பம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். வரவேண்டிய பணம் சிறிது தாமதத்துடன் வந்துசேரும். செய்யும் முயற்சிகளில் தடை, தாமதம் இருக்கும். மங்கல காரியங்கள் நடத்துவதில் அதிக முயற்சிகள் தேவைப்படும். பயணங்களின் போது பாதுகாப்பு இல்லாமல் சென்றால் பொருள்களின் இழப்பு ஏற்படும். நண்பர்களுடனும், உறவினர்களுடனும் சுமுகமாக நடந்து கொள்வ அவசியம். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.



**மீனம்:** மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் சாதகமான போக்கும், உயர்வுகளும் கிடைக்கும். வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரும். தொழில் சுறுசுறுப்பாக நடந்து வருமானத்தைப் பெருக்கும். பெண்கள் புதிய ஆடை, ஆபரணங்களை வாங்குவார்கள்.

# உளர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## அடுத்த தேர்தலில் போட்டியிட இப்பவே கதை சொல்லுகினம்!

''எல்லோருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்'' என்று முகம் மலரச் சொல்லியபடி, வாத்தியாருடன் சந்தியடியில் வந்தமர்ந்தார் ஏரம்பர். முன்னதாகவே சந்தியடிக்கு வந்து விட்ட ஜீவன், ரூபன், பேப்பர்தம்பி ஆகியோர் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஆனால், செல்லாச்சி மட்டும், எதுவுமே சொல்லாது, கச்சான் கடகத்தை அவிழ்த்து, வியாபாரத்தை ஆரம்பிப்பதில் கவனமாக இருந்தாள்.

அதனை அவதானித்த வாத்தியார், ''செல்லாச்சி, வாழ்க்கையில் எல்லோருக்கும் சோதனைகளும் சோகங்களும் இருக்குத்தான். அதுகளைத் தாண்டி வாழ்க்கையை நடத்தத்தான் எங்கடை முன்னோர் பண்டிகைகளையும் கொண்டாட்டங்களையும் வழக்கமாகக் கொண்டு வந்திருக்கினம். நடந்ததுகளை நினைச்சுக் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தால், மனதிலை அமைதி என்றைக்கும் இருக்காது'' என்று ஆறுதல் கூறினார்.


இதற்குச் சோகமாகச் சிரித்தாள் செல்லாச்சி.

''இத்தனை வருச அனுபவத்திலை இது எனக்கும் தெரியும் வாத்தியார். கஷ்டங்கள் இனி நடக்காது என்றால், பழசை மறந்து புது வாழ்க்கையைத் தொடங்கலாம். ஆனால், இங்கு எது மாறியிருக்கு, சொல்லுங்கோ பார்ப்பம். தங்கடை காணியை விடச் சொல்லி மாசக் கணக்காக சனம் வீதியிலை கிடந்து மன்றாடுகினம். வேறை கொஞ்சப் பேர் காணாமல்போன தங்கடை உறவுகளைத் தேடி, கண்ணீரோடை அலைகினம். சிறையிலை இருக்கிறவை வருசக் கணக்காக கிடக்கினம் என்றால், அவையின்ரை குடும்பங்கள் வெளியிலை கிடந்து சீரழியுதுகள். கஷ்டப்பட்ட சனம் வாழ்க்கையை நடத்த வழியில்லாமல், ஆளாளிட்டை கையேந்துகின்ற நிலைமையிலை இருக்கினம். இதெல்லாம் ஒரு பக்கம் என்றால், பந்தம் பிடித்தோ, காசு கொடுத்தோ வேலை எடுத்துத்தர வக்கில்லாத, எங்களைப் போன்ற பாவப்பட்ட குடும்பப் பிள்ளைகள், வேலை கேட்டு வீதியிலை நிக்குதுகள். இது எதுவுமே மாறவில்லை....'' என்று வேகமாகச் சொல்லிக்கொண்டே வந்த செல்லாச்சி, வெடித்து வந்த அழுகையால் பேசுவதை நிறுத்தினாள்.

சந்தியடி மகிழ்ச்சியைத் தொலைத்து, சோகமான அமைதியைப் போர்த்துக் கொண்டது. சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்த செல்லாச்சி, மீண்டும் கதைக்கத் தொடங்கினாள்.

''ஆனால் வாத்தியார், இதெல்லாவற்றையும் வைச்சுப் பிழைப்பு நடத்துற எல்லோரும் எங்களை வகைவகையாக வித்து வசதியாக இருக்கினம். தங்கடை நலனுக்காக இந்த மண்ணிலை யுத்தத்தை வளர்த்தவையும், அவை எறியிற எலும்புக்கு ஆசைப்படுகிறவையும், இதெல்லாவற்றையும் மாற்ற முயற்சிக்காமல், எங்கடை சோகங்களை மறக்கவைச்சு, எங்களிலை சவாரி விடத்தானே திட்டம் போட்டு காரியம் நடத்துகினம். நாங்கள் உரிமையோடை கௌரவமாக வாழ வழி செய்யுங்கோ. எல்லோரும் எல்லாத்தையும் மறந்து போட்டு, உங்களோடை சேர்ந்து கும்மியடிக்கிறம். வாழ்க்கை முழுவதும் அழுது கொண்டேயிருக்க, எங்களுக்கு மன நோய் இல்லை'' என்று சொல்லி முடித்த செல்லாச்சி, திடீரென்று எழுந்து ''நான் கோயிலுக்கு ஒருக்காப் போட்டு வாறன். கச்சான் கடகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கோ'' என்று சொல்லி விட்டு, பதிலுக்குக் காத்திருக்காமல் விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த வாத்தியார், ''வேதனைகளும் வலிகளும் அவரவருக்குத்தான் தெரியும். இங்கு புலிகளை ஆதரிச்சு ஒரு கூட்டமும், அதே புலிகளை



எதிர்த்து இன்னொரு கூட்டமும், இந்த இரண்டு கும்பல்களையும் விட, நேரத்துக்கு ஏத்த மாதிரி கதைச்சு இன்னொரு கூட்டமும் புழைப்பு நடத்துதுகளே தவிர, சாதாரண சனத்தின்ரை நிலையிலை இருந்து யோசிக்க அந்தச் சனங்களைத் தவிர எவருமில்லை'' என்றார்.

அங்கு ஒருவித இறுக்கம் நிலவியது. அதனைத் தளர்த்தியது ஜீவனின் குரல்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் உதவி கேட்டு வந்த பெண்ணிடம், பாலியல் இலஞ்சம் கேட்டதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நெருக்கமான இன்னொருவர், தவறான நோக்கத்தோடை வீடொன்றுக்குள் நுழைந்ததாகவும் இணையத்தளங்களிலை தகவல்கள் பரபரப்பாக சுத்துகின்றன'' என்றான் ஜீவன்.

''யாராம் ஆக்கள்?'' என்று ஆவலாகக் கேட்டார் ஏரம்பர்.

''விசயம் உறுதியாகத் தெரியாமல் பெயர், ஊரைச் சொல்லக் கூடாது.'' என்றான் ஜீவன்.

''அப்ப ஏன் கட்சியின்ரை பெயரைச் சொன்னனீ?'' என்று விடாமல் கேட்டார் ஏரம்பர்.

''இந்த விசயங்களைப் பற்றி கூட்டமைப்பின்ரை மத்திய குழுக் கூட்டத்திலை 'அலசி ஆராயப் போறம்' என்று சுமந்திரன் சொல்லியிருக்கிறார். அதனாலை கட்சிப் பெயரை சொல்லலாம்'' என்று அவரை மடக்கினான் ஜீவன்.

''இதுவே, ஈபிடிபியோ, கருணா தரப்போ இதை செய்திருக்க வேணும், எங்கடை ஆக்கள் ஒரு படமே எடுத்து, 'ரீல்' அறுந்து போற அளவுக்கு என்ன ஓட்டம் ஓட்டியிருப்பாங்கள்? இந்த விசாரணை அறிக்கையாவது மக்களுக்குத் தெரிய வருகுதா என்று பார்ப்பம்'' என்று சொன்னான் ரூபன்.

''சம்பந்தப்பட்ட ஆக்களை, தங்களிடமோ அல்லது பொலிஸாரிடமோ முறையிடச் சொல்லி சுமந்திரன் சொல்லியிருக்கிறாராம்'' என்றான் ஜீவன்.

''முந்தியும் வீட்டுத் திட்டம் தருவதற்கு, பாலியல் இலஞ்சம் கேட்டதாக அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இதுபற்றி அந்த அரசசார்பற்ற நிறுவனமே விசாரணை நடத்தி, தாங்களே அறிக்கையை நிதி வழங்கிய நாட்டு தூதரகத்திடம் கொடுத்த தோடை பிரச்சினை முடிஞ்சுது. பல்கலைக்கழகத்திலை பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இரண்டு பேரை சம்பளமும் கொடுத்து வீட்டை அனுப்பிச்சினம். அதுவும் கிணத்திலை போட்ட கல் மாதிரி கிடக்கு. அதுகளிலை பாதிக்கப்பட்டவை சாதாரண மக்கள். குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவை செல்வாக்கு உள்ளவை. அதுகளிலை ஒரு நடவடிக்கையும் எடுபடாமல் இருக்கும்போது, இப்ப முட்டி மோத யார் முன்வரப் போகினம்?'' என்று வேதனையுடன் கேட்டான் பேப்பர்தம்பி.

''முகப்புத்தகத்திலை கெம்பி எழும்பிற ஆக்கள், இந்தமாதிரி விசயங்களிலை களத்திலை இறங்கி விசயத்தை கண்டறிய வேண்டியதுதானே?'' என்று சிரிப்புடன் சொன்னான் ஜீவன்.

''அந்தப் போராட்டத்துக்கெல்லாம் இன்னும் 'பொன்சர்' கிடைக்கேல்லையாம்'' என்று உள்குத்துக் குத்தினான் ரூபன்.

இவர்களின் கதைகளில் கவனம் செலுத்தாது, வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் வாத்தியார், இதனைக் கவனித்த ஏரம்பர் ''இன்னும் செல்லாச்சி சொன்னதையே நினைச்சுக் கொண்டிருக்கிறீங்களோ வாத்தியார்?'' என்று கேட்டார்

அதற்கு நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டது வாத்தியாரிடமிருந்து. தொடர்ந்து அவரே கதைக்கவும் செய்தார்.

''பாலியல் இலஞ்சம் கேட்டது உண்மையாக இருந்தால், எவ்வளவு இலகுவாகவும், அச்சம் என்பது துளியளவும் இல்லாமலும் ஒருத்தன் இந்த மண்ணிலை அதைச் செய்ய முடியுது என்பது தான் பெரிய பயத்தை ஏற்படுத்துகிறது. எல்லாச் சம்பவங்களிலும், பக்கத்து வீட்டுக்காரரிடம் காலமையிலை, ஒரு கரண்டி தேயிலை கடன் கேட்கிற மாதிரி, குற்ற உணர்ச்சி கொஞ்சம் கூட இல்லாமல், பெண்களிடம் கூசாமல் இதைக் கேட்டு இருக்கிறாங்கள், 'நீ எங்கே சொன்னாலும், என்னை அசைக்க ஏலாது' என்ற துணிவு பெருமளவு அவங்களுக்கு இருக்கிற மாதிரித்தானே தெரியுது. செல்லாச்சியும் இதைத் தானே சொல்லிப் போட்டு, கடைசியாக 'கடவுளாவது காப்பாற்ற மாட்டாரா?' என்று கோவிலுக்கு போயிருக்கு. நாங்கள், பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்முறைகளில் எவ்வளவுதூரம் நீதி வழங்கியிருக்கிறம். இத்தனைக்கும் பெண்கள் பாதிக்கப்படுகிற இடங்களிலை இருக்கிறவை, போர்க்குற்ற விசாரணையைத் தூக்கிப் பிடிச்சுக் கத்துகினம். இல்லாட்டி புலி எதிர்ப்பைக் கையிலை எடுக்கினம். தங்களுக்குப் பக்கத்திலை நடக்கிற அயோக்கியத்தனங்களைத் தடுக்கத் துரும்பையும் கிள்ளிப் போடமாட்டினம். ஏனென்றால் தங்கடை இருப்புக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்பதுதானே காரணம்.'' என்று கூறி முடித்தார் வாத்தியார்.

அதேநேரம், கடவுளிடம் பாரத்தை இறக்கி வைத்த திருப்தியில், செல்லாச்சி திரும்பி வந்து அமர்ந்தாள். எல்லோரையும் பார்த்துச் சிரித்தாள். ''இப்பதான் பழைய செல்லாச்சி'' என்று சொல்லிச் சிரித்தான் பேப்பர் தம்பி.

''நாங்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் மாறின மாதிரித் தெரிவோமே தவிர, எப்பவும் மாற மாட்டோம்'' என்றாள் செல்லாச்சி..

அப்போது நிலைமையை இயல்பாக்க ''மஹிந்த செய்தது தான் சரி என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் சொன்னவர்' என்று இனிச் சொன்னாலும் சொல்லுவாங்கள் போலை இருக்கு'' என்றான் ரூபன்.

இதென்னடாப்பா புதுக்கதையாக இருக்கு? என்று ஆச்சரியப்பட்டார் ஏரம்பர்.

''அடுத்து வாற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலை போட்டியிடும் ஆசை கனபேருக்கு வந்திருக்காம். அவையிலை தமிழர் தரப்புக் கட்சிகளோடை ஒட்டியிருப்பவை அந்தநேரம் மட்டும் பிரபாகரன் வாழ்க என்று சொல்லிப்போட்டு போகலாம் என்று நம்பியிருக்கினமாம். ஆனால், தேசியக் கட்சிகளுக்குப் பின்னாலை திரியிறவைக்கு, தாங்கள் அந்தக் கட்சியிலை இருக்கிறதை நியாயப்படுத்த வேண்டியிருக்காம். அதனாலை, தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கிற மாதிரியும், தேசியக் கட்சிகளுடன் இணைஞ்சு ஓடித்தான் எதையும் வெல்ல முடியும் என்றும் கதை சொல்ல ஆரம்பிச்சிருக்கினமாம். அதுக்காக தமிழர் தரப்பு பிரமுகர்கள் சொன்னதுகளை தங்களுக்கு ஏற்ற மாதிரி வியாக்கியானம் செய்யத் தொடங்கியிருக்கினமாம். இதிலை கனபேர் இளம் ஆக்கள் என்பதுதான் முக்கியமாக கவனிக்க வேண்டியிருக்கு'' என்றான் ரூபன்.

''எல்லோருக்கும் சசிகலா குடும்பம் ஆக வேணும் என்று தான் ஆசை போல'' என்று சொல்லி விட்டு, வியாபாரத்தைக் கவனித்தாள் செல்லாச்சி.

''இன்னும் கொஞ்சப் பேர் சாதி, சமயம் என்று தூக்கிப் பிடிச்சு, அதுக்குள்ளாலை சுழியோடி, உள்ளூராட்சித் தேர்தலில் கரைசேரப் பாக்கினமாம். இனிவரும் உள்ளூராட்சித் தேர்தல் புதிய முறையிலை நடக்கும் என்று நம்புவதால், எப்பிடியாவது சபைக்குள்ளை போகவேணும் என்று இப்பவே கதை சொல்லி, படம் காட்டத் தொடங்கியிருக்கினம் என்று கதைக்கினம்'' என்றான் ரூபன்.

''ஊருக்குள்ளை புதுசு புதுசா குழுக்கள் முளைக்கிறதாகவும், அவையின்றை கையிலை தகுதிக்கு மீறி, காசு புழங்குவதாகவும். அவையும் புலி எதிர்ப்புக் கோசத்தை தூக்கிப் பிடிப்பதாகவும் கதைக்கினம். தெரியுமோ?'' என்று கேட்டான் ஜீவன்.

''தம்பிமார், இது உங்களுக்குப் புதுசாக இருக்கலாம். ஒரு நாட்டிலை தாங்கள் விரும்புறதை நடத்த, தங்களுக்கு ஏற்ற மாதிரி செயற்பட, சிலரை அந்நிய சக்திகள் உருவாக்கிறது வழக்கமான ஒன்றுதானே. இதற்காக பணம் உட்பட பலவித நன்மைகளை அள்ளிவழங்குகிறதும் சாதாரணமானதுதானே'' என்று விளக்கினார் வாத்தியார்.

''மஹிந்த காலத்தில், வங்கிக் கணக்குகளை இடையிடை பார்த்து, யாருக்காவது வெளியிலை இருந்து வழக்கத்துக்கு மாறாக அதிக பணம் வந்திருந்தால், கூப்பிட்டு விசாரிக்கிறது வழக்கமாம்'' என்று காதில் விழுந்ததைச் சொன்னான் ஜீவன்.

''அதிலையிருந்துதப்பத்தான் இப்ப 'புலி எதிர்ப்பு' இருக்கே. புலிகள் இல்லாத இந்தக் காலத்திலையும், புலி எதிர்ப்பை தூக்கிப் பிடிக்கிறவையின் நோக்கம் சந்தேகப்பட வைக்குதே' என்று சொன்னான் பேப்பர்தம்பி.

''அதுக்காக எல்லோரையும் சந்தேகப்படக்கூடாது'' என்று சொன்னார் ஏரம்பர்.

''எங்களுக்கும் அப்பிடி இருக்கக் கூடாது என்றுதான் விருப்பம். உள்ளூராட்சித் தேர்தல் வரட்டும். ஒவ்வொருவரும் இப்பவிடுறபுளுடாக்களும், அப்ப அவை யாரோடை ஒட்டியடிக்கினம் என்பதும் தெரியத்தானே போகுது.'' என்றபடியே எழுந்து நடந்தார் வாத்தியார். மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர்.

கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

30 வருடங்களுக்கு முன் 'சொப்பிங்' பையுடன் சென்ற நான்

# இன்று மீள்குடியேற்ற அமைச்சராக மக்களுக்குச் சேவையாற்றுகிறேன்

## முசலியில் ரிஷாத் தெரிவிப்பு

மன்னார், ஏப்.16

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு எமது சொந்த இடங்களை விட்டு உடுத்திய ஆடையுடன் வெளியேறிய நாங்கள் மீண்டும் எமது சொந்த ஊரில் குடியேறக் கூடிய சந்தர்ப்பத்தை இறைவன் எமக்கு அமைத்துத் தந்திருக்கின்றான்.

இதற்குக் காரணம் அவன் நம் மீது கொண்டுள்ள இரக்கம் தான். இன்று எமது சமூகத்தைப் பார்க்கும் பொழுது மிகவும் வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொண்டச்சி கிராமத்தில் அமைக்கப் பட்ட புதிய வீடுகளை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைத்து உரிமையாளர்களிடம் கையளித்தார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் கலந்து கொண்டார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

குர்ஆனை மறந்த ஒரு சமூகமாக மாறி வரக் கூடிய ஒரு நிலையில் இருக்கின்றோம். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் நாங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் வாழப்போவது இல்லை.

மரணம் எப்போது எம்மைத் தேடி வருமென தெரியாது. ஆனால் அது வந்தே தீரும் நாம் இருக்கும் போதே எமது பிள்ளைகளுக்கும் எமது சமூகங்களுக்கும் குர்ஆனையும் ஹதீஸ்களையும் நபிகளாரின் வரலாறுகளையும் அவர்களின் அடிமனதில் பதிய வைக்க வேண்டும்.



உங்களுக்குத் தெரியும் எம்மவர்கள் இங்கிருந்து வெளியேறுவதற்கு முன்பு எத்தனையோ வசதி படைத்தவர்கள் இருந்தார்கள். செல்வங்கள் நிறைத்து வைத்திருந்தார்கள். ஆனால் நாங்கள் சென்ற விதம் யாராலும் மறக்க முடியாது. ஒரு சொப்பிங் பையுடன் சென்றோம்.

ஆனால், அகதியாக எம்மவர்கள் சென்றாலும் இறைவன் எம்மை கைவிடவில்லை. எதிர்த்துப் பேச ஆதரவற்று வெளியேறிய நாங்கள் பெரும் பலத்துடன் இங்கு வந்தோம். . 'சொப்பிங் பையுடன்' சென்ற நான் ஒரு அமைச்சராக அதுவும் மீள்குடியேற்ற அமைச்சராக வந்தேன். அந்த நேரத்தில் தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மனிக்பாம்களிலே தங்கியிருந்தார்கள்.

அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றினேன். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் எனது பதினாறு வருட அரசியலில் 20 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளேன். இன்னும் கட்டிக்கொண்டு இருக்கின்றேன்.

இந்த வீடுகள் வழங்கும் பொழுது நீங்கள் எந்த மதம் என்று கேட்கவில்லை. நீங்கள் எந்த கட்சி என்று கேட்கவில்லை. நீங்கள் எந்த இடம் என்றும் கேட்கவில்லை. தமிழராக இருந்தாலும் சரி முஸ்லிமாக இருந்தாலும் சரி அவர்கள் எந்த கட்சியென்றாலும் சரி இறைவன் சாட்சியாக மனச்சாட்சிக்கு துரோகமின்றி அனைவருக்கும் வீடுகளை வழங்கினேன்.

காரணம் அகதி சமூகமாக நாங்கள் இருந்தபோது பட்ட துன்பம் நானும் பட்டிருக்கின்றேன். பாதிக்கப்பட்டவர்களை வைத்து நான் அரசியல் செய்ய முனையவில்லை. எனக்குக் கிடைத்த பதவியின் மூலம் மக்களுக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்து வருகின்றேன்

ஆனால், இன்று எமது சமூகத்தில் சிலர் என்ன காரணம் என்றே தெரியாமல் என்னை அழிக்க நினைக்கின்றார்கள்.

என்னை அழித்துவிட்டால் அவர்கள் இங்கு கொடி கட்டிப் பறக்க முடியுமென நினைக்கின்றார்கள்.

இந்த ஆட்சியை தீர்மானிக்கும் இடத்தில் இருக்கும் அந்தஸ்தை இறைவன் எனக்கு தந்திருக்கின்றான். எனவே சகோதரர்களே அப்பாவி மக்களிடம் இனவாத அரசியலை புகுத்த நினைக்கும் அரசியல் வாதிகளிடம் கூறுங்கள் இறைவன் உங்களை பார்த்துக்கொண்டிருக்கின்றார் என்று.- என்றார். (ஐ)

# கடலில் மீன் வளத்தை அறிய புதிய வழிமுறை அறிமுகம்

கொழும்பு, ஏப்.16

நாட்டின் கடல் எல்லைக்குள் மீன் வளம் அதிகமாகக் காணப்படும் இடங்களை அடையாளம் காண்பதற்குரிய புதிய வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மீனவர் சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக இத்தமல்கொட தெரிவித்தார்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் காணப்படும் மீன் வளங்களை அடையாளங்கண்டு, அது தொடர்பான தகவல்களை மீனவர்களுக்கு அறியத்தரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, கடலில் மீன்வளம் உள்ள இடங்களை முன் கூட்டியே அறிந்துகொள்வதன் ஊடாக அதிகளவு மீன்களைப் பிடிப்பதற்கும், அதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வழியேற் படுமென நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

கரைப் பகுதியிலிருந்து அகலாங்கு மற்றும் நெட்டாங்கு ரீதியாக கடலில் மீன்கள் இருக்கும் இடம் தொடர்பில் துல்லியமான தகவல்களை மீனவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை நாரா நிறுவனம் ஆரம்பித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் இந்த செயற்பாடுகளை நான்கு வீதமான இலங்கை மீனவர்களுக்காக முழு அளவில் முன்னெடுக்கவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# உயிர்ப்பு விழா, புதுவருட விழா போட்டிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்கம் நடத்தும் உயிர்ப்பு விழா - புதுவருட விழாப் போட்டிகளுக்காக ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

சர்வமத ஒன்றிணைவுடன் சமூக முன்னேற்றத்துக்காக உழைப்போம் என்னும் கருப் பொருளில் கவிதை, கட்டுரை சுவரொட்டி, நாடகப் போட்டிகள் என்பனவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டுரைப் போட்டிக்கு தரம் 9 இற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றலாம். 250-300 சொற்களில் ஒருபக்கத் தாளில் தட்டச்சு அல்லது கையெழுத்தில் அனுப்ப வேண்டும்.

கவிதை திறந்த போட்டியாக இடம்பெறும். இதில் மரபுக் கவிதை அல்லது புதுக்கவிதை எழுதப்பட வேண்டும். கவிதை 16 - 24 வரிகளில் அமைய வேண்டும்.

சுவரொட்டிக்கு எந்த வண்ணங்களும் பயன்படுத்தலாம். அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

நாடகத்தில் சமூக மாற்றத்துக்கான சிந்தனைகள் இருத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் புதிதாக எழுதப்பட வேண்டும். கிராமசேவையாளர், அதிபர், பங்குத்தந்தை, கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் உறுதிப்படுத்திய பின் ஏப்ரல் 20 ஆம் திகதிக்குள், இயக்குநர், கியூடெக் கரித்தாஸ், சர்வமத சகவாழ்வு அரங்கம்,இல.14,மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# போதைப் பொருள் சுற்றிவளைப்புக்கு 40 பொலிஸார் விசேடமாக நியமனம்

போதைப் பொருள் சுற்றிவளைப்புகளை விஸ்தரிப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் 40 பேர் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன என்று போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் குறிப்பிட்டது.

விசேட தெரிவுக் குழுவொன்றின் ஊடாகவே இந்த உத்தியோகத்தர்கள் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்துக்கு இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.இந்தகுழுவினருக்கு நாட்டின் எந்தவொரு இடத்துக்கும் சென்று சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று பணியகம் தெரிவித்தது.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பில் 7 ஆயிரத்து 292 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் சுட்டிக் காட்டியது. (ஐ)

# இலங்கையில் பாரதி...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பாரதி நூற்றாண்டு நடந்த சமயம் தமிழகத்திலிருந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் அழைக்கப் பட்ட. இம்மூவரும் தமது எழுத்துப்பணிக்காக சோவியத் நாட்டின் நேரு நினைவு விருது பெற்றவர்களே.

இவர்கள் மூவரும் கொழும்பிலும் இலங்கையில் இதர பிரதேசங்களிலும் நடந்த பாரதி நூற்றாண்டு நிகழ்வுகளில் உரையாற்றினர். குறிப்பிட்ட காலகட்டத்தில் இலங்கையில் பாரதி தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் இனத்தவரிடத்திலும் தீவிர கவனிப்புக்குள்ளானார்.

கொழும்பு நிகழ்வு 19-03-1983 ஆம் திகதி காலை முதல் இரவு வரையில் கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. பாரதி நூல்களின் கண்காட்சியுடன் ஈழத்து தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் ஒளிப்படக்காட்சியும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு நடந்தகாலப் பகுதியில் பேராசிரியர் கைலாசபதி நம்மத்தியில் இல்லை. அவரது சேகரிப்பில் இருந்த ஏராளமான பாரதி சம்பந்தப்பட்ட ஆய்வு நூல்களை திருமதி சர்வமங்களம் கைலாசபதி கண்காட்சிக்காக வழங்கி உதவினார்.

அன்றைய சபாநாயகர் எம். ஏ. பாக்கீர் மாக்கார் கண்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றினார். முற்பகல் ஆரம்பமான ஆய்வரங்கில் நீதியரசர் ஏ. அப்துல்காதர் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில், பாரதியின் தாக்கம் ஈழத்து கவிதை இலக்கியத்தில் எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றி சில்லையூர் செல்வராசனும், தமிழக கவிதை இலக்கியத்தில் பாரதியின் தாக்கம் பற்றி சிதம்பர ரகுநாதனும் உரையாற்றினர்.

மதிய இடைவேளையின் பின்னர், சுபைர் இளங்கீரன் தலைமையில் நடந்த ஆய்வரங்கில், பேராசிரியர் சி. தில்லைநாதன் ஈழத்து புனைகதை இலக்கியத்திலும், ராஜம் கிருஷ்ணன் தமிழக புனைகதை இலக்கியத்திலும், பேராசிரியர் சபா. ஜெயராசா ஈழத்து இலக்கியப் போக்குகளிலும், பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன் தமிழ் இலக்கியப்போக்குகளிலும், கே. சண்முகலிங்கம் பாரதி ஆய்விலும் முதலான தலைப்புகளில் பாரதி ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் பற்றி கனதியான ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

அன்றைய ஆய்வரங்கு நிகழ்வு பத்மா சோமகாந்தனின் நன்றியுரையுடன் நிறைவடைந்ததையடுத்து, சுபைர் இளங்கீரன் எழுதிய மகாகவி பாரதி நாடகம் மேடையேறியது. இதனை இயக்கியவர் நாடகக்கலைஞரும் எழுத்தாளருமான அந்தனிஜீவா.

இந்நாடகத்தின் முடிவில், இதில் நடித்தவர்களையும் இதனை எழுதியவரையும் இயக்கியவரையும் சிதம்பர ரகுநாதன் பாராட்டிப்பேசினார்.

மறுநாள் முற்பகல் மீண்டும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கண்காட்சிகள் தொடர்ந்தன. அத்துடன் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பாரதி இயல் ஆய்வாளர்களுடனான இலங்கை எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களின் சந்திப்புக் கலந்துரையாடல் காரசாரமான விவாதங்களுடன் நடைபெற்றது.

தமிழகத்து எழுத்தாளர்களுடனான கருத்து மோதல்களாக இராமல் இலங்கை எழுத்தாளர்கள் - பத்திரிகையாளர்களுடனான மோதலாகவே அது காட்சியளித்தது. எனினும் அந்தச் சூட்டை பாரதியின் கருத்துக்களினாலேயே தமிழகப்பேச்சாளர்கள் தணித்தனர்.


அன்றையதினம் மாலையில் அக்கலப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ. அமிர்தலிங்கம்சரஸ்வதி மண்டபத்திற்கு வருகை தந்து கண்காட்சியைக் கண்டு வியந்து பாராட்டினார். அதில் இடம்பெறத்தவறிய சில எழுத்தாளர்களின் பெயர்களையும் அவர் சுட்டிக்காண்பித்தமையுடன், இலங்கையின் இதர பிரதேசங்களிலும் தமிழ் - முஸ்லிம் எழுத்தாளர்களின் ஒளிப்படக் கண்காட்சியை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதி நூற்றாண்டுக்குழு நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அன்றையதினம் மாலை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் பாரதி நூற்றாண்டு பொதுக்கூட்டம் மண்டபம் நிறைந்த மக்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

(தொடரும்)

# அமெரிக்க விமானத் தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பினர் 36 பேர் பலி!

## அணுகுண்டை ஒத்த வெடி குண்டே பயன்படுத்தப்பட்டது



வொஷிங்கடன், ஏப். 16

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க விமானப்படை நடத்திய தாக்குதலில் 36 ஐ.எஸ். அமைப்பினர் கொல்லப் பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆதரவு ஆட்சி இடம் பெற்று வருகிறது. இதை அகற்றுவதற்காக ஐ.எஸ். அமைப்பினர் தலைநகர் காபூலிலும், நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் அடிக்கடி வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தானை யொட்டி அமைந்த எல்லையோர மாகாணமான நங்கார்ஹரில் உள்ள அச்சின் மாவட்டத்தில் மோமண்ட் தாரா என்னும் இடத்தில் ஐ.எஸ். அமைப்பினர் பூமிக்கு அடியில் பல அடி ஆழத்துக்கு சுரங்கம் அமைத்து ஆயுதங்களை குவித்து வைத்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

இதையடுத்து பயங்கரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்த அமெரிக்கா முடிவு செய்தது. இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணி அளவில் எம்.சி.-130 ரக சரக்கு விமானம் மூலம் 9,797 கிலோ எடைகொண்ட ஜி.பி.யூ-43 ரக வெடிகுண்டு எடுத்துச் செல்லப்பட்டு ஐ.எஸ். அமைப்பினரின் முகாம்கள் மீது வீசப்பட்டது.

சுமார் 30 அடி நீளமும் மூன்றரை அடி விட்டமும் கொண்ட இந்த வெடிகுண்டு விழுந்து வெடித்துச் சிதறிய அடுத்த விநாடியில் பயங்கரவாதிகள் முகாம் முற்றிலும் சின்னாபின்னமானது. அவர்கள் அமைத்து இருந்த சுரங்கமும் இடிந்து நொருங்கியது.

இதில் சம்பவ இடத்திலேயே 36 ஐ.எஸ். அமைப்பினர் கொல்லப்பட்டனர். மேலும் ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். அத்துடன், அந்தப் பகுதி பயங்கரவாதிகள் எப்போதும் பயன்படுத்த முடியாத அளவிற்கு நிர்மூலம் ஆனது.

முன்னதாக 10 தொன் வெடி குண்டு தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த பகுதியில் வசித்து வந்த பொதுமக்கள் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டனர்.

இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறுகையில்-

எங்கள் திட்டம் துல்லியமாக இருந்தது. மிக மிக வெற்றிகரமான முறையில் அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.

அச்சின் மாகாண ஆளுநர் இஸ்மாயில் சின்வாரி கூறும் போது,

இதற்கு முன்பு இதுபோன்ற தாக்குதலை நான் கண்டதில்லை. அந்த அளவிற்கு குண்டுவீச்சு காரணமாக எழுந்த தீ நெருப்புப் பந்து போல காட்சியளித்தது என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க போர் விமானம் வீசிய ஜி.பி.யூ-43 ரக வெடி குண்டு 2003 அம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்பட்டது. இந்த ரக வெடி குண்டு, அனைத்து வெடி குண்டுகளுக்கும் தாய் என்று வர்ணிக்கப்படுகிறது. இதில் பயன்படுத்தப்படும் வெடி மருந்து 11 தொன் அளவிற்கு இணையான வெப்ப சக்தியை வெளியேற்றி பலத்த சேதத்தை ஏற்படுத்தும்.

இத்தகைய சக்திவாய்ந்த வெடிகுண்டை அமெரிக்கா, பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக பயன்படுத்துவது இது வே முதல் முறை ஆகும். இந்த வெடிகுண்டின் அடுத்த நிலைதான் அணுகுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை!

### தீவிர ஆலோசனையில் அமெரிக்கா!!



வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிர ஆலோசனை நடத்தப் பட்டு வருகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடகொரியாவின் தந்தை என்றழைக்கப் படும் கிம் இல் சங்கின் 105 ஆவது பிறந்த தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதை யொட்டி வடகொரியா தனது ஆறாவது அணு ஆயுத சோதனையை நடத்தக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பாக அமெரிக்க அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:-

வடகொரியாவின் அச்சுறுத்தல்களை சமாளிக்க யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் போர்க் கப்பல் கொரிய தீபகற்பத்தில் முகாமிட்டுள் ளது. அமெரிக்க போர் விமானங்களும் தென் கொரியாவில் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வடகொரியாவின் அணு ஆயுத சோதனையைத் தடுக்க அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகிறோம்.- என்றும் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரம் குறித்து வடகொரிய வெளியுறவு அமைச்சர் ஹன் சாங்-ரியால், ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:-

கொரிய தீபகற்பத்தில் அமெரிக்க இராணுவம் போர்க் கப்பல்களையும் போர் விமானங்களையும் குவித்து பதற்றத்தை அதிகரித்து வருகிறது. அமெரிக்கா போரை தேர்வு செய்தால் நாங்களும் போருக்குத் தயாராக உள்ளோம். அந்த நாட்டுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.- என்றும் தெரிவித்துள்ளார்.

## வடகொரியா- அமெரிக்கா இடையே போர் எவ்வேளையும் மூளலாம்!

### சீனா எச்சரிக்கை



பெய்ஜிங், ஏப். 16

வடகொரியா-அமெரிக்கா விவகாரத்தில் எந்த நேரத்திலும் போர் மூளலாம் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்டை நாடான தென் கொரியாவை அச்சுறுத்தி வரும் வடகொரியா, ஐ.நா.சபை விதித்த பொருளாதாரத் தடைகளை மீறி அவ்வப்போது அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் வடகொரியா மீண்டும் அணுகுண்டுச் சோதனையில் ஈடுபடலாம் என்று தகவல்கள் வெளியாகிஉள்ளன.

இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறது. மேலும் தனது போர் விமானங்களையும், போர்க் கப்பல்களையும் கொரிய தீபகற்ப பகுதியில் அமெரிக்கா குவித்து வருகிறது.

இதனால் வடகொரியாவுக்கு எதிராக எந்த நேரத்திலும் அமெரிக்க இராணுவம் போரில் குதிக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில், சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி நேற்று முன்தினம் பெய்ஜிங் நகரில் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜீன் மார்க்குடன் இணைந்து கூட்டாக அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடகொரிய விவகாரத்தில் எந்த நேரத்திலும் போர் மூளலாம். இந்த போரில் யாருக்கும் வெற்றி கிடைக்கப்போவதில்லை. இதனால் இப்பிராந்தியத்தில் பதற்றம் தான் ஏற்படும். எனவே பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடகொரியா மீது அமெரிக்கா போரைத் தொடங்கினால், தென்கொரியாவில் வசிக்கும் தனது நாட்டின் 60 ஆயிரம் குடிமக்களை எப்படிப் பாதுகாப்பாக வெளியேற்றுவது என்பது குறித்து ஜப்பான் நாட்டின் தேசிய பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் தீவிர ஆலோசனை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க மெட்ரோ ரயிலில் மர்மநபர் துப்பாக்கிச் சூடு!

அட்லாண்டி, ஏப். 16

அமெரிக்காவில் மெட்ரோ ரயில் நிலையத்தில் மர்மநபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்; 3 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் அட்லாண்டா நகரம் உள்ளது. அங்கு உள்ள மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஒரு மெட்ரோ ரயில் புறப்பட்டுச் சென்றுள்ளது.

ரயில் புறப்பட்ட சிறிது நேரத்தில் ஒரு பெட்டியில் இருந்த மர்மநபர் ஒருவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் திடீரென அங்கு இருந்த பயணிகளை நோக்கிச் சுடத் தொடங்கினார்.

இதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். 3 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்களை அட்லாண்டா மெட்ரோ ரயில் நிலைய பொலிஸார் மீட்டு சிகிச்சைக்காக மருந்துவமனையில் சேர்த்தனர்.

பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று சந்தேகப்படும் நபரை அட்லாண்டா நகரை அடுத்த மேற்கு ஏரி ரயில் நிலையத்தில் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் இருந்து துப்பாக்கியை பறிமுதல் செய்தனர்.

அவர் யார்? எதற்காக பயணிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார்? என்பது பற்றி விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜாதவ் மரண தண்டனை விவகாரம்:

# குற்றப் பத்திரிகையின் நகலை வழங்குமாறு பாகிஸ்தானிடம் மத்திய அரசு கோரிக்கை!

இந்தியாவின் முன்னாள் கடற்படை அதிகாரி குல்பூஷண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை தீர்ப்பின் நகல் மற்றும் குற்றப்பத்திரிகையின் நகல் ஆகியனவற்றை வழங்கும்படி பாகிஸ்தானிடம் மத்திய அரசு கோரியுள்ளது.



இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதர் கவுதம் பம்பாவாலே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் வெளியுறவு செயலர் டெஹ்மினா ஜன்ஜூவாவை சந்தித்தார். அப்போது ஜாதவை, தூதரக அதிகாரிகள் சந்தித்துப் பேச அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-

ஜாதவுக்கு எதிராக விதிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பின் நகல் மற்றும் குற்றப் பத்திரிகை நகலை வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளோம். கடந்த ஓராண்டில் மட்டும் ஜாதவை சந்திக்க இந்திய தூதரக அதிகாரிகள் 13 தடவைகள் முயன்றனர். ஆனால், ஒரு முறை கூட அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வழக்கில் மேல்முறையீடு செய்ய வசதியாக ஜாதவை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவு செயலரைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளோம்.- என்றார்.

ராஜாங்க ரீதியிலான நடவடிக்கை தவிர, சட்ட ரீதியான நடவடிக்கைவழியாகவும்ஜாதவை காப்பாற்ற மத்திய அரசு முயன்று வருகிறது என டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே, குல்பூஷண் ஜாதவுக்கு உரிய நீதி கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன என மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்படையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி குல்பூஷண் ஜாதவ், கடந்த வருடம் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி அவர் ஈரானில் இருந்து பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், மாஸ்கெல் பகுதிக்குச் சென்றார். அங்கு அவர் பாகிஸ்தானுக்கு எதிராகச் சதி செய்தார் எனவும், கராச்சி குண்டுவெடிப்பில் அவருக்கு தொடர்பு இருக்கிறது எனவும் குற்றம் சாட்டப்பட்டு அவரை அந்த நாட்டு உளவுத் துறையினர் கைது செய்தனர்.

இதுதொடர்பாக பாகிஸ்தான் ராணுவ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த இராணுவ நீதிபதி குல்பூஷண் ஜாதவுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## டில்லியில் தமிழக விவசாயிகள் 'தாலி அறுத்து'ப் போராட்டம்!



டில்லியில் சேலை அணிந்த ஆண் விவசாயிகள் வங்கிக்கடன் ரத்து, வறட்சிக்கானக் கூடுதல் நிவாரணம் மற்றும் காவிரி மேலாண்மை அமைப்பது உட்படப் பல கோரிக்கைளை முன்வைத்து 'தாலி அறுக்கும்' போராட்டத்தில் நேற்றுச் சனிக்கிழமை ஈடுபட்டனர்.

டில்லி ஜந்தர் மந்தரில் தமிழக விவசா யிகள் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பி.அய்யாகண்ணு தலைமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில், அன்றாடம் அரசு மற்றும் பொதுமக்கள் கவனத்தை கவரும் வகையில் பல்வேறு வகையான போராட்டங்களை இவர்கள் நடத்தி வருகின்றனர். இதில் ஆண் விவசாயிகள் 9 பேர் பெண்களைப் போல் சேலை மற்றும் தாலி என்பவை அணிந்து, பின்னர் தாலியை அறுத்துப் போராட்டம் நடத்தினர். (ச)

## ஜல்லிக்கட்டில் காளை மோதி இளைஞன் சாவு!

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜல்லிக்கட்டு விழாவில் காளை மோதி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளான். 27 பேர் காயமடைந்தனர்.

காக்குடி வேளாங்கண்ணி (வயது-32) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். காயமடைந்தவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

## 200 ஆண்டுகள் பழைமையான அம்மன் சிலை திருட்டு!

அரியலூர் சொர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஐம்பொன்னால் ஆன அம்மன் சிலை திருட்டு போயுள்ளது.


அரியலூர் மாவட்டம் ஒட்டக்கோவில் கிராமத்தில் சொர்ணபுரீஸ்வரர் கோயில் உள்ளது. இந்த கோயிலில் இரண்டரை அடி உயரம், 23 கிலோ எடை உள்ள சொர்ணாம்பிகை அம்மன் ஐம்பொன் சிலை உள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கோயிலுக்குச் சென்ற ஆலயக் குருக்கள் அங்கிருந்த ஐம்பொன் அம்மன் சிலை காணாமற் போயிருப்பதைக் கண்டு, கோயிலின் தர்மகர்த்தாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இதனை அடுத்து, அரியலூர் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிலையைத் திருடிச் சென்ற மர்ம நபர்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தலித்,சிறுபான்மை மக்களுக்கு மோடி ஆட்சியில் அச்சுறுத்தல்!

### முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் சாடல்



சென்னை,ஏப்.16

மோடி ஆட்சியில் தலித் மற்றும் சிறுபான்மை மக்களான முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்தியா விடுதலை அடைந்து 70 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், இன்னும் இங்கு முழுமையான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன கிடைக்கவில்லை.

-இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குஜராத், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தானில் மாட்டுக்காக மனிதர்கள் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்கிறது. பசு பாதுகாப்பு என்ற பெயரில் சிறுபான்மையினரும், தலித்துகளும் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். ஆனால், இதனைக் கண்டிக்கக் கூட பிரதமர் மோடி முன்வரவில்லை.

உத்தரப் பிரதேசத்தில் ஓட்டோவில் சென்ற காதலர்களை காவலர்களும், காவிகளும் சேர்ந்து அடித்து இழுத்துச் சென்று, காவல் நிலைத்தில் வைத்து விசாரித்து துன்புறுத்தியுள்ளனர். பா.ஜ.க. ஆட்சியில் காதலர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தலித்துகளின் விடுதலைக்காகப் பாடுபட்ட அம்பேத்கர் பிறந்து 126 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இன்றும் கிராமங்களில் பொதுக்கிணறுகள், குளங்களில் தலித் மக்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை.

நாட்டில் தலித் மற்றும் சிறுபான்மை மக்களான முஸ்லிம், கிறிஸ்தவர் ஆகியோர் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். இந்த அநீதிகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும்.-என்றார்.

## அண்ணனின் மகன் மரணம்: பிணையில் வருவாரா சசிகலா?

சசிகலாவின் 2 ஆவது அண்ணன் வினோதகனின் மகன் டி. வி. மகாதேவன் நேற்று சனிக்கிழமை மாரடைப்பால் காலமானார்.

தஞ்சாவூரில் வசித்து வந்த 47 வயதான அவர், திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கசுவாமி கோயிலுக்குச் சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, கும்பகோணத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிர் பிரிந்துள்ளது. தற்போது அவரது உடல் தஞ்சாவூருக்குகொண்டுசெல்லப்படுகிறது. இவர் ஜெயலலிதா பேரவையின் மாநில செயலாளராகப் பதவி வகித்து பின்னர் விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

இந்நிலையில், அண்ணன் மகன் உயிரிழந்துள்ளமையால், இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள சசிகலா பிணையில் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

### கடல் உயிரிகளின் இனவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில்

# தமிழகத்தில் 45 நாள்களுக்கு மீன்பிடிக்கத் தடை விதிப்பு!

புதுச்சேரி,ஏப்.16

தமிழகத்தின் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நேற்று முதல் மே மாதம் 29 ஆம் திகதி வரையான 45 நாள்களுக்கு மீன்பிடித் தடைக்காலம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

மீன் உள்ளிட்ட கடல் உயிரிகளின் இனவிருத்தியைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு கடல் பகுதியாக ஆண்டுதோறும் 45 நாள்கள் மீன் பிடிக்க மத்திய அரசு தடை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இதனடிப்படையில், இந்த ஆண்டு கிழக்குக் கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்கு அரசு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் திருவள்ளுவர் முதல் கன்னியாகுமரி வரை 13 கடலோர மாவட்டங்களிலும் காரைக்கால் மற்றும் புதுச்சேரியில் உள்ள கடலோர மாவட்டங்களிலும் மொத்தம் 15 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குள் செலுத்தாமல் நிறுத்தப்பட்டுள்ளன.

**அரசு நிவாரணத் தொகை:**

45 நாள்கள் மீன்பிடி தடைக் காலத்தில் அரசு மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக 2ஆயிரத்து 500 ரூபா நிவாரணத் தொகை வழங்கி வரும் நிலையில், இந்த ஆண்டு முதல் 5 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி தடைக்காலத்தில் வேறு பணிகளுக்குச் செல்ல முடியாத மீனவர்கள் வட்டிக்கு கடன் வாங்கி குடும்பம் நடத்தும் சூழல் காணப்படுகின்றமையால், நிவாரணத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதே அவர்களது பிரதான கோரிக்கையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புனே அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி குஜராத் லயன்ஸ் வெற்றி!

ராஜ்கோட், ஏப். 16

ராஜ்கோட்டில் நடைபெற்ற ஐ.பி.எல் லீக் போட்டியில் புனே அணியை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி குஜராத் லயன்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

10 ஆவது ஐ.பி.எல். இன் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதையடுத்து களமிறங்கிய ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணியின் தொடக்க வீரர் ரகானே ஓட்டம் ஏதுமின்றி பிரவீண் குமார் வேகத்தில் வெளியேறினார். மற்றொரு தொடக்க வீரரான திரிபாதி 17 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் என 33 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் ஸ்மித் 28 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர்கள் என 43 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஸ்மித் சுழலில் பிடி கொடுத்து அவுட்டானார். பென் ஸ்டோக்ஸ் 25 ஓட்டங்களும், மனோஜ் திவாரி 31 ஓட்டங்களும் அங்கிட் சர்மா 25 ஓட்டங்களும் எடுத்தனர். 20 ஓவர்கள் முடிவில் புனே அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 171ஓட்டங்களை எடுத்தது.

172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய குஜராத் அணியின் தொடக்க வீரர்கள் மெக்கலம், டுவைன் ஸ்மித் தொடக்கம் முதலே அதிரடி காட்ட, அணியின் ஓட்டப் பெறுதி மளமளவென ஏறியது. முதல் விக்கெட்டுக்கு 94 ஓட்டங்கள் சேர்த்த போது, தாகிர் வீசிய பந்தை தூக்கி அடித்த ஸ்மித் சகாரிடம் பிடியெடுப்பானார் . ஸ்மித் 30 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என 47 ஓட்டங்களை எடுத்தார்.

ஸ்மித்தை தொடர்ந்து 32 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களை விளாசிய மெக்கலம் 49 ஓட்டங்களில் சகார் பந்து வீச்சில் 'ஸ்டம்ப் அவுட்' ஆனார். தினேஷ் கார்த்திக் 5 பந்துகளில் 3 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஆட்டம் இழந்தார். பின்னர் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் ரெய்னா மற்றும் பின்ச் அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு சென்றனர். ரெய்னா 22 பந்துகளில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என 35 ஓட்டங்களும், பின்ச் 19 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் என 33 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இறுதியில் 18 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டிய குஜராத் லயன்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதேவேளை, நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் 'ஹாட்ரிக்' சாதனையை பெங்களூர் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரீ, குஜராத் லயன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆண்ட்ரு டை ஆகியோர் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளின்போது படைத்தனர்.

முதல் 'ஹாட்ரிக்' சாதனையை பெங்களூர் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரீ (மேற்கிந்தியத் தீவுகள்) படைத்தார்.

மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் 3 ஆவது ஓவரை பத்ரீ வீசினார். இதன் 2 ஆவது பந்தில் பார்த்தீவ் பட்டேல் (3 ஓட்டங்கள்) 'கவர்' திசையில் நின்ற கெய்லிடம் பிடியெடுப்பானார். அடுத்து இறங்கிய மெக்லெனஹான் ( ஓட்டம் எதுவுமின்றி) புல்டோசாக வீசப்பட்ட பந்தைத் தூக்கியடித்த போது சிக்கினார். 4 ஆவது பந்தை எதிர்கொண்ட அணித் தலைவர் ரோகித் சர்மா ( ஓட்டம் எதுவுமின்றி) தாழ்வாக ஊடுருவிய பந்தைத் தடுக்க முடியாமல் 'கிளீன் போல்ட்' ஆகிப்போனார். இதன் மூலம் 36 வயதான பத்ரீ 'ஹாட்ரிக்' சாதனைக்குச் சொந்தக்காரர் ஆனார்.

அதன் தொடர்ச்சியாக இரவில் இடம்பெற்ற புனே சூப்பர் ஜெயன்ட்சுக்கு எதிரான ஆட்டத்தில் குஜராத் லயன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆண்ட்ரு டையும் 'ஹாட்ரிக்' சாதனை படைத்து அட்டகாசப்படுத்தினார்.

ஆட்டத்தின் 20 ஆவது ஓவரில் அங்கித் ஷர்மா (25 ஓட்டங்கள்), மனோஜ் திவாரி (31 ஓட்டங்கள்), ஷர்துர் தாகுர் ( ஓட்டம் எதுவுமின்றி) ஆகியோரின் விக்கெட்டுகளை வரிசையாக கபளீகரம் செய்து 'ஹாட்ரிக்' சாதனையாளராக ஜொலித்தார். 30 வயதான ஆண்ட்ரூ டை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் ஆவார்.

இவற்றையும் சேர்த்து ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இதுவரை 16 'ஹாட்ரிக்' பதிவாகியுள்ளன. பத்ரீ, ஆண்ட்ரு டை இருவருக்கும் இந்த சீசனில் இதுதான் முதல் ஆட்டமாகும்.

ஐ.பி. எல். போட்டியில் ஒரே நாளில் இரண்டு 'ஹாட்ரிக்' சாதனை நிகழ்த்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

# பெங்களூர் அணியை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றி பெற்றது மும்பை!



பெங்களூர், ஏப் 16

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பெங்களூர் அணியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி ஹாட்ரிக் வெற்றியை பெற்றுள்ளது.

ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதிய ஐ.பி.எல். தொடரின் 12 ஆவது போட்டி சின்னசாமி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்துடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 142 ஓட்டங்களைச் சேர்த்தது.

அதன்பின் 143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களம் இறங்கியது. பெங்களூர் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரீ ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்த 7 ஓட்டங்கள் எடுப்பதற்குள் முக்கிய நான்கு விக்கெட்டுக்களை இழந்து திணறியது மும்பை. அடுத்து வந்த ராணா 11 ஓட்டங்களில் வெளியேறினார். அப்போது மும்பை அணி 8 ஓவர்களில் 33 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

6 ஆவது விக்கெட்டுக்கு பொல்லார்ட் உடன் பாண்டியா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதலில் விக்கெட்டுக்களை காப்பாற்றுவதற்காக நிதானமாக விளையாடிய பொல்லார்ட் அதன்பின் அதிரடியாக விளையாடினார்.

13 ஓவர்கள் முடிவில் மும்பை அணி 70 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த அணியின் வெற்றிக்கு 42 பந்தில் 73 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அதன் பின் பொல்லார்ட் அதிரடி வாணவேடிக்கை விட ஆரம்பித்தார். 14 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர் விளாசினார். 15 ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி அடித்த பொல்லார்ட் 16 ஆவது ஓவரில் இரண்டு இமாலய சிக்ஸர் விளாசினார்.

18 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தில் சிக்ஸ் விளாசி பொல்லார்ட் அடுத்த பந்தில் ஆட்டம் இழந்தார். அவர் 47 பந்தில் 3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 70 ஓட்டங்கள் குவித்தார். பொல்லார்டின் அதிரடியால் மும்பை அணி வெற்றி உறுதியானது. அடுத்து பாண்டியாவுடன் ஜோடி சேர்ந்த ஹர்திக் பாண்டியா 19 ஆவது ஓவரின் 5 ஆவது பந்தை சிக்ஸருக்கு தூக்கி அணியை வெற்றி பெற வைத்தார். மும்பை அணி 18.5 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 14 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.



# ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி!

கொழும்பு, ஏப் 16

அடுத்த மாதத்தில் ஸ்கொட்லாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, அந்நாட்டு அணியுடன் இரண்டு பயிற்சிப் போட்டிகளில் பங்கெடுக்கவுள்ளது.

ஜூன் மாதத்தில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் இடம்பெறவுள்ள ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான தயார்படுத்தல் போட்டிகளாக இலங்கை அணி இப்பயிற்சிப் போட்டிகளில் பங்கெடுக்கின்றது. இவ்விரண்டு போட்டிகளும் அடுத்த மாதம் 21ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் பெக்கிங்ஹாம் கவுன்டி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

## ஒற்றையாட்சிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சிக்கு வெளியில் சமஷ்டிக் குணாம்சங்களைக் கொண்ட ஒரு தீர்வுக்கு மட்டுமே நாம் இணங்குவோம்."

– இவ்வாறு மீண்டும் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

நேற்றுக்கொழும்புதொலைக்காட்சிச் சேவை ஒன்று ஒளிபரப்பிய விவாத நிகழ்ச்சியிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், சுமந்திரன் எம்.பியும் வாதிட்டனர்.

அதில் வாதங்களை முன்வைத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் தான் முன்வைத்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கைவிட்டுவிட்டது எனக் குற்றம் சுமத்தினார். அதனை மறுத்துரைத்தார் சுமந்திரன்.

"ஒற்றையாட்சிக்குள் தீர்வு கிடையாது. அது நாம் எமது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி அந்த வாக்குறுதிப்படி, சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுக்கு மட்டுமே நாம் இணங்குவோம்.

சில சமயங்களில் 'சமஷ்டி' என்ற சொற்பிரயோகம் அந்தத் தீர்வில் பிரயோகிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால், நிச்சயம் சமஷ்டி குணாம்சங்களைக் கொண்ட ஒரு தீர்வுக்கு மட்டுமே நாம் இணங்குவோம்.

இதை நான் இப்போது கூறவில்லை. கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னரே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பங்குபற்றிய கூட்டத்தில் வைத்து அறிவித்திருக்கின்றேன். 'நாங்கள் சமஷ்டியை வலியுறுத்தி அதனையே பெறுவாம். ஆனால், சில சமயம் அதில் 'சமஷ்டி' என்ற சொற்பதம் இல்லாமல் இருக்கும். எங்களுக்குச் சொற்பதம் முக்கியம் அல்ல. விடயம் தான் முக்கியம்' – என்று நான் அப்போது அவரையும் வைத்துக் கொண்டு கூறினேன். இப்போதும் அதுதான் நிலைமை.

புதிய அரசமைப்புத் தயாரிப்புக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை தயாராக இருக்கின்றது. எப்போதோ வெளிவந்திருக்க வேண்டிய அது. விரைவில் வெளிவரும். சமஷ்டித் தீர்வை நாம் கைவிடவில்லை. உறுதியாக இருக்கின்றோம் என்பதை அது தெளிவுபடுத்தும்.

**சர்வதேச நீதிமன்றம் ஏன் சரிவராது?**

இங்கு சர்வதேச நீதிமன்றம் ஏன் சரிவராது என்று கேட்டனர். அதற்கு விளக்கமாகப் பதில் கூற விரும்புகிறேன்.

ஒரு விடயத்தைச் சர்வதேச நீதிமன்றில் விசாரிப்பதற்கு நான்கு அடிப்படைத் தேவைப்பாடுகளுள் ஏதேனும் ஒன்று நிறைவு செய்யப்பட வேண்டும்.

முதலாவது –சம்பந்தப்பட்ட தரப்புகள் இது தொடர்பாக 'ரோம்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்க வேண்டும். ஆனால், இலங்கை ஒப்பமிடவில்லை.

இரண்டாவது–சம்பந்தப்பட்ட நாடுதானாக விரும்பி ஏதேனும் ஒரு விடயத் தைச் சர்வதேச நீதிமன்றத்திடம் கொண்டு போக வேண்டும். இலங்கை அதற்குத் தயாராக இல்லை.

மூன்றாவது – சம்பந்தப்பட்ட தரப்பில் ஒன்றைச்சேர்ந்தோரில் எவரேனும் 'ரோம்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிரஜையாக இருப்பின் அவருக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அந்த வகையில் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பாலித கொஹன்னவுக்கு எதிராக மட்டும் நாம் வழக்குத் தாக்கல் செய்யலாம். வெள்ளைக்கொடி விடயத்தில் அவரும் சம்பந்தப்பட்டவர் எனப் பெயர் அடிபடுவதால் அதனை வைத்து வழக்குப் போடலாம்.

நான்காவது – சர்வதேச நீதிமன்றுக்கு இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் மூலம் நகர்த்துவது. அதை நாம் செய்யவில்லை என்பது தான் எம் மீதான குற்றச்சாட்டு.

பாதுகாப்புச் சபை இது போன்ற விடயங்களில் தலையிடுவதாயின் அதற்கு ஒரு வரையறை உண்டு. உலக அமைதிக்கும், சமாதானத்துக்கும் அச்சுறுத்தல் இருக்கும் என்றால் மட்டுமே இது போன்ற விடயத்தில் பாதுகாப்புச் சபை தலையிட்டு, விடயத்தைச் சர்வதேச நீதிமன்றுக்குப் பாரப்படுத்த முடியும்.

இலங்கையில் நடைபெற்ற விடயத்தை அவ்வாறு உலக அமைதிக்கும், சமாதானத்துக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் விவகாரமாக எங்களால் காட்ட முடியாது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் கூட அப்படி இந்த விடயத்தில் – இலங்கை விவகாரத்தால்–உலக சமாதானத்துக்கும், அமைதிக்கும் அச்சுறுத்தல் என்று எம்மால் அர்த்தப்படுத்திக் காட்டியிருக்க முடியாது.

அப்படியிருக்கையில், இப்போது யுத்தம் முடிந்து எட்டு வருடங்கள் கழிந்த நிலையில் எங்களால் அப்படிக் காட்டுவது இயலாத காரியம்.

ஆகவே, பாதுகாப்புச் சபைக்கு இவ்விடயத்தை எடுத்துச் செல்வதற்கான வழிமுறைகள் எல்லாம் அடைபட்டுள்ளன.

சரி, அதையும் மீறி – அந்தத் தடைகளையும் தாண்டி – இந்த விவகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்லலாம் என்று வைத்துக்கொள்வோம்.

பாதுகாப்புச் சபையில் இவ்விடயத்தில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் வீட்டோ செய்துவிடாமல் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். சீனா, ரஷ்யாவை விடுங்கள் அவற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

பாதுகாப்புக் கவுன்ஸிலில் வீட்டோ அதிகாரம் கொண்ட மற்றைய மூன்று நாடுகள் எவை? பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவை. இந்த மூன்று நாடுகளுமே முதலில் இந்தப் பிரச்சினையை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஊடாக நகர்த்தவே முயற்சித்து நிற்கின்றனவே. அதனை உதாசீனம் செய்து, ஒதுக்கி, நாங்கள் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு இதனைக் கொண்டுபோனால் முதலில் இந்த மூன்று நாடுகளும் 'வீட்டோ' செய்து, எம்மை நிராகரிக்கா என்று எப்படிக் கூற முடியும்?

நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு மிகமிக அரிதாக உள்ள ஒரு பொறிமுறைக்கு எடுத்த எடுப்பிலேயே நாம் செல்ல முடியாது. முதலில் சர்வதேசத்துடன் சேர்ந்து ஓடி அவர்களைக் கொண்டே விடயத்தை ஒப்பேற்ற வேண்டும் அதனையே நாம் செய்கின்றோம்." – என்றார். சுமந்திரன். (உ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் பேசப்போகின்ற விடயங்கள் குறித்தும், அவை தொடர்பில் பாதுகாப்பு உயர் பீடத்துக்கு ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன வழங்கவேண்டிய வழிகாட்டல்கள் குறித்தும் இரு தரப்பினரும் பேசிக்கொண்டனர் என அறியவந்தது.

நாளைய நேருக்கு நேர் பேச்சின்போது, வடக்குக் காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற் போனோர் விடயம் ஆகியவை தொடர்பில் திட்டவட்டமான முடிவுகளைப் பெறுவதற்கான எத்தனத்தில் கூட்டமைப்புத் தலைமை ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளைய சந்திப்பில் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோருடன் வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் சி.சிறிதரன், சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது. சித்தார்த்தன் எம்.பிக்கும், சிவசக்தி ஆனந்தன் எம்.பிக்கும் கூட அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. எனினும், அவர்கள் இருவரும் பங்குபற்றுவரா என்பது இன்னும் தெரியவரவில்லை. (உ)

## போராடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள வடமாகாண பட்டதாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அரசு தமக்கு நியமனம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வட மாகாணப் பட்டதாரிகள் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக கடந்த 48 நாள்கள் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.


இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில், இலங்கைச் சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் மனோஜ பெரேரா நேற்று வட மாகாணப் பட்டதாரிகளை அவர்கள் போராடும் இடத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, தமது நியமனம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் உறுதியான வாக்குறுதி எழுத்துமூலம் தந்தால் மாத்திரமே தாம் போராட்டத்தை கைவிடுவார்கள் எனவும் இல்லையேல் கைவிட இயலாது எனப் பட்டதாரிகள் கூறினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட இலங்கைச் சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர்,

போராட்டத்தை கைவிடுங்கள் என நாம் கேட்கவில்லை. நாங்களும் உங்களுடன் இணைந்து போராட்டத்தில் கலந்துகொண்டு இங்குள்ள உண்மைகளை ஜனாதிபதிக்கும் பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கும் தெரியப்படுத்தவே இங்கு வந்து உங்களைச் சந்திக்கின்றோம். – என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் செயலாளர் சதாசிவம் இராமநாதனும் கலந்துகொண்டார். (ம-07)



இயேசு கிறிஸ்து மரித்த தினமான புனித வெள்ளியை நினைவு கூர்ந்து நேற்று முன்தினம் குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தில் ஆராதனை வழிபாட்டின் சில காட்சிகள்.

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவேண்டும் என கல்வி அமைச்சின் அந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 01 இற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவரவுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## குப்பைமேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு கொளுத்தப்பட்ட பட்டாசு வெடியினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்லாம் என்று கருதப்படுகின்றது.

தீ விபத்தை அடுத்து குப்பை மேடு சரிந்து, அருகில் இருந்த வீடுகுளுக்கு மேல் விழுந்தது. அப்பகுதியில் இருந்த 100 வீடுகளில் 40 வீடுகள் இதில் புதைந்து போயின. அவ்வேளை வீடுகளுக்குள் பலர் சிக்கிக் கொண்டனர்.

புதைந்து போன வீடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இலங்கை விமானப்படை உலங்குவானூர்தி ஒன்றும் தீயணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

இந்த விபத்தில் மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட ஆறு பேரின் சடலங்கள் சில மணி நேரத்தில் மீட்கப்பட்டன. 12 பேர் காயமடைந்து தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

(மேலும் விரிவான செய்திகள், படங்கள் 24 ஆம் பக்கத்தில்)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்குத் தாங்கள் தயாராக இருக்கின்றார்கள் என, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

பதவி விலகுவது ஒன்றும் தங்களுக்குப் புதிய விடயம் அல்ல. முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் தாங்கள் பதவிகளைத் துறந்தவர்கள் எனவும், அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றார் எனவும் மாவை. சேனாதிராசா கூறினார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா நேற்று தம்மைச் சந்தித்த ஊடகவியலாளர்கள் சிலரிடம் இந்தக் கருத்துக்களைக் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. ஏனெனில், தங்கள் பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அரசுக்கு வாக்களித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆனால், இந்த அரசாங்கத்தின் செயற்பாட்டில் மக்களுக்கு ஏமாற்றம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

இதனால் விரக்தி அடைந்த மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரித் தாங்களே போராடுகின்றனர். அவர்களின் போராட்டங்கள் பலநாள்களைத் தாண்டி, மாதக் கணக்கில் இடம்பெற்று வருகின்றன.

தங்கள் போராட்டங்களுக்கு தீர்வு கிடைக்காத காரணத்தால் மக்கள் பிரதிநிதிகளைப் பதவி விலகுமாறு கூறியிருக்கின்றனர். எங்களுக்கு பதவிகள் பெரிதல்ல. நாம் பதவி விலகுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமாயின் சர்வதேச சமூகத்துடன் இணைந்து அது தொடர்பான தீர்மானத்தை எடுப்போம். – என்றார்.

மேலும், மக்களுடைய போராட்டம் இனியும் தொடராது. நாம் அரசுடன் பேசிக்கொண்டிருக்கின்றோம். விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் எனவும் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார். (ம)

# மனிதனை மையமாக வைத்தே திட்டம் முன்னெடுக்க வேண்டும்

## பாப்பரசரின் கருத்தை நினைவூட்டினார் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை

மன்னார், ஏப்.16

ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து பரிசுத்த பாப்பரசரை சந்தித்த போது திட்டமிட்டு உலகை ஆள்பவர்களைப் பார்த்து பாப்பரசர் கூறிய வார்த்தை, நீங்கள் திட்டமிடும் போது மனிதனைத்தான் மையமாக வைத்துக் கொள்ள வேண்டும். மனிதனையும் அவர்களின் குடும்பங்களையும் மையமாக வைத்தால்தான் அது நல்ல திட்டமாக இருக்கும் என தெரிவித்திருந்தார்.

அவ்வாறு இங்கும் செயல்பட வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் நில விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நானும் இந்த போராட்டத்துக்குள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். என்னையும் இந்த மக்கள் உள்வாங்கி விட்டார்கள். மறிச்சுக்கட்டி முஸ்லிம் மக்களின் நில விடுவிப்புப் போராட்டத்தில் நான் அங்கு கலந்துகொண்டபின் இங்குள்ள நிலைமைகளை நன்கு அறிந்துள்ளேன். தமிழ் பேசும் மக்கள் அவர்கள் எந்த சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி நாங்கள் சமயத்துக்கு அப்பாற்பட்டு தமிழ் முஸ்லிம் மக்கள் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிலவிடுவிப்புக்காகப் போராட வேண்டும்.



இங்கு மட்டுமல்ல எங்கெங்கலாம் மக்களின் வதிவிடங்கள் பறிக்கப்படுகின்றனவோ இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பிரச்சினை வடக்கு கிழக்குப் பகுதிகளில்தான் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஆனால் வேறு பகுதிகளில் இந்தப் பிரச்சினை இல்லை. ஆகவே, வடக்கு கிழக்கு பகுதிகளில்தான் இந்தப் பிரச்சினை தலைதூக்கி வருவதை நாம் பார்க்கின்றோம்.

மறிச்சுக்கட்டி சம்பந்தமான காணி வர்த்தமானியில் வெளியிட்டு இருப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது சரியான முறையில் அமையவில்லை. ஏனென்றால் மக்கள் குடியிருந்த இடங்களை எல்லாம் இப்பொழுது காடாக காண்பிக்கின்றார்கள்.

ஆகவே, இப்படியான தவறாக வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை உடன் இரத்து செய்ய வேண்டும் அல்லது திருத்த வேண்டும். இங்கு குடியிருந்த மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குக் திரும்ப வேண்டும். தமிழ் முஸ்லிம் மக்கள் பல ஆண்டுகளாகத் துன்பங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். இப்பொழுது தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே உறவு மேம்பட்டு வருகின்றது.

ஆகவே, நாம் இறைவனிடம்கையேந்த வேண்டும் நமக்கு நல்ல தீர்வை இறைவன் பெற்றுத்தர வேண்டும் என்று. நாம் எவ்வாறுதான் போராட்டம் நடத்தினாலும் இறைவனின் பார்வை எம் பக்கம் இருக்க வேண்டும்.

எந்தத் திட்டங்களாக இருந்தாலும் மனிதன் குடும்பம் சமூகம் என்பவைகள்தான் எம் மத்தியில் மையமாக இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் நாங்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுகின்றோம்.

சர்வமதஒன்றியம் வீடு காணிகளை இழந்து நிற்கும் மக்கள் அனைவருக்காகவும் நல்ல எதிர்காலம் அமைய பாடுபடும்.-என்றார்.(ஐ-112)

---

### மூன்று குடும்பங்களுக்கு வீடமைப்பு:
## வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் நிதி ஒதுக்கீட்டில்!



மந்திகை,ஏப்.16

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து வீடுகள் கட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சியின் கரணவாய் தெற்கைச் சேர்ந்த விநாயகம் விஜயராசா,கரணவாய் மேற்கைச் சேர்ந்த இளையதம்பி நிர்மலராசா, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மங்களேஸ்வரி ஆகிய மூன்று பயனாளிகளுக்கு தலா ஆறு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் ரூபா வழங்குவதற்கு வடமாகாண சபை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதற்கான பத்திரத்தை வடமாகாணசபை உறுப்பினர் எஸ். அகிலதாஸ் நேற்றுமுன்தினம் அந்த மக்களிடம் வழங்கியுள்ளார்.

இவ்வேலைத்திட்டம் கரவெட்டி பிரதேச சபையால் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளது.(ஐ-40)

---

## அதிக வருமானம் ஈட்டியுள்ளன 'சதொச' விற்பனை நிலையங்கள்

### கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் தகவல்

சதொச விற்பனை நிலையங்கள் கடந்த ஆண்டு பண்டிகைக் காலத்தில் ஈட்டிக் கொண்ட வருமானத்தை விட அதிக வருமானத்தை இந்த முறை ஈட்டியுள்ளன என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த முறை பண்டிகைக் காலத்தின் இதுவரையான காலத்தில் சதொச விற்பனை நிலையத்தின் வருமானம் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

வவுனியா, சுதுவென்பிளவு பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட 'சதொச' விற்பனை நிலையங்கள் ஊடாக நிவாரண விலையில் 10 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருள் பொதிகள் வழங்கும் வேலைத் திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேலும் கூறினார். (ஐ)

---

# அம்பாந்தோட்டை சீனாவுக்கா? அமெரிக்கா, ஜப்பான் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப்.16

அம்பாந்தோட்டை துறைமுகத்தை முதலீட்டுக்காக சீனாவுக்கு வழங்குவதற்கு இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என்று இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏதோ ஒரு வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டு அங்கு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், துறைமுகத்தின் முழுமையான கட்டுப்பாடு, பாதுகாப்பு, உட்புகுதல், வெளியேறுதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று இந்த நாடுகள் இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளன.

சீனா இதற்கு முன்னர் பாகிஸ்தானின் கவ்டார் துறைமுகத்தில் இப்படியான முதலீடு ஒன்றைச் செய்துள்ளது.

இது பிராந்திய பாதுகாப்பு பலம் தொடர்பான சமநிலைக்கு பெரியதோர் தடையாக இருப்பதன் காரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதை அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் எதிர்த்துள்ளன என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தியில் முதலீடு களை செய்யுமாறு அரசு, இந்தியாவுக்கும் ஜப்பானுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் உள்ள எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு தொடர்ந்தும் வழங்கவும் அரசு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

---

## ஷார்ஜாவில் பெண் ஒருவரை கொன்ற இலங்கையர் கைது!

டுபாயில் பெண்ணொருவரை கத்தியால் குத்திக் கொலை செய்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஷார்ஜா நகரில் வசிக்கும் 28 வயது இலங்கை பெண் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்தமை தொடர்பில் 38 வயதுடைய இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இடம் பெற்று 8 மணித்தியாலங்களுக்குள் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஷார்ஜா ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஷார்ஜா பொலிஸாருக்கு கிடைத்த தொலைபேசி தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பாதுகாப்புக் குழு பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளது.

இந்தக் குழுவில் தடயவியல் வல்லுநர்கள், அம்புலன்ஸ், குற்றவியல் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ரோந்து துறையின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். அந்தக் குழுவினர் பெண்ணின் உடலை கண்டுபிடித்துள்ள நிலையில், விரல் அடையாளங்கள் மற்றும் பிற ஆதாரங்களையும் பெற்றுக் கொண்டு பிரேத பரிசோதனைக்காக உடலை ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குற்றவாளியை கைது செய்வதற்காக குற்றப் புலனாய்வு பிரிவினர் குழுவொன்றையும் நியமித்திருந்தனர். அந்த குழுவின் விசாரணைக்கமைய சம்பவம் இடம் பெற்று 8 மணித்தியாலங்களுக்குள் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணுடன் சந்தேகநபர் தவறான தொடர்பு வைத்திருந்தார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. எனினும் கொலைக்கான காரணம் இன்னமும் வெளியாகவில்லை. பிரஸ்தாப குறித்தநபர் கொலை குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

---

## கட்டுரைக்கு வருத்தம் தெரிவிக்கிறது கரைச்சி பிரதேச சபை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தால் 'கரை எழில்' 2016 நூலில் 'கிளிநொச்சியும் மலையக தமிழர்களும்' எனும் தலைப்பில் வெளியான கட்டுரை தொடர்பில் சமூகத்தில் கிளம்பிய எதிர்ப்புக் காரணமாக கரைச்சிக் கலாசாரப் பேரவை தலைவரும், பிரதேசசெயலாளருமான கோ. நாகேஸ்வரன் ஒப்பம் இட்டு வெளியிடப்பட்டுள்ள குறிப்பில்,

'கிளிநொச்சியும் மலையக தமிழர்களும்' எனும் தலைப்பில் வெளியான கட்டுரை அச்சமூகம் கவலையுறும் விதத்தில் இடம்பெற்றுவிட்டது. இதனையிட்டு கலாசாரப் பேரவை வருத்தமடைகிறது. கலாசார விழாவின் போது வழங்கப்பட்ட 15 பிரதிகளும் திரும்பப் பெறப்பட்டு ஒட்டுமொத்தப் பிரதிகளிலும் சர்ச்சைக்குரிய கட்டுரை நீக்கம் செய்யப்பட்டு வெளியீடு செய்யப்படும் .- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-70)

## 2 கோடி பெறுமதிமிக்க ஹெரோயினுடன் கட்டுநாயக்காவில் ஈரான் பிரஜை கைது!

### விமான நிலையத்தில் மறைந்திருந்த வேளையில்!!

சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் நாட்டுக்கு வந்த ஈரான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி போதைப் பொருள் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு டுபாயில் இருந்து புறப்பட்ட ஈ.கே. 648 என்ற விமானத்தில் இலங்கைக்குவந்த மேற்படி சந்தேக நபர் நேற்றுக் காலைவரை விமான நிலையத்தில் மறைந்து இருந்தார் எனக் கூறப் படுகின்றது.

சுங்க திணைக்கள அதிகாரிகள் அவர் மீது சந்தேகமடைந்து அவரைச் சோதனைக்கு உட் படுத்தினர். இதன்போதே ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகநபரிடம்விமான நிலைய சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் விசாரணையின் முடிவில், அவர் பொலிஸ்போதைத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் படுவார் எனவும் சுங்க ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹநதவ கூறினார். (ம)




# குப்பைமேடு விரைவில் அகற்றப்படும்; நிவாரணம் வழங்கப்படும் – ரணில்





கொலன்னாவை மீதொட்டமுல்ல குப்பைமேட்டை அகற்றும் பொறுப்பை அரசு கூடிய விரைவில் நிறைவேற்றுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் குப்பைமேட்டை அகற்றுவதற்கு தேவையான திட்டத்தை வகுத்துநடைமுறைப் படுத்துவதற்கு முன்னரே இவ்வாறான விபத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டமை கவலைக் குரிய விடயமாகும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த குடும்ப உறுப்பினர்களுக்கும், இருப்பிடங்களை இழந்தோருக்கும், அரசாங்கம் தனது கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் விரைவில் நிவாரணம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

### இடர் முகாமைத்துவ அமைச்சர் யாப்பா

மீதொடமுல்ல குப்பைமேடு சம்பந்தமாக நீண்டகாலமாக பேசப்பட்டு வந்தபோதிலும், அதற்குமுறையானதீர்வொன்று பெறப்படாதுள்ளமைக்கான காரணங்கள் கண்டறியப்படவில்லை என இடர்முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்சனயாப்பாகுறிப்பிட்டுள்ளார்.

மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுகாதாரமான முறையில் குப்பைகளைக் கொட்டும் இடம் ஒன்றைஅமைப்பதேஇதற்கான தீர்வாகும். கொரிய நாட்டின் உதவியுடன் தொம்பே பிரதேசத்தில் இது போன்ற ஒரு இடம் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இது குறித்து இதுவரை ஏன் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரியவில்லை.

எவ்வாறாயினும்நாடுமுழுவதும் இது போன்ற ஐந்து குப்பை கொட்டும்இடங்களை அமைப்பதற்குமுன்னர்திட்டமிடப்பட்டிருந்தது எனவும் ஆனால் அது ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று எனக்குத் தெரியாது என்றும் அமைச்சர்மேலும்தெரிவித்துள்ளார்.

### அரசே பொறுப்பு என்கிறது ஜே.வி.பி.

மீதொட்டுமுல்ல பிரதேசத்தில் குப்பை மேடு சரிந்ததில் ஏற்பட்ட விபத்து இயற்கையான விபத்தல்ல எனவும் அதற்கு ஆட்சியில் இருந்த அரசுகள் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

மீதொட்டமுல்லவில் அனர்த்தத்திற்கு உள்ளானவர்கள் சம்பந்தமாக அரசு துரிதமாக நடவடிக்கைகளைஎடுக்கவேண்டும் என வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளது.

நாட்டில் இதற்கு முன்னர் மலைகளில் மண்சரிவு ஏற்பட்டது. தற்போது குப்பை மலை சரிய ஆரம்பித்துள்ளது. சரிந்து விழும் அளவுக்கு குப்பைகள் மலை போல் குவிந்து வருகின்றன. வாழ்வதற்கு இடமில்லாத அவற்றுக்கு அருகில் வாழும் அப்பாவிமக்கள்மீதுஇந்தகுப்பை மலைகள் சரிந்து விழுகின்றன.

உலகில்பலநாடுகள் குப்பைகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தி அவற்றை வளமாக மாற்றி வரும் நிலையில், இலங்கையில் குப்பை அனர்த்தமாக மாறியுள்ளது. குப்பைகளை முகாமைத்துவம் செய்ய நாட்டில் இருந்த அரசு தவறியமை காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் விடுதலை முன்னணி கூறியுள்ளது.

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும்

72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536